வாராந்த சஞ்சிகை

சுடர் ஒளி

மே 06 - 12, 2015

பக்கம் 24

விலை 30/-

வடக்கைக் கலக்கும் வாள் வெட்டுக்கள்

17 FOLLOW US www.mobitel.lk
ஒவ்வொரு நிமிடத்தையும் கொண்டாடுங்கள்
CASH BONANZA
ஒவ்வொரு ரூ.50 இற்கும் ஒரு வெற்றி வாய்ப்பு
ரூ.230 மில்லியனுக்கான பிரம்மாண்டமான
மொபைல் கேஷ் கொடுப்பனவு
Sri Lanka Telecom
Mobitel
TRC/PR/02/01/MOB/14-44
வெற்றி வாய்ப்புகளை அறிந்து கொள்ள அழையுங்கள் #151#

Digitized by Noolaham Foundation.
http://noolaham.org/pasavanaham.org

சினிர்த்து நிற்கும் சிங்கப்பூர் 3

சிங்கப்பூரைத் தன் வசம் கொண்டிருந்த பிரிட்டன் ஜப்பானிடம் சரணடைந்தது. தாக்குதலை நிறுத்த வேண்டுமா? அப்படியானால் இதோ என் நிபந்தனைகள் என்று பட்டியல் போட்டது ஜப்பான். அதில் முக்கியமானது இது.

ஜப்பானியர்கள் ஆக்கிரமித்தவுடன் சிங்கப்பூர் பெயர் மாற்றம் பெற்றது. புதிய பெயர் ஷோநான்டோ. சிங்கப்பூரை யோனன் என்று செல்லமாகவும் ஜப்பானியர்கள் அழைத்தார்கள். தெற்கின் ஜோதி என்பது அதன் அர்த்தம். சிங்கப்பூரின் மகத்துவத்தை ஜப்பானியர்கள் உணர்ந்தனர். ஆனால் அவர்கள் ஆட்சி கொடுங்கோல் ஆட்சியாகவே அமைந்தது. சிங்கப்பூரில் வசித்த ஆயிரக்கணக்கான சீனர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பிரிட்டனுக்கும் ஜப்பானுக்கும் 1945இல் மீண்டும் ஒரு போர். இந்த முறை ஜப்பான் சரணடைந்தது. பிரிட்டிஷ் இராணுவம் அந்த ஆண்டு செப்டம்பர் ஐந்தில் சிங்கப்பூரில் நுழைந்தது.

சிங்கப்பூரிலுள்ள தனது அத்தனை இராணுவத்தினரையும் இராணுவத் தளவாடங்களையும் பிரிட்டன் தங்களிடம் ஒப்படைத்துவிட வேண்டும். கப்பல்கள், விமானங்கள், இரகசிய ஆவணங்கள் எல்லாமே இவற்றில் அடக்கம். வேறு வழியின்றி பிரிட்டன் ஒப்புக் கொண்டது.

ஜப்பானியர்கள் ஆக்கிரமித்தவுடன் சிங்கப்பூரின் பெயர் மாற்றம் பெற்றது. புதிய பெயர் ஷோநான்டோ. சிங்கப்பூரை யோனன் என்று செல்லமாகவும் ஜப்பானியர்கள் அழைத்தார்கள். தெற்கின் ஜோதி என்பது இதன் அர்த்தம். சிங்கப்பூரின் மகத்துவத்தை ஜப்பானியர்கள் உணர்ந்தனர். ஆனால் அவர்கள் ஆட்சி கொடுங்கோல் ஆட்சியாகத்தான் இருந்தது. சிங்கப்பூரில் வசித்த ஆயிரக்கணக்கான சீனர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பிரிட்டனுக்கும் ஜப்பானுக்கும் 1945இல் மீண்டும் ஒரு போர். இந்த முறை ஜப்பான் சரணடைந்தது. பிரிட்டிஷ் இராணுவம் அந்த ஆண்டு செப்டம்பர் 5 அன்று சிங்கப்பூரில் நுழைந்தது.

அதற்குப் பிறகு சுதந்திரத்தை நோக்கி சிங்கப்பூர் முன்னேறியது!

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு பிரிட்டனின் பலம் குறைந்து விட்டதாக சிங்கப்பூர்வாசிகள் கருதினார்கள். எனவே சுயாட்சி வேண்டுமென்று வலுத்துக் குரல் கொடுக்கத் தொடங்கினர். சுயாட்சி (சுதந்திரம் அல்ல) கிடைத்தது. 1946இல் மலேயா பகுதியிலிருந்து சிங்கப்பூர் பிரிக்கப்பட்டு பிரிட்டனால் ஆட்சி செய்யப்பட்டது.

(இந்த இடத்தில் மலேயா, மலேசியா ஆகியவற்றுக்கிடையே உள்ள வித்தியாசத்தைச் சற்று தெளிவுபடுத்திக் கொள்வோம். 1963 செப்டம்பர் 16 வரை பிரிட்டன்வசம் இருந்த மலாய் தீபகற்பம் மலேயா என்று அழைக்கப்பட்டது. 1963இல் பிரிட்டனின் பிடியிலிருந்து விடுபட்டதும் அது மலேசியா என்று பெயர் சூட்டிக் கொண்டது. அப்போது சிங்கப்பூரும் அதன் ஒரு பகுதி).

1954இல் சிங்கப்பூரில் \ Â ï Peoples Action Party) உருவானது. அன்றிலிருந்து இன்றுவரை சிங்கப்பூர் அரசியலில் அது ஒரு தவிர்க்க முடியாத சக்தி. 1955இல் புதிய அரசியலமைப்புச் சட்டம் உருவானது. தொடர்ந்து இரு வருடங்களில் நடைபெற்ற தேர்தலில் 51 தொகுதிகளில் 43இல் மக்கள் செயல் கட்சி வென்றது. இதை வழி நடத்திய லீ குவான் யூ அந்த நாட்டின் தலைவரானார்.

1963 செப்ரெம்பர் 16 அன்று பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுபட்டவுடன் மலேசியாவுடன் மீண்டும் சேர்ந்து கொண்டது சிங்கப்பூர். அப்போது மலேயா, சபா, சரவக், சிங்கப்பூர் ஆகிய நான்கும் இணைந்து மலேசியா என்ற பொதுப் பெயரில் புதிய எல்லைகள் கொண்ட நாடாக உருவானது. ஆனால் அந்த இணைப்பு குறைந்த ஆயுள் கொண்டதாக இருந்தது. மீண்டும் தனி நாடாக வேண்டிய கட்டாயம் சிங்கப்பூருக்கு ஏற்பட்டது.

ஒரு நாடு சுதந்திரம் பெற்றது என்றால் அங்கு அதற்குமுன் என்ன நடந்திருக்கும்? அடக்குமுறை, அதைத் தொடர்ந்து கொஞ்சம் கொஞ்சமாக வலிமை பெற்று வந்த சுதந்திர இயக்கங்கள், தனக்குக் கீழ்தான் இருக்க வேண்டுமென்று ஆட்சியில் உள்ளவர்களின் அதிகாரம், சுதந்திரமெல்லாம் கொடுக்கமாட்டேன் ஆனதைப் பார்த்துக் கொள் என்ற ஆட்சியாளர்களின் திமிர், பிறகு வேறுவழியில்லாமல் ஒரு கட்டத்தில் வேண்டாவெறுப்பாக சுதந்திரம் அளித்தல் - இவைதானே நமக்குத் தெரிந்த செயல்முறை? ஆனால் மலேசியா - சிங்கப்பூர் விஷயத்தில் நடந்ததே வேறு.

நீ தனியாகப் போ என்று மலேசியா குரல் கொடுக்க, ஐயோ எங்களை உங்களோடு இருக்க விடுங்கள்என்று சிங்கப்பூர் கெஞ்ச, நடந்தது பிரிவினை அல்ல. வெளியேற்றம்.

பின்னணி இதுதான். சிங்கப்பூர் இணைந்தபிறகு மலேசியா அதைக் கொஞ்சம் ஓரவஞ்சனையாகவே நடத்தியது. இணைப்பு காரணமாக பல இன மக்கள் வசித்த நாடாக மலேசியா மாறியது. ஆனால் மலாய் இன மக்களுக்கு பலவற்றிலும் முன்னுரிமை அளிக்கப்பட்டது. சிங்கப்பூரில் அதிகமாக வசித்த சீனர்கள் தாங்களும் பிறரோடு சமமாக நடத்தப்பட வேண்டும் என்று கொடிபிடித்தனர்.

தவிர சிங்கப்பூரிலிருந்து மலேசியாவுக்குச் செல்லும் பொருட்களுக்கு வரி விதிக்கப்பட்டது. இதை சிங்கப்பூர் எதிர்க்கத் தொடங்கியது.

1964இல் இனக் கலவரங்கள் நடைபெற்றன. முகமது நபிகளின் பிறந்த நாளன்று சிங்கப்பூரிலுள்ள பதாங் என்ற பகுதியிலிருந்து கோலாங் என்ற பகுதியை நோக்கி ஓர் ஊர்வலம் சென்று கொண்டு இருந்தது. அதிலிருந்து ஒரு குழு தனியாகப் பிரிந்து செல்ல, காவல் துறையினர் அவர்களை ஒழுங்குபடுத்த முயற்சித்தனர். இதற்கு ஒத்துழைக்காததோடு, பிரிந்து சென்றவர்கள் காவல்துறையினரைத் தாக்கவும் செய்தார்கள். இந்தத் தாக்குதலில், வீதியில் நடந்து கொண்டு இருந்த சீன இனத்தவர் மீதும் அடிகள் விழ, வெடித்தது கலவரம். சட்டம், ஒழுங்குப் பிரச்னை இன, மதக் கலவரமாகப் பரிணாமம் பெற்றது.

அவசர அவசரமாக நல்லெண்ணக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. பலனில்லை. மூன்றே மாதங்களில் மீண்டும் கலவரம். பின்னணியில் தூண்டிவிடும் சக்திகள் இந்தோனேஷியாவும், கம்யூனிஸ்ட்களும்தான் என்று கருதினார் மலேசிய துணைப் பிரதமர் டுன் அப்துல் ரஸாக். தவிர, ஏற்கனவே ஆட்சியாளர்களிடையே வேறு சில சந்தேக விதைகளும் முளைவிட்டிருந்தன. (இன்னும் வரும்..)

1945 இல் பிரிட்டன் – ஜப்பானுக்கு இடையே நடைபெற்ற போரை சித்தரிக்கும் வகையில் சிங்கப்பூரின் சாங்கி பகுதியில் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு தத்ரூபமாக வடிவமைக்கப்பட்டுள்ள வீரர்களின் சிலைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கைக் கலக்கும் வாள் வெட்டுக்கள்

- ஆசாத்

அண்மைக்காலமாக வட பகுதியில் அடுத்தடுத்து இடம்பெற்று வரும் வாள் வெட்டு மோதல்களும் அதனால் ஏற்படும் இரத்தக் களறியும் வடபகுதி மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்குவதுடன் ஒரு பயங்கர சூழலையும் ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக ஒரு இசைக்கச்சேரியைப் பார்க்கச் சென்ற யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மேல் நடத்தப்பட்ட சரமாரியான வாள் வெட்டு தாக்குதலில், ஒரு மாணவன் தன் கையை இழந்துள்ளான். இன்னொரு மாணவன் உடலெங்கும் வெட்டுக்காயங்களுடன் யாழ் போதனா மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். அதை விட ஐந்து மாணவர்கள் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிகிறது.

எனினும் இந்தக் கோரத் தாண்டவம் யாரால் நடத்தப்பட்டது என்பதோ, ஏன் நடத்தப்பட்டது என்பதோ இது வரை வெளிவரவில்லை. எனினும் வாள் வெட்டை நடத்திய வீரர்களில் ஒருவன், ஒரு மாணவனுக்கு அருகில் வந்து முகத்தைப் பார்த்து விட்டு " இது நாங்கள் எதிர்பார்த்த பாட்டி இல்லை?" எனக் கூறியதும் வாள் வீரர்கள் அந்த இடத்தை விட்டு அகன்று விட்டதாகவும் தெரிய வந்துள்ளது. எதிரிகளை சரியாக அடையாளம் காண முன்பே இது இரத்தம் குடிக்கும் அவசரத்துக்கு அப்பாவி மாணவர்கள் இரையாக்கப்பட்டு விட்டனர். எப்படியிருப்பினும் அந்த வாள்கள் இந்தப் பகுதியில் அலைகிறவை என்பது மட்டும் உறுதியாகியுள்ளது.

ஆனால் இது வரை இந்தச் சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகப் பத்திரிகைச் செய்திகள் மட்டும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இப்படியான நிலையில் பல்கலைக் கழக கலைப்பீட மாணவர்கள், இந்தப் பயங்கரவாதத்துக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கும்படி கோரி போராட்டத்தில் இறங்கியுள்ளனர். தற்சமயம் குறிப்பிட்ட சில நாள்களுக்கு வகுப்புக் களைப் பகிஷ்கரித்து நடத்தப்படும் போராட்டத்துக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் போராட்டம் அடுத்த கட்டத்துக்கு விரிவாக்கப்படும் என மாணவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இங்கு போராட்டத்தில் முன் நின்று செய்றபடும் மாணவர்களுக்கும், வாள் வெட்டு விழுந்து விடுமோ என்ற அச்சம் எமது மக்கள் மத்தியில் நிலவுவதை குறிப்பிடாமல் விட முடியாது. ஏனெனில் வடக்கில் தனிமனிதப் பாதுகாப்பு என் பதே அவ்வளவு தூரம் கேள்விக்குள் ளாக்கப்பட்டுள்ள நிலையே நிலவுகிறது.

இந்த வாள் வெட்டுத் தாண்டவத்தில் சிந்தப்பட்ட இரத்தம் காய்ந்து விட முன்பே, சுன்னாகத்தில் இடம்பெற்ற இரு குழுக்களுக்கிடையேயான மோதலில் வாள்கள், போத்தல்கள் என்பன தாராளமாகப் பயன்படுத்தப் பட்டன. பொலிஸார் இது தொடர்பாக நான்கு பேரை வாள்களுடனும் கைது செய்துள்ளனர். இன்னும் சிலரைத் தேடி வருகின்றனர்.

இவையெல்லாவற்றையும் நாம் தனித்தனிச் சம்பவங்களாகப் பார்த்து விட முடியாது. ஏனெனில் கடந்த பல மாதங்களாகவே அடுத்தடுத்து வாள் வெட்டு மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. உணவு விடுதிக்குள் புகுந்து வெட்டுதல் என வாள் வெட்டுகள் பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து வருகின்றன.

இப்படியான சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருந்த போதிலும் கடந்த காலங்களில் இவை தொடர்பாக கைது செய்யப்பட்டு பலர் பிணையில் விடுவிக்கப்பட்டுமுள்ளனர். ஒரு காலத்தில் ரெட்குழு, தீனாகுழு, ஆவா குழு எனப் பெயரில் வைத்து இயங்குமளவுக்கு அவர்களுக்கு ஒரு விதமான சுதந்திரம் கிடைக்கிறது. இப்போது இந்தப் பெயர்கள் காணமல் போய் விட்டாலும் வாள் வெட்டுக்கள் மட்டும் அதே பாணியில் தொடர்கின்றன.

இவர்கள் சுயமாக இயங்குகிறார்களா அல்லது அரசியல் உள் நோக்கம் கொண்ட சக்திகளால் தமிழ் மக்களை ஒரு அச்சமான சூழ்நிலைக்குள் வைத்திருக்க திட்டமிட்ட வகையில் அவர்கள் இயக்கப்படுகின்றனரா என்ற கேள்வி எழத்தான் செய்கிறது. பொலிஸாரும் இவர்கள் மேல் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க முடியாமல் சில அதிகாரச் சக்திகளால் கட்டுப்படுத்தப்படுகின்றனரா என்ற சந்தேகமும் கூட மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

அப்படியான சந்தேகங்கள் எழக் காரணம் இல்லை எனவும் சொல்லி விட முடியாது.

வட பகுதியில் கட்டவிழ்த்து விடப்படும் அச்சமூட்டும் பயங்கரச் சூழல் என் பது, இப்போது தான் முதல் தடவையல்ல.

1996ஆம் ஆண்டு யாழ். குடா நாடு முழுமையாக இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட பின்பு ஒரு புதிய வெள்ளை வான் கலாசாரம் உருவாகியது. வெள்ளை வான்களில் வருவோரால் கடத்தப்படுபவர்களை உறவினர் இராணுவ முகாம்கள் உட்பட எங்கு தேடியும் கண்டு பிடிக்க முடியவில்லை. பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு பின்பு கொலை செய்யப்படும் சம்பவங்களும் இடம்பெற்றன. எப்போது எவர் கடத்தப்படுவார், எவர் கொல்லப்படுவார், எந்தப் பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுவார் என்பது தெரிந்திராத ஒரு பயங்கர சூழ் நிலை நிலவியது.

2006 ஆண்டை அடுத்த காலப்பகுதியில் ஆட்கடத்தல் மட்டுமன்றி விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் எனக் கருதப்பட்டவர்கள் வீட்டு முற்றங்களிலும், வீதியோரங்களிலும் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டு வீசப்பட்டனர். இராணுவப் புலனாய்வு ப் பிரிவினரும் , துணை இராணுவக் குழுக்களுமே அப்படியான கொடூரங்களில் ஈடுபட்டதாகக் கருதப்பட்டது. எனினும் அவற்றைத் தடுத்து நிறுத்த எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

2009 இல் போர் முடிவுக்குக் கொண்டு வரப்படும் யாழ். குடா நாட்டில் சிறுவர் சிறுமியர் கடத்தப்படும் ஒரு பயங்கரம் ஆரம்பமானது. பிள்ளைகளைத் தனியாகப் பாடசாலைக்கு அனுப்பவே பெற்றோர் அஞ்சும் நிலை ஏற்பட்டது.

அடுத்து சங்கானை பூசகர் கொலைகளில் ஆரம்பித்து தொடர்ந்து கொலைகள் இடம்பெற ஆரம்பித்துள்ளன. அதே வேளையில் கொள்ளைகளும் கொள்ளைகளுக்கான கொலைகளும் இடம்பெற்றன.

அது ஒருவாறு ஓய்வுக்கு வர "கிறீஸ் பூதங்கள்" களத்தில் இறங்கின. எங்கும் கீறிஸ் பூதங்கள் பற்றிய பயம் பரவியது. இந்தக் கிறீஸ் பூதங்களைப் பிடிக்க முயன்றவர்கள் கைது செய்யப்பட்ட வரலாறும் உண்டு.

அதை அடுத்து வாள் வெட்டுக் குழுக்கள் களத்தில் இறங்கின. தீனா, ஆவா என வெவ்வேறு குழுக்கள் முளைத்தன. வாள் வெட்டுக்களில் சந்திகளில் இரத்தம் பெருக்கெடுத்தது.

தற்சமயம் குழுக்களில் பெயர்கள் காணாமற் போய் விட்டாலும் வாள் வெட்டு என்பது ஒரு இயல்பான விடயம் போன்று எங்கும் பரந்து விட்டது.

இப்படியாக அச்சமூட்டும் குழுக்களும் நபர்களும் ஒரு பெரும் பயங்கரத்தைக் கொண்டிருந்த போதிலும், இவை தொடர்பாக எவரும் கைது செய்து தண்டிக்கப்படவில்லை. தவிர்க்க முடியாமல் கைது செய்யப்படுபவர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டு விடுகின்றனர்.

எனவே தான் இந்த வாள் வெட்டுக் குழுக்களின் பின்னால் சில அரசியல் நோக்கம் கொண்ட சூத்திரதாரிகள் செயற்படுகின்றனரா என்ற கேள்வி எழுகிறது. மேலும் கூலிக்குக் கொலை செய்யும் கூட்டங்களும் உருவாகி வருகின்றனவா என்ற அச்சமும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

ஒரு நல்லாட்சி நிலவுவதாகச் சொல்லப்படும் இந்த நாள்களிலும், இது தொடர்வது தமிழ் மக்களை நம்பிக்கை இழக்கவே வைத்துள்ளது. எனவே தான் இந்தக் கொடூரங்களுக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டங்களில் இறங்கியுள்ளனர்.

இப்படியான சட்ட விரோத நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்படா விட்டால் மாணவர் போராட்டம், மக்கள் போராட்டமாக விரிவடைவது தவிர்க்கப்பட முடியாததாகி விடும்.

இவர்கள் சுயமாக இயங்குகிறார்களா அல்லது அரசியல் உள் நோக்கம் கொண்ட சக்திகளால் தமிழ் மக்களை ஒரு அச்சமான சூழ்நிலைக்குள் வைத் திருக்க திட்டமிட்ட வகையில் அவர்கள் இயக்கப் படுகின்றனரா என்ற கேள்வி எழுத்தான் செய்கிறது. பொலிஸாரும் இவர்கள் மேல் கடுமையான நட வடிக்கைகளை எடுக்க முடியாமல் சில அதிகாரச் சக்திகளால் கட்டுப்படுத்தப்படுகின்றனரா என்ற சந்தேகமும் கூட மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேறியது 19 அடுத்தது என்ன?

மாற்றம்

சந்தேகத்துடன் எதிர்பார்க்கப்பட்ட 19ஆவது திருத்தச் சட்டம் எதிர்பார்ப்புக்களை பொய்ப்பிக்கும் வகையில் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றி ருக்கிறது. ஆரம்பத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான் மையை பெறுவதே கடினமென்று எதிர்பார்க்கப்பட்டி ருந்த நிலையில், 212 வாக்குகளால் 19ஆவது திருத்தச் சட்டம் நிறைவேறியிருப்பது அனைவராலும் ஆச்சரிய மாகப் பார்க்கக் கூடிய ஒன்றே. ஆனால், வெளியில் வியப்பாக பார்க்கப்படுவது போன்று அவ்வளவு எளிதாக மேற்படி திருத்தம் நிறைவேறிவிடவில்லை. பல்வேறு சமரசங்கள் இடம்பெற்றிருக்கின்றன. ஆனாலும், ஒரு சில முன்னேற்றகரமான விடயங்களும் மேற்படி சட்டத்திருத்தின் மூலம் நிகழ்ந்திருக்கிறது என்பதை மறுக்கமுடியாது. அதில் முக்கியமானது, சுயாதீன ஆணைக் குழுக்களை நியமிப்பதற்கான இணக்கப்பாடு. மற்றையது, தகவல் அறியும் உரிமை ஆகியவற்றை முக்கியமாகக் குறிப்பிடலாம். தவிர, மஹிந்த ராஜபக்ஷவினால் கொண்டுவரப்பட்ட பல விடயங்கள் 19ஆவதின் மூலமாக வலுவிழக்கச் செய்யப்பட்டிருக் கிறது. இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. 19ஆவது திருத்தச் சட்டத்தின் வாயிலாக அமுலுக்கு வந்திருக்கும் பல விடயங்கள் மாற்றங்களாக இருப்பினும் அவை தொடர்ந்தும் மாற்றங்களா இருக்குமா அல்லது தற்காலிக மானதொரு மாற்றமாக இருக்குமா என்பதெல்லாம் மத்தியில் யார் ஆட்சியில் இருக்கின்றார் என்பதை பொறுத்தே அமைந்திருக்கும். ஏனெனில், வரலாற்று போக்கில் தெற்கில் உருவாகும் சிங்களத் தலைவர் ஒருவர், எதிர்காலத்திலும் தற்போது ஏற்படுத்திக்கொண்ட இணக்கத்தை உடைக்க முடியும். எனவே, சிங்களவர் களை பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும் இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களின் விவகாரம் எப்போதுமே ஒரு ஊசலாடும் விவகாரம்தான்.

ஆனால், 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் ஜனாதிபதி மைத்திரிபால தனக்கு முன்னாலிருந்த பிரதான சவாலொன்றை வெற்றி கொண்டிருக்கிறார். ஜக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இந்த வெற்றியை கொண்டே எதிர்வரும் தேர்தலை எதிர்கொள்ளும். ஆனால், இந்த இடத்தில் இடைமறிக்கும் கேள்வி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதனை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளப் போகிறது? எந்த கோஷத்துடன் தமிழ் மக்களை எதிர்கொள்ளப் போகிறது? நாங்களும் தேசிய அரசில் இணைந்து அமைச்சுப் பொறுப்புக்களை பெறப் போகின்றோம் என்பதையா? அண்மைக்காலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதனை நோக்கி பயணிக்கிறது என்பது மக்களுக்கு விளங்காவிட்டாலும் கூட அதனை விட்டுவிடலாம். பெரிய விடயங்கள் பாமர மக்கள் விளங்கிக்கொள்வது கொஞ்சம் கடினமானது தானே என்று சமாதானம் சொல்லிக் கொள்ளலாம். ஆனால், அது கூட்டமைப்பிலுள்ளவர்களுக்கே விளங்கவில்லை என்பதுதானே பிரச்சினை. ஏனெனில், கூட்டமைப்பின் சார்பில் அனைத்து விடயங்களும் தற்போது சம்பந்தன் மற்றும் சுமந்திரனால் மட்டுமே முன்னெடுக்கப்படுகின்றன. ஆட்சி மாற்றத்திற்கான கூட்டமைப்பின் ஆதரவிலிருந்து ஆட்சி மாற்றத்தின் பின்னர் இடம்பெற்ற அனைத்து விடயங்களும் கூட்டமைப்பின் இருவர் நிலைப்பட்டதாகவே இருக்கிறது. கூட்டமைப்பில் பெரிய கட்சியாக தங்களை அடையாளப்படுத்தும் இலங்கை தமிழரசு கட்சி ஒரு வழியிலும் மற்றவர்கள் அந்த வழியில் செல்ல முடியாமலும், அதேவேளை செல்ல முடியவில்லை என்பதை மக்களுக்குச் சொல்ல முடியாமலும் தடுமாறிக் கொண்டிருக்கிற ஒரு நிலையில்தான் கூட்டமைப்பு இருக்கிறது. அண்மையில் தந்தை செல்வாவின் நினைவுதின நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க நினைவுப் பேருரை நிகழ்த்தியிருந்தார். இலங்கையை இரண்டு தடவைகள் ஆட்சிசெய்து ஓய்வுபெற்ற சந்திரிக்கா, 2014இல் மீண்டும் கட்சியரசியலுக்குள் தலையீடு செய்தார். மஹிந்தவின் எழுச்சியை தொடர்ந்து அரசியலிலிருந்து முற்றிலுமாக ஓரங்கட்டப்பட்ட சந்திரிக்கா மீண்டும் மஹிந்தவை வீழ்த்த வேண்டும் என்னும் ஒரே நோக்கில் அரசியலுக்குள் பிரவேசித்தார். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் அவரது பழைய தமிழ் நட்புகள் மீளவும் புத்துயிர் பெற்றன. சந்திரிக்கா சம்பந்தன் தனிப்பட்ட நட்பு அனைவரும் அறிந்ததே! இவ்வாறானதொரு சூழலில்தான் சந்திரிக்கா தந்தை செல்வாவின் நினைவு நிகழ்வில் பேருரை ஆற்றுமளவிற்கு தமிழ் மக்களுக்குச் நெருக்கமான ஒருவராகக் காண்பிக்கப்படுகின்றார். அரசியல் ரீதியில் மக்களின் தேவை கருதி சந்திரிக்கா அல்லது எந்தவொரு சிங்களத் தலைவருடன் உரையாடுவதும் தவறானதல்ல. அது அவசியமானதும் கூட. ஆனால், இங்கு மக்களின் தேவையிலிருந்து இவ்வாறான முடிவுகள் எடுக்கப்படுகின்றனவா அல்லது தங்களின் தனிப்பட்ட நலன்களிலிருந்தா என்பதுதான் கேள்வி.

நான் மேலே குறிப்பிட்டவாறு தமிழரசு கட்சி ஒரு வழியிலும், ஏனையவர் எந்த வழியில் செல்வதென்று தெரியாமலும் இருக்கின்ற நிலைமைக்கு மேற்படி நிகழ்வு ஒரு நல்ல உதாரணமாகும். இந்த நிகழ்விற்கு சென்றிருந்த எனது ஊடக நண்பர் ஒருவரிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். அவர் பின்வருமாறு பதிலளித்தார், மாவை சேனாதிராஜா முன்னர் எவ்வாறு பிரபாகரனை புகழ்ந்தாரோ, அதே போன்று இன்று சந்திரிக்காவையும், ரணில் விக்கிரமசிங்கவையும் புகழ்ந்து தீர்த்தார். ஆனால், இதே மாவை சேனாதிராஜா வடக்கு தமிழ் மக்கள் மத்தியில் இவ்வாறு பேசுவதில்லை. ஏனெனில், இவ்வாறு பேசினால் அவர்கள் மாவையை வீட்டுக்கு அனுப்பிவிடுவார்கள். தமிழரசு கட்சி அண்மைக்காலமாக விமர்சிக்கப்படுவதற்கு இந்த இரட்டை நாக்குத்தான் முக்கிய காரணம். கொழும்பில் ஆங்கிலத்தில் பேசுகின்ற போது ஒரு விதமாகவும், பின்னர் வடக்கில் பேசுகின்ற போது வேறொரு விதமாகவும் பேசி வருகின்றனர். அண்மையில் கொழும்பிலிருந்து வெளியாகும் சண்டே லீடர் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில், தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பிலான கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போது தமிழரசு கட்சியில் சம்பந்தனுக்கு அடுத்த நிலையில் கணிக்கப்படும் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன், விடுதலைப் புலிகளோடு எங்களுக்கு எந்தவிதமான கூட்டும் இல்லை என்று கூறியிருக்கும் அதேவேளை, நாங்கள் பயங்கரவாதத்தின் மீது நாட்டம் கொண்டவர்கள் அல்ல என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

சுமந்திரனுக்கு தன்னுடைய கருத்துக்களை தெரிவிக்கும் உரித்துண்டு. ஆனால், இதனை அவர் தமிழில் யாழ்ப்பாணத்தில் சொல்ல முடியுமா? முக்கியமாக எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலின் போது வடக்கு தமிழ் மக்கள் முன் கூற முடியுமா? இப்படியான கருத்துக்கள் தொடர்பில் தமிழரசு கட்சியின் தலைவர் என்னும் வகையில் மாவை சேனாதியின் நிலைப்பாடு என்ன? மேதின வைபவம் ஒன்றின் போது, ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து சிங்கக் கொடியை சம்பந்தன் உயர்த்தியபோது அதற்கு எதிராக மறு தினமே மன்னிப்பு கோரியவர்தான் இந்த மாவை சேனாதிராஜா என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். சுமந்திரன் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் இவ்வாறு குறிப்பிடுகின்ற அதேவேளை, அண்மையில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ஒன்றான சுவிஸ்ரலாந்தில் விடுதலைப் புலிகளால் ஒழுங்குபடுத்தப்பட்ட கூட்டமொன்றில் மாவை சேனாதிராஜா பங்குபற்றியிருக்கிறார். இதில் புலம்பெயர் நாடுகளில் விடுதலைப் புலிகளை பிரதிநிதித்துவப்படுத்தி செயற்படும் ஒரு குழுவினர் பங்குகொண்டிருந்தனர். கூட்டமைப்பை ஒரு வலுவான அமைப்பாக உருவாக்க வேண்டும், வெளியிலிருக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தையும் உள்வாங்க வேண்டும் போன்ற யோசனைகள் அங்கு முன்வைக்கப்பட்டுள்ளன. இதன் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறிவித்தல் என்னும் தலைப்பில் ஒரு ஆவணம் கையளிக்கப்பட்டு, அதில் கையெழுத்திடுமாறும் கோரப்பட்டுள்ளது. ஆனால், தமிழரசு கட்சியிலுள்ளவர்களுடன் பேசிய பின்னர் இதற்கு பதிலளிப்பதாக மாவை குறிப்பிட்டிருக்கின்றார். சுமந்திரன் தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பு என்னும் தொனியில் குறிப்பிடுகின்ற அதேவேளை, கூட்டமைப்பில் தமிழரசு கட்சி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற சிறிதரனோ தொடர்ந்தும் தன்னுடைய தலைவர் பிரபாகரன் ஒருவர்தான் என்று குறிப்பிட்டு வருகின்றார். உண்மையில் இப்போது விடுதலைப் புலிகள் தொடர்பான கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்ன? இப்படியான விடயங்களை அடிப்படையாகக் கொண்டுதான் கூட்டமைப்பின் அரசியல் நிலைப்பாடு என்ன என்பதில் கூட்டமைப்பிலுள்ளவர்களே தெளிவற்ற நிலையில் இருப்பதாக குறிப்பிட்டேன். இவ்வாறானதொரு சூழலில்தான் ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து இலங்கையின் அரசியல் கட்டமைப்புக்களிலும் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதற்கான முன்னெடுப்புக் கள் இடம்பெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாகவே தற்போது 19ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட் டுள்ளது. இதனைத் தொடர்ந்து மாகாண சபையை மேலும் வலுவுள்ளதாக்கும் வகையில் சில முன்னெடுப்புக்களும் நிகழலாம். ஆனால், இவற்றின் போதெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு குரலில், ஒரு நிலைப்பாட்டில் செயலாற்றுமா என்பதுதான் இங்குள்ள கேள்வி. எனவே, கூட்டமைப்பு இவ்வாறு தெளிவற்று பயணித்துக் கொண்டிருக்கும் போது பயணத்தின் முடிவு எது என்பதை எவரும் அறிந்துகொள்ள முடியாது. எனவே, கூட்டமைப்பு தன்னுடைய பயணத்தின் மூலம் போக விரும்பும் இடத்தை முதலில் தெளிவாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், ஏழைத் தமிழ் மக்களை பொறுத்தவரையில் 19ஆவது, 20ஆவது எல்லாம் வெறும் உச்சரிப்புக்களாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளியிழந்த கிரீடம்

- ஆதங்கன்

அதிகாரம் என்ற போதை எவரையுமே விட்டு வைப்பதில்லை. உலகில் எந்தப் பேய் பீடித்தாலும் விரட்டி விடலாம். ஆனால் அதிகாரப்பேயை எந்த மந்திரவாதியாலும் விரட்டிவிடமுடியாது என்று சொல்வார்கள். அந்தளவு வலியது அதிகாரப்போதை. அது உள்நுழைவதை எவராலும் உணரமுடியாது. ஒருமுறை உள்நுழைந்துவிட்டால் ஆயுள் வரை அதனை விரட்டவும் முடியாமல் உறவாடவும் முடியாமல் தத்தளிக்க வேண்டியதுதான்.

உலகின் பெரும் ஆளுமைகளில் பலரும் இத்தகைய அதிகாரப்போதையால் தான் அழிந்து போனார்கள். இதற்கான உதாரணங்களை வரலாற்றின் வழியெங்கும் தாராளமாகக் காணலாம். இந்தத் தொடர்ச்சியின் மிக அண்மைய உதாரணங்களாக லிபிய முன்னாள் அதிபர் கடாபி, இலங்கையின் முன்னாள் அதிபர் மஹிந்த ஆகியோரைக் கொள்ளமுடியும்.

லிபிய அதிபர் கடாபி ஆரம்பத்தில் மக்கள் நலன் விரும்பும் ஒரு ஆட்சியாளனாகத்தான் அதிகாரத்துக்கு வந்தார். உலகின் மிக வறுமையான நாடுகளில் ஒன்றாகப் பட்டியலிடப்பட்டு, வறுமையில் சிக்கித்தவித்த லிபியாவை எப்படியாவது உலகச் செல்வந்த நாடுகளில் ஒன்றாக மாற்றவேண்டும் என்பதுதான் கடாபியின் சிந்தனையை நிறைத்திருந்தது. மிகப்பிரமாண்டமான குழாய்களை அமைத்து நாடெங்கும் தண்ணீர் விநியோகத்தைச் சீராக்கினார். லிபியா பசுமையாகத் தொடங்கியது. வறுமை காணாமல் போக , தங்க வியாபாரம் வளர்ச்சியடைந்தது. லிபியாவும் செல்வந்த நாடானது. அல்லும்பகலும் நாடு பற்றிய எண்ணத்தில் இருந்தமையால் கடாபியை அதிகாரப்பேய் ஆரம்பத்தில் தன்னிஷ்டப்படி ஆட்டுவிக்க முடியாமல் இருந்தது. ஆனால் அதன் பின்னர் கடாபி அதிகாரத்திடம் அடிமையாகிப் போனார். நாட்டின் செல்வம் கடாபியின் குடும்பச்சொத்தாக மாறத்தொடங்கியது. நாட்டின் சட்டங்கள் யாவும் கடாபியின் சொல்லுக்கு ஏற்றபடி வளைக்கப்பட்டன. விரும்பியோ விரும்பாமலோ அதிகாரத்தை விட்டு வெளியேவர கடாபியால் கடைசிவரை முடியவில்லை. அவரது சாவு மிகக்கொடூரமானதாக அமைவதற்கும் அதிகாரப்பேயே காரணமாயிற்று.

கடாபியில் இருந்து மஹிந்த வேறுபடும் இடம் எதுவெனில், தனக்குள் அதிகாரப் பேய் உட்புகுந்ததை உணர்ந்து கொண்டமைதான். கடாபிக்கு நாட்டின் பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்த பின்னர்தான் தனக்கான அதிகாரத்துக்குத் தீனி போடும் வேலையில் இறங்கினார். ஆனால் மஹிந்தவோ இதற்கு மாறாக ஆட்சிக்கு வர,முன்னரே அதிகாரப்பேயைக் குளிர்விக்க என்னென்ன படையல்கள் செய்யவேண்டுமென திட்டமிடத் தொடங்கியிருந்தார்.

அதன் முன்னோட்டமாகத்தான் சுனாமி நிவாரண நிதியில் இருந்து 800 மில்லியன்களை அவர் சுருட்டியிருந்தார்.

ஆட்சிக்கு வந்ததுமே எப்படியெப்படி நாட்டின் வளங்களை தன் வீட்டுச் சொத்தாக மாற்ற முடியும் என்றுதான் அவர் சிந்தித்தாரே தவிர நாட்டின் முன்னேற்றம் பற்றிய எண்ணங்களை மஹிந்த தள்ளியே வைத்திருந்தார். எனினும் மஹிந்தவின் காலத்தில் தான் போர் முடிவுக்கு வந்தது, அபிவிருத்தித் திட்டங்கள் அதிகளவில் நடைமுறைப்படுத்தப்பட்டன என்கின்ற வாதங்களை சிலர் முன்வைக்கக்கூடும். அவை கூட குடும்ப நலனுக்காகவே நடத்தப்பட்டன என்பதுதான் உண்மை. போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டால்தான் அந்த வெற்றியை முதலீடாக வைத்து காலாதி காலத்துக்கும் அதிகாரத்தை ஜனநாயக ரீதியில் தக்க வைக்க முடியும். அத்துடன் இலங்கையில் சீனா போன்ற நாடுகளால் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தித்திட்டங்கள் மூலம் பெருமளவு நிதியை தங்கள் வீட்டுக் பொக்கற்றுக்குள் மஹிந்த குடும்பத்தினர் வைத்துக் கொள்ளவும் தவறவில்லை. இவைதான் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டமைக்கும் அபிபிருத்தித் திட்டங்கள் அதிகளவில் நடைமுறைப்படுத்தப்பட்டமைக்குமான அடிப்படை உண்மைகள்.

அதிகாரப்பேய் தலைக்குள் புகுந்ததுப் தனது ஆட்சிக்கதிரையைப் பலமாக்க மஹிந்த எண்ணினார். அதனால் தான் ஒருவர் இரண்டுக்கு மேற்பட்ட தடவைகள் ஜனாதிபதியாக முடிசூடலாம் என்று அரசியலமைப்பை மாற்றும் 18 ஆவது திருத்தச்சட்டத்தைக் கொண்டு வந்தார். மஹிந்த சொல்லும் எல்லாவற்றுக்கும் கேட்டுக் கேள்வியின்றி தலையாட்டும் நாடாளுமன்ற உறுப்பினர்களால் மஹிந்த நினைப்பதெல்லாமே எளிதாக நிறைவேறின. ஆனால் அவரது அரசியல் வாழ்வும் எவரும் எதிர்பாராத வகையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அப்படியிருந்த போதும் மஹிந்தவுக்குள் இருக்கும் அதிகாரப்பேய் இன்னும் ஓய்ந்துவிடுவதாக இல்லை. அது மீளவும் ஆட்சிக்கட்டிலில் அமரும் தருணத்துக்காகத் துடித்துக் கொண்டேயிருக்கிறது. அதனால்தான் மஹிந்த தனக்கென உருவாக்கி வைத்திருந்த 18 ஆம் திருத்தத்தின் பலாபலன்களை இல்லாதாக்கும் 19 ஆவது திருத்தத்தை தோற்கடிக்கத் திரைமறைவில் பல வேலைகளைச் செய்யப்பண்ணியது. ஆளும் கட்சி யார்? எதிர்க்கட்சி யார் என்ற குழப்பங்கள் நிறைந்த நாடாளுமன்றக் குட்டைக்குள் தனக்குத் தேவையான மீன்களைப் பிடிக்க மஹிந்த தரப்பினர் திட்டம் தீட்டினர். ஒருகட்டத்தில் 19 ஆவது திருத்தத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு நிறைவேற்ற முடியாத சூழல் கூட தோன்றியிருந்தது. மிதவாதியான ஜனாதிபதி மைத்திரி கூட கடுமையான சொற்களைப் பயன்படுத்துமளவுக்கு நிலைமை மோசமான கட்டத்தை நோக்கி நகர்ந்தது. இந்த நிலையில் தான் வேறுவழியின்றி நிலைமை இப்படியே நீடித்தால் 19 ஆவது திருத்தத்தை நிறைவேற்றாமலே நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடுவேன் என்று தனது கடைசி அஸ்திரத்தை மைத்திரி கையில் எடுக்க வேண்டியதாயிற்று. அதன் பின்னர் தான் குழப்பவாதிகள் ஓரளவுக்கு ஓய்ந்தார்கள். ஆயினும் தங்களுடைய தோல்வியை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள முடியாமல் 20 ஆவது திருத்ததையும் நாடாளுமன்றில் கொண்டு வந்தால் 19 ஆவது திருத்தத்தையும் ஆதரிக்கிறோம் என்று சொன்னார்கள். விரைவில் 20 ஆவது திருத்தம் கொண்டுவரப்படும் என்று மைத்திரி உறுதியளிக்க , ஒரேயொரு உறுப்பினர் தவிர்ந்த ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவோடு 19 ஆவது திருத்தம் நிறைவேறியது. இதில் வேடிக்கை என்னவென்றால் எந்த மஹிந்த 18 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து தன் அதிகாரத்தைப் பெருக்கினாரோ அந்த மஹிந்தவின்

அரசியல் வாரிசான நாமல் ராஜபக் ஷ கூட 19 ஆவது திருத்தத்தை ஆதரித்ததுதான். ஒன்று வாங்கினால் இன்னொன்று இலவசம் என்று வியாபாரப் பொருள்களை ஆசை காட்டி விற்பனை செய்வது போல 20 ஆவது திருத்தத்தைக் காட்டி ஒருமாதிரி 19 ஆவது திருத்தத்தை மைத்திரி அரசு ஒப்பேற்றிவிட்டது. இனித் தேர்தலுக்கு நல்லநாள் பார்த்துவிட்டு நாடாளுமன்றத்தைக் கலைப்பது மட்டும் தான் மிச்சமிருக்கும் வேலை.

இந்தப்பத்தியின் ஆரம்பத்தில் சொல்லப்பட்டது போல, நாட்டில் அதிகாரத்தால் பீடிக்கப்பட்ட மற்றெந்தத் தலைவர்களும் செய்ய முடியாத ஒன்றை மைத்திரி செய்திருக்கிறார். சந்திரிகா பண்டாரநாயக்க, மஹிந்த ஆகியோர் நிறைவேற்று அதிகார முறையை ஒழிப்போம் என்று கூறிக்கொண்டுதான் பதவிக்கு வந்தவர்கள். ஆனால் அதிகாரத்தின் சூனிய வலைக்குள் அவர்களும் சிக்கிக் கொண்டதால் நிறைவேற்று அதிகாரத்தை இன்னும் அதிகமாக்கும் வழிகளைத்தான் அவர்கள் தேடினார்களே தவிர நிறைவேற்றதிகாரத்தை நீக்கும் உபாயங்களைக் கண்டுபிடிக்கவேயில்லை. இந்த நிலையில்தான் வலிய வந்த நிறைவேற்று அதிகாரத்தின் சில இரும்புக் கரங்களத் துணிச்சலோடு துண்டித்திருக்கிறார் மைத்திரி. உண்மையில் இந்த 19 ஆவது திருத்தம் நிறைவேற்று அதிகார முறையின் அடிப்படைப் பண்புகள் எவற்றையும் நீக்காவிட்டாலும் கூட, மஹிந்தவால் கொண்டுவரப்பட்ட மேலதிக அதிகாரங்களையாவது இல்லாமல் செய்திருக்கிறது.

தனது கிரீடத்தையே ஒளியிழக்கச் செய்யும் தைரியம் எல்லோருக்கும் வாய்த்துவிடுவதில்லை. அது மைத்திரிக்கு வாய்த்துவிட்ட து. இந்தக் கிரீடமிழப்பு மைத்திரி தரப்புக்கு நாடாளுமன்றத் தேர்தலின் போது அதிகளவான வாக்குகளைப் பெற்றுக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. அத்துடன் மைத்திரிக்கு சர்வதேச விருதுகளையும் இந்தக் கிரீடமிழப்பு அள்ளிக் கொடுக்கப்போகின்றது போலும். இப்போதே சமாதானத்துக்கான நோபல் பரிசுக்கு மைத்திரியின் பெயரை பரிந்துரை செய்யப் போவதாக மனித உரிமைகள் அமைப்பொன்று அறிவித்திருக்கிறது. ஆனால் இவையெல்லாம் மீண்டும் பதவிக்கதிரையில் அமரும் எண்ணத்தோடு காத்திருக்கும் மஹிந்த தரப்பினருக்குத்தான் உவப்பாக இருக்கப்போவதில்லை.

அதிகாரப்பேய் தலைக்குள் புகுந்ததும் தனது ஆட்சிக்கதிரையைப் பலமாக்க மஹிந்த எண்ணினார். அதனால் தான் ஒருவர் இரண்டுக்கு மேற்பட்ட தடவைகள் ஜனாதிபதியாக முடிசூடலாம் என்று அரசியலமைப்பை மாற்றும் 18 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார். மஹிந்த சொல்லும் எல்லாவற்றுக்கும் கேட்டுக் கேள்வியின்றி தலை யாட்டும் நாடாளுமன்ற உறுப்பினர்களால் மஹிந்த நினைப்பதெல்லாமே எளிதாக நிறைவேறின. ஆனால் அவரது அரசியல் வாழ்வும் எவரும் எதிர் பாராத வகையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு விட்டது. அப்படியிருந்த போதும் மஹிந்தவுக்குள் இருக்கும் அதிகாரப்பேய் இன்னும் ஓய்ந்துவிடுவதாக இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
வாராந்த சஞ்சீவகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

ஒலி மாசுறுவதால் உண்டாகும் பாதிப்பிலிருந்து தப்புவதற்கு...

காற்று மாசடைதல், நீர் மாசடைதல், நிலம் மாசடைதல், சுற்றுப்புறச் சூழல் மாசடைதல் என்று இயற்கை பல்வேறு வகைகளில் பாதிப்புறுவதால் மனித வாழ்க்கை மென் மேலும் வெதும்புகிறது. உலகளாவிய மட்டத்தில் - ரீதியில் - இவை தொற்றிப் படர்ந்து வருகின்றன. எனினும் அவற்றைத் தடுப்பதற்கான விஞ்ஞான ரீதியான நவீன வழிமுறைகளும் கண்டறியப்பட்டு வருகின்றன.

இவற்றின் மத்தியில், மனிதர்களே இயற்கையை மாசுறச் செய்யும் "கொடுமை" மேலுயர்வதாலும், அதி கரித்து வருவதாலும் பெரும் பாதிப்புக்களை உருவாக்கு கின்றன.

எமது பிரதேசங்களில் புதிய வகை என்று கருதும் அளவுக்கு, இப்போது ஒலிமாசடையும் வீதம் பெருத்துப் பருத்து வருகிறது. அதிகரித்த வாகனப் பயன்பாடு, வீதிப் போக்குவரத்தின் போதான பேரிரைச்சல், ரயில் மற்றும் விமானப் போக்குவரத்து இரைச்சல் என்று வகையறாக் ள் பல்கிப் பெருகுகின்றன.

அவற்றில் ஆகப் பிந்தியதாக, எமது பிரதேச மக்களைப் பாதிப்பது, ஒலிபெருக்கிகளின் இரைச்சல். அதனால் உண்டாகும் பெரும் பாதிப்புகள் மிகப் பலவாகும்.

இத்தகைய சூழமைவில், புதிய யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. தென்மராட்சிப் பிரதேசத்தை சேர்ந்த மக்களின் அந்த யோசனை கருத்தில் கொள்ளப் பட வேண்டியதே.

ஒலி பெருக்கி பயன்படுத்தப்படும் சுற்றாடலில் வாழும் மக்களின் சம்மதம் பெற்றே, கோவில்களிலும் சரி, வேறு நிகழ்வுகளிலும் சரி, அதனைப் பாவிப்பதற்கு பொலிஸார் அனுமதி வழங்கவேண்டும் என்பதே அவர்களின் அர்த்தம் நிறைந்த வலியுறுத்தல் ஆகும். அதனைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டிய காலம் கனிந்துள்ளது அது ட்டிக்கழிக்க முடியாததும் ஆகும்.

அதிக ஒலி அலையின் அதிர்வினால் உண்டாகும் பாதகங்கள் மிகப் பல. கேட்கும் திறன் பாதிப்புறுதல், உடலின் சுரப்பிகள், நரம்புகள், இரத்த நாடிகள் மற்றும் சமிபாட்டில் பங்கம் என்று பட்டியல் மிக நீள்கிறது. உயர் இரத்த அழுத்தத்துக்கும் அது வழி கோலுகிறது.

ஏன், ஒலியின் இரைச்சலினால் கோபம், மன அழுத்தம், உயர்குருதி அமுக்கம் நித்திரை இன்மை போன்றவற்றின் வெளிப்பாடுகள் விரைந்தும் இலகுவிலும் பலவகைப் பாதிப்புகளை உண்டாக்குவதாக மருத்துவத்துறையினர் எச்சரிக்கின்றனர்.

மொத்தத்தில், எம்மை அறியாமலே வருத்தும் பல வகைப் பாதிப்புகளில் அதிகரித்த ஒலியும் ஒன்று. அது சுற்றச் சூழலை மிகப் பெரிய அளவில் கண்ணுக்குப் புலப்படாத விதத்தில் நச்சாக மாற்றுகிறது.

வயோதிபர்கள், நோயாளிகள் மற்றும் குழந்தை களுக்கு மிகப் பெரிய அளவில் பாதிப்புகளை உண்டாக்கு கிறது.

கோபம், மன அழுத்தம், இரத்த அழுத்தம் தலைவலி, நித்திரை இன்மை உடற்சோர்வு மட்டுமன்றி மனநிலையை தீவிரமாக்கும் ஆபத்துக்கூட உண்டு என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உரத்த சத்தத்தால் (இசையால்) மனிதனின் ஒருமுகப்படுத்தும் சக்தி பாதிப்புறுவதாகக் கூட பிந்திய ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புகள் தொட்டுக் காட்டுகின்றன.

அதிகரித்த ஒலியை , நஞ்சை உமிழும் எதிரியாகப் பார்க்க வேண்டிய தேவையும், தவிர்க்க முடியாத தடுப்பு நடவடிக்கைகளும் இன்றி அமையாதவை.

- பிரமன்

இனி எங்கே அடுத்த அதிர்வு?

சாது மிரண்டால் காடு தாங்காது.பூமியும் பரம சாதுதான். ஆனால் அது எந்தளவுக்கு சாதுவோ அந்தளவுக்கு மூர்க்கமாக தன் கோபத்தை வெளிப்படுத்தவும் தவறுவதில்லை.

நாம் விடுகின்ற எல்லாத் தவறு களையும் பூமித்தாய் பொறுத்துக் கொள் கிறாள். அதனால் அவளைப்போல பொறுமை யான குணத்தைக் கொண்டவர்களாக நாமும் இருக்க வேண்டும்

இத்தகைய தத்துவ முத்துக்களை பலரும் உதிர்ப்பதுண்டு. அப்ப்டிச் சொல்பவர்கள் அதே பூமியின் பொறுமை கரைந்து அது உக்கிரம் கொள்ளும் தருணங்களை ஏனோ சொல்ல மறந்தே விடுகிறார்கள். மனிதர்கள் மறந்தாலும் பூமி தன்னியல்பையும் ஆற்றலையும் அடிக்கடி நினைவூட்டத் தவறுவதேயில்லை. இருப்பினும் அந்த நினைவூட்டல்கள் என்றைக்கும் மறக்கமுடியாத வடுக்களை நிரந்தரமாகப் பரிசளித்து விடுகின்றன. பூமியின் கோபம் கடைசியாக வெளிப்பட்ட இடம் நேபாளம்.

நேபாள வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ஏப்ரல் 25 ஆம் திகதி சில செக்கன்களே நீடித்த பூமியதிர்வு அந்த நாட்டின் தலைநகர் காத்மண்ட் தொடக்கம் சிறு கிராமங்கள் வரை ஒரு உலுப்பு உலுப்பிவிட்டே அடங்கியது. சில செக்கன்களே ஆயுளென்ற போதும் தன்னால் உண்டான பாதிப்பினை இன்னமும் சரிவர அளவிட முடியாதளவுக்கு பெரும் தாண்டவத்தை நேபாளப் பூமியதிர்வு ஆடிவிட்டுப் போயிருக்கிறது. பூமியதிர்வில் சரிந்து, விழுந்துபோன கட்டடக் காடுகளை இன்னமும் அப்புறப்படுத்த முடியவில்லை. குறித்த கட்டட இடிபாடுகள் தமக்குள் இன்னமும் நூற்றுக்கணக்கான உயிரற்ற உடலங் களைப் பதுக்கி வைத்திருக்கக்கூடும் என்று நம்பப்படுகின்றது. பொத்திய மூக்கையும் தாண்டி ஊடுருவி, நாசியைச் சுளிக்க வைக்கும் துர்நாற்றம் சடலங்கள் பலவும் இடிபாடுகளுக்குள் இருப்பதையே உறுதி செய்கின்றன.

உலகநாடுகள் மனிதாபிமானத்தோடு உதவிக்கரம் நீட்டினாலும் கூட, நேபாளத்தின் கண்ணீரையும், அழிவால் உண்டான வலியின் அதிர்வையும் உடனடியாகத் தீர்க்க அவைகளொன்றும் மந்திரவாதிகளல்லவே. நேபாளம் இந்தத் துக்கித்தலில் இருந்து மீண்டெழ இன்னமும் சில வருடங்கள் பிடிக்கும். இத்தகைய சூழமைவில் ஏனோ சுனாமி பற்றிய நினைவுகள் நம்மில் பலருக்கும் எட்டிப்பார்க்காமல் இருக்க முடியாது. 2004 ஆம் ஆண்டு இலங்கை, இந்தோனேசியா, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் சீறிப்பாய்ந்த சுனாமிப் பேரலைகளின் நர்த்தனத்தின் போதும் இவ்வாறான பேரழிவே குறித்த நாடுகளில் ஏற்பட்டிருந்தன. இந்தப் பேரழிவில் இருந்து எப்படி மீளப்போகின்றோம் என்ற பயமே இங்கு பாதிக்கப்பட்ட மக்களிடம் உண்டாகியிருந்தது. கரையோரக் கிராமங்களைச் சூறையாடிக்கொண்டு போகையில் கட்டடங்கள், மரங்கள், வள்ளங்கள், வாகனங்கள் என்பவற்றோடு ஆயிரக்கணக்கான சடலங்களையும் இழுத்துக் கொண்டே மீளவும் கடலுக்குத் திரும்பியிருந்தது ஆழிப்பேரலை . இந்தச் சடலங்களையெல்லாம் தங்கள் கடற்பகுதியில் உள்ள மீன்கள் தானே உண்டிருக்கும் என்ற எண்ணத்தில் இனிமேல் மீனே சாப்பிடுவதில்லை என்று பலர் செய்த சபதங்கள் காலப்போக்கில் காலாவதியாகி இப்போது மீளவும் மீன்பிரியர்களாகிவிட்டனர். அவர்களில் பலர் தாங்கள் முன்னொரு காலத்தில் (வெறும் 11 ஆண்டுகள் தான்) இப்படி 'மீன் தின்னா' சபதம் போட்டதையே மறந்தும் இருப்பார்கள். இன்னும் சிலருக்கு சுனாமிக்கு பிறகு தண்ணீரைக்கண்டாலே பேதி போகும். இதயம் படபடக்கும். மயக்கம் வரும். கடலைப் பார்க்கவே கோபம் வரும். பலர் கடற்கரைக்குப் போவதை ஏதோ சுடுகாட்டுக்கு போவதைப்போல ஒரு துடக்காகவே நினைத்தார்கள். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே நிலை தொடர்ந்தும் நீடிக்கவில்லை. எல்லாமே கொஞ்சக் காலத்தின் பின்னர் நம் நினைவுச் சங்கிலியில் இருந்து ஒவ்வொன்றாகக் கழன்று விழுந்து தொலைந்து விட்டன. இப்போது தண்ணீர் பற்றிய பயம் இருப்பதில்லை. கடலுக்குப் போவது துடக்காகப் பார்க்கப்படு வதில்லை. காலம்தான் கண்ணீரை மறக்கடிக்கும் மிகச் சிறந்த மருந்து. அந்த மருந்து நேபாளத்தின் துயரையும் துடைத்துவிடத்தான் போகிறது. ஆனால் என்ன, காலமென்னும் துயர் நிவாரணி தன் வேலையை முடிக்க இன்னும் சில வருடங்களை எடுத்துக் கொள்ளும்.

நேபாளத்துக்கு இவ்வாறான பூமியதிர்வு புதிதல்லத்தான். இமயமலையின் குழந்தையான நேபாளம் அடிக்கடி பூமியதிர்வைச் சந்தித்தே வருகின்றது. ஆயினும் இது போன்ற பேரழிவு ஏற்பட்ட தில்லை. ஏனெனில் புவிஓடுகள் சந்திக்கின்ற தருணங்களில் முட்டிக் கொள்வதாலேயே இந்தப் பூமியதிர்வுகள் உண்டாகின்றன. அடிக்கடி புவியோடுகள் சந்தித்துக் கொள்ளும் புள்ளிகளின் நிரந்தர வதிவிடம் இமயமலையை அண்டிய வலயம் தான். அந்த வலயத்துக்குள்தான் நேபாளமும் வருகின்றது. அப்படி பூமியதிர்வோடு நெருங்கிய உறவு கொண்ட நேபாளத்தில் முன்னர் இப்படியான பேரழிவுகள் ஏன் நிகழவில்லை? இந்த முறை மாத்திரம் பூமியதிர்வு எப்படி இப்படிக் கொத்தாக மனித உயிர்களைக் கொன்று-கொண்டு-போனது? என்பன போன்ற தர்க்கரீதியான கேள்விகளை எழுப்பி, பலரும் தங்களுடைய அறிவுத்திறனைத் தாங்களே தட்டிக் கொடுக்கவும் கூடும்.

உண்மையில், இந்தப் பூமியதிர்வு உடனடி விளைவொன்றால் ஏற்படும் திடீர் விபத்தல்ல. அது மிக நீண்ட காலம் உறங்குநிலையில் கிடந்த புவியோடுகளின் முறுகல் நிலை உச்சம் பெற்றதால் ஏற்படும் படிமுறை ரீதியான செயற்பாடுதான். (இதனை சாதாரண மனிதர்கள் என்னதான் நவீன கருவிகளை வைத்திருந்தும் கண்டுபிடிக்கத் தவறிவிடுகிறார்கள். ஆனால் ஐந்தறிவுக்கும் குறைவான ஜீவன்கள் என்று நம்மால் எள்ளி நகையாடப்படும் எறும்புகள், பறவைகள் என்பன முன்கூட்டியே உணர்ந்து இது போன்ற அசாம்பாவிதங்கள் ஏற்படும் இடங்களை விட்டு அகன்று விடுகின்றன). புவியோடுகள் முட்டிக் கொண்டதை அறிந்தாலும் கூட, அது எப்போது வெளிப்படும் என்பது இன்னமும் விஞ்ஞானிகளுக்குப் புரியாத புதிர்தான். நேபாளத்தில் விரைவில் புவியதிர்வு ஏற்படப்போகின்றது என்பதை கண்டறிந்த விஞ்ஞானிகள் பேரழிவு நடப்பதற்கு சில வாரங்களுக்கு முன்னர் அங்கு சென்று சில ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர். ஆயினும் அவர்களால் கூட எப்போது, எங்கு புவியதிர்வு ஏற்படப்போகின்றது என்பதைத் துல்லியமாகச் சொல்லமுடியவில்லை.

நேபாளத்திலும், இமயமலையை அண்டிய ஏனைய பகுதிகளிலும் அடிக்கடி புவியதிர்வு உண்டானாலும் அவை இதுவரை பெரும் அழிவுகளை

பூமியதிர்வில் சரிந்து, விழுந்துபோன கட்டடக் காடுகளை இன்னமும் அப்புறப்படுத்த முடிய வில்லை. குறித்த கட்டட இடிபாடுகள் தமக்குள் இன்னமும் நூற்றுக்கணக்கான உயிரற்ற உடலங் களைப் பதுக்கி வைத்திருக்கக்கூடும் என்று நம்பப்படுகின்றது. பொத்திய மூக்கையும் தாண்டி ஊடுருவி, நாசியைச் சுளிக்க வைக்கும் துர்நாற்றம் சடலங்கள் பலவும் இடிபாடுகளுக்குள் இருப் பதையே உறுதி செய்கின்றன.

ஏற்படுத்தாமைக்கான காரணம் கற்பாறைகள் தான். புவியதிர்வின் போது ஊடுகடத்தப்படும் அதிர்வும், தாக்கமும் கற்பாறைகள் ஊடாக அதிவிரைவாகப் பயணித்து விடுவதாலும், பூமிக்கடியில் இருந்து வெளிப்படும் அதிர்வுக்கு சமாந்தரமான விசையை இயல்பாகவே பாறைகள் வெளிப்படுத்துவதாலும் இவ்வாறான பாதிப்புகள் குறைந்தளவிலேயே ஏற்பட்டிருந்தன.

காற்றின் காரணமாக படபடக்கும் காகிதங்களைக் கட்டுப்படுத்த அதன் மேல் ஒரு பாரமான பொருளை நாம் வைப்பதில்லையா?. அது போல்தான் புவியதிர்வுகளின் போதும் அதன் தாக்கத்தைக் குறைக்கக் கற்பாறைகள் தொழிற்படுகின்றன. அப்படியானால் காத்மண்ட் மட்டும் ஏன் இப்போது புவியதிர்வில் சிக்கிச் சின்னா பின்னமானது? காரணம் இருக்கத்தான் செய்கின்றது.

உண்மை யில் காத்மண்ட் பாறைகளின் நகரமல்ல. அது ஆற்றுமணற் படுக்கைகளின் மீது கட்டியெழுப் பப்பட்ட நகரம். எனவே அதன் தரையமைப்பு மிக மென்மையானது. அந்த மென்மையான தளத்தில் உயரமான, நெருக்கமான கட்டடக்காடு மனிதர்களால் கட்டியெழுப்பப்பட்டது இயற்கைக்குத் தன் சீற்றத்தைக் காட்ட மிக வசதியாகப் போய்விட்டது. 7.8 ரிச்டர் புவியதிர்வே ஏற்பட்ட போதும், 6500க்கும் மேற்பட்ட மனிதர்கள் உயிர்துறக்கக் காரணம் நேபாளத்தின் திட்டமிடப்படாத கட்டட அமைப்பு முறைதான் என்று இப்போது குற்றம் சாட்டப்படுகின்றது. காத்மண்ட் நகரை மையமாகக் கொண்டே தொழில் நிறுவனங்கள், முக்கியமான தினைக்களங்கள் என்பனவெல்லாம் அமைக்கப்பட்டதால் அவற்றைச் சூழ அந்தநாட்டுப் பிரஜைகளும் தமது இருப்பிடங்களை உருவாக்க முனைந்தனர். விளைவு மிகக்குறுகிய அந்த மணல் நகரத்தில் பிரமாண்டமான கட்டடங்கள் முட்டி நெருக்கியபடி நாளும் பொழுதும் முளைத்தன. காத்மண்ட் மூச்சு விடவே கஷ்டப்பட்டது. அந்தளவுக்கு குடிசன அடர்த்தி காத்மண்ட் நகரின் கொள்ளளவை விடவும் பல மடங்கு அதிகமாகிப் போனது. இதுவே அங்கு 6500க்கும் அதிகமானோர் உயிரிழக்கப் பிரதான காரணம்.

இப்போது சிக்கல் என்னவென்றால், நேபாளத்தில் நிகழ்ந்த புவியதிர்வின் பயணிப்பு மேற்கில் இருந்து கிழக்காக நிகழ்ந்துள்ளது. அதாவது இந்தப் புவியதிர்வுக் கோடானது இரு முனைகளைக் கொண்டது. கிழக்கு முனையைக் கொண்ட அதிர்வுமுனை காத்மண்ட் நகரில் வெளிப்பட்டு தன் அழுத்தத்தைக் குறைத்துவிட்டது. ஆனால் மேற்கு முனை இன்னமும் உறங்கு நிலையில் நிலத்துக்குள்ளேயே குமைந்து கொண்டிருக்கிறது. அது இன்னும் 50 வருடங்களுக்குள் வெளிப்பட்டே தீர வேண்டும். ஏனெனில் கிழக்கு முனை அழுத்தம் முடிந்துவிட்ட நிலையில் அதன் மறுமுனையில் முன்னர் இருந்ததை விடவும் அழுத்தத்தின் அளவு அதிகரித்து அதன் வெளிப்படுகைக்காலத்தை விரைவுபடுத்திவிட்டது. அது பாகிஸ்தானிலோ அல்லது வட இந்தியாவிலோ வெடித்துக் கிளம்பக் கூடும். ஆனால் எப்போது அந்தப் பேரதிர்வு நிகழும் என்றுதான் எவராலும் சொல்லமுடியவில்லை.

நேபாளப் புவியதிர்வு பேரழிவுகளை உண்டாக்கியிருந்தாலும், ஒரு சில நன்மைகளையும் விளைவித்திருக்கிறது. அதிலொன்றுதான், இதுவரை நாளும் தமிழ் மக்களைக் குண்டுகள் வீசிக் கொல்லும் கருவியாக இருந்த விமானங்களில் மனித உயிர்களைக் காப்பாற்றும் மருந்துகள், உணவுப்பொருள்கள் என்பவற்றோடு மீட்புப்படையினரும் நேபாளத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். செய்த பாவங்களுக்கு நேபாளத்தில் புண்ணியம் செய்து பாவமன்னிப்பு பெற முயற்சிக்கின்றன அந்தப் போர்விமானங்கள்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிந்து கொண்டிருக்கின்றது எண்ணெய்ப் பூமி 1

எஸ்.ஜே.பிரசாத்

ஈரானுடன் போர். குவைத் ஆக்கிரமிப்பு. சதாம் ஹுசைனின் எழுச்சி. அதன்பிறகு அவரின் வீழ்ச்சி. அமெரிக்காவின் முற்றுகை. அப்படியே உள்நாட்டுப் போர் என்று 30 வருடங்களாக எரிந்து கொண்டிருக்கிறது எண்ணெய்ப் பூமி.

ஈராக்கில் எரிந்து கொண்டிருக்கும் இந்த நெருப்பை அணையவிடாமல் தூக்கிப் பிடித்துக்கொண்டிருக்கிறது ஒரு கூட்டம்.

ஐ.எஸ். என்ற இரண்டெழுத்தில் தங்களை அடையாளப்படுத்தும் இந்தக் கூட்டம் ஜீரணிக்க முடியாத பல செயல்களை அரங்கேற்றிக்கொண்டிருக்கிறது.

இவர்களை யார் என்று நாம் விழிப்பது- என்பதில் ஒரு சிறு சங்கடம்.

தீவிரவாதிகள் என்பதா? பயங்கரவாதிகள் என்பதா? போராளிகள் என்பதா? என்பதில்தான் அந்த சிக்கல்.

இவர்கள் யார் என்பதை காலம் முடிவு செய்துகொள்ளட்டும். அந்த வியாக்கியானத்திற்குள் நாம் செல்லத் தேவையில்லை.

தொடராக வரவிருக்கும் இந்த பத்தியில் ஐ.எஸ். அமைப்பு என்றே விழிப்போம்.

2003ஆம் ஆண்டு அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் ஈராக்கை ஆக்கிரமித்த அதே வேகத்தில் இந்த அமைப்பு மீண்டும் ஈராக்கை ஆக்கிரமித்துக்கொண்டது.

ஐ.எஸ். அமைப்பு அல் கொய்தாவை விடவும் ஆபத்தானது என்பதே பலரது கருத்து.

ஐ.எஸ். இயக் கத்தை முறியடிக்கும் திறன் மட்டுமல்ல எதிர்த்து நின்று போரா டும் திறனும் பலமும்கூட ஈராக் இராணுவத்திடம் இல்லை.

பின்வாங்கிச்செல்லும் ஈரா இராணுவத்தினரி டம் இருந்து ஆயுதங்களைக் கைப்பற்றி தன் பலத்தை இந்த இயக்கம் பெருக்கிக்கொண்டுள்ளது.

ஐ.எஸ். இதுவரை ஈட்டியுள்ள வெற்றிக்கு முதன்மையான காரணம் செயலிழந்தும் அதைவிட அச்சமூட்டும் வகையில் நம்பிக்கையிழந்தும் காணப்படும் ஈராக் இராணுவம்தான்.

உள்ளூர் மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்தது இந்த இயக்கத்தின் இன்னொரு முக்கிய பலம்.

சரி. இவ்வளவு ஐ.எஸ். அமைப்பு ஆரம்பத்தில் நடத்தியவை. இவை பாராட்டுக்குரியதாக இருந்தது. இழந்த நாட்டை மீண்டும் பிடிக்கிறோம் என்று கொடி உயர்த்தித்தான் வந்தார்கள்.

ஆனால் இப்போது!

நடப்பது எல்லாம் அப்படியே தலைக்கீழ்.

சிரியா, ஈராக் இந்த இரண்டு நாடுகளையும் கைப்பற்றும் நோக்கில் கொஞ்சம் கொஞ்சமாக போராடி வந்தது ஐ.எஸ். அமைப்பு.

சிரியாவில் ஏற்பட்ட உள்நாட்டு கலவரத்தில் ஐ.எஸ். அமைப்பின் பங்கு அதிகமாகவே காணப்பட்டது.

ஈராக்கிலும் பல்வேறு சிறுநகரங்களை வென்றெடுத்தார்கள்.

முதல்கட்ட வெற்றியை ருசித்தபின் சிரியா மற்றும் ஈராக்கில் இதுவரை ஐ.எஸ். அமைப்பு கைப்பற்றியிருக்கும் பகுதிகளை தனி நாடாக இந்த அமைப்பு அறிவித்தது.

இந்த நாட்டுக்கு இஸ்லாமிய தேசம் என்று பெயர் சூட்டியது.

'இஸ்லாமிக் ஸ்டேட்' இதுதான் ஐ.எஸ்.

அதற்கு கலிபாவாக அதாவது மன்னராக அபுதுவா இருப்பார் என்று அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் அறிக்கைவிட்டார்.

ஐ.எஸ்.ஐ.எஸ். என்ற பெயரில் இயங்கிவந்து இந்த அமைப்பு.

இப்போது ஐ.எஸ். என்று இரண்டு எழுத்திற்கு குறைத்துக்கொண்டது.

சற்றே முந்தைய வரலாற்றை ஆராய்ந்தால், ஈராக் பற்றியும் இந்த அமைப்பின் தோற்றம் பற்றியும் நாம் எளிதாகவே புரிந்துகொள்ள முடியும்.

மேற்கு ஆசியாவில் அமைந்துள்ள நாடு ஈராக். சவூதி அரேபியாவுக்கு அடுத்தபடியாக, உலகின் இரண்டாவது பெரிய எண்ணெய் வளமிக்க நாடும்கூட.

மொசப்பத்தேமியா வண்டல் சமவெளி, ஜாக்ரோஸ் மலைத்தொடர்கள், சிரியா பாலைவனம், வடக்கு பெர்ஷிய வளைகுடாவை ஒட்டிய கடற்கரை என வேறுபட்ட நில அமைப்புகளை உள்ளடக்கிய ஒரு நாடு.

ஈராக்கின் வடக்கில் துருக்கி, கிழக்கில் ஈரான், தென்கிழக்கில் குவைத், தெற்கில் சவூதி அரேபியா, தென்மேற்கில் ஜோர்டான், மேற்கில் சிரியா இவை அனைத்தும் ஈராக்கின் எல்லை நாடுகள்.

யூப்ரடிஸ், டைக்ரிஸ் என இருபெரும் ஆறுகள், வடமேற்கில் இருந்து தென்கிழக்கை நோக்கி, ஈராக்கின் மையப் பகுதியைக் கிழித்துக்கொண்டு பாய்கின்றன.

இதனால் பாலைவனம், ஸ்டெப்பி புல்வெளி என்பதோடு வளமான வேளாண்மை நிலங்களும் ஈராக்கில் உள்ளன.

ஈராக்கின் புராதனப் பெயரான மொசபத்தேமியா என்பதற்கு ஆறுகளுக்கு இடையில் அமைந்துள்ள நிலம் என்று பொருள்.

நதிக்கரைகளே நாகரிகங்களின் தொட்டில் என்பதற்குச் சான்றாக வரலாறு சொல்லும் இடங்களில் இந்தப் பகுதியும் ஒன்று.

நாகரிகத்தின் தொட்டில் என்று சொல்லப்படும் ஈராக்கில் இப்போது நாகரிகமற்ற வர்களின் ஆக்கிரமிப்பா என்றுதான் பலரும் அச்சம் கொள்கின்றனர்.

சரி நாம் வரலாற்றுக் கதைக்கு வருவோமே.

உலகுக்கு எழுத்துமுறையை வழங்கிய இந்த மண்ணில்தான் இப்போது வன்முறைக் கலாசாரம் வேறூன்றியிருக்கிறது.

பாபிலோனிய பேரரசிலிருந்து தொடர்ந்த நீண்ட நெடிய மன்னர் பரம்பரைகளை வரலாறாகக் கொண்ட ஈராக், மற்ற நாடுகளைப்போல ஆங்கிலேயர் பிடியில் சிறிது காலம் சிக்கியிருந்தது.

நாற்பதுகளில் ஈராக் மீண்டும் மன்னராட்சிக்குத் திரும்பியது.

ஆனால் 1958இல் நடந்த இராணுவப் புரட்சியால் மன்னராட்சி முடிவுக்கு வந்தது.

அதனைத் தொடர்ந்து அடுத்தடுத்து இராணுவ அதிகாரிகள் ஆட்சி அதிகாரத்தில் இருந்தனர்.

1978இல் ஈராக் சதாம் ஹுசைனின் கைகளுக்கு மாறியது.

2003இல் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையினரிடம் சிக்கும்வரை யாரும் அசைக்க முடியாத சர்வாதிகாரியாக சதாம் இருந்தார்.

பேரழிவை ஏற்படுத்தக் கூடிய இரசாயன ஆயுதங்களைத் தயாரித்து பதுக்கி வைத்திருப்பதாகக் கூறி 2003இல் ஈராக்கைத் தனது ஆளுகையின்கீழ் அமெரிக்காவும் அதன் நேச நாடுகளின் படையும் கொண்டுவந்தது.

அதன் பிறகே, ஈராக்கில் நிலவி வந்த பிரச்சினை உக்கிரமடைந்தது.

ஐ.எஸ். அமைப்பு ஈராக்கையும் சிரியாவையும் மீட்க வந்த மீட்புக் குழுவாகத்தான் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டன.

ஆனால் அவர்கள் நடத்தும் அக்கிரமங்களைப் பார்த்தால் இது இனத்தை அழிக்கும் செயல் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

கூண்டுக்குள் இட்டு தீயிட்டு எரிக்கிறார்கள். கழுத்தை அறுத்து கடலையே சிவப்பாக்குகிறார்கள்.

சிறிதுகாலம் இந்த அமைப்பின் தலைவர் யார்? இவர்கள் எங்கிருந்து இயங்குகின்றார்கள்? யார் வழிநடத்துகின்றார்கள்? இவர்களுக்கு ஆயுதம் எங்கிருந்து கிடைக்கின்றது? இவற்றில் எந்த கேள்விக்கும் யாரிடமும் பதில் இல்லை.

ஏன் அமெரிக்காவால் கூட கண்டு பிடித்துக்கொள்ள முடியவில்லை.

அவ்வாறிருந்த வேளையிலேயே சமயத்தில்தான் ஐ.எஸ். அமைப்பின் தலைவர் நான் தான் என்று ஒருவர் வெளியில் வந்தார்.

உண்மையில் அவர்தானா தலைவர்? சந்தேகம்தான்.

இந்த அமைப்பில் இருக்கும் உறுப்பினர்களுக்கு மாதச் சம்பளம்கூட வழங்கப்படுகிறதாம்.

ஏன் விமானத்தைச் சுட்டு வீழ்த்தும் ஆயுதங்கள் கூட தங்களிடம் இருப்பதாக சொல்லிக் கொள்கிறார்கள்.

உண்மையில் இதெல்லாம் அவர்களிடம் இருக்கின்றதா என்று தெரியவில்லை.

ஆனால் அப்படி இருந்தால் அது பெரும் ஆபத்தாகித்தான் முடியும்.

பணயக் கைதிகளை ஈவிரக்கமின்றி கழுத்தை வெட்டி கொலை செய்கிறார்கள்.

அதை படம்பிடித்து செய்தி நிறுவனங்களுக்கும் சமூக வலைத்தளங்களிலும் வெளியிடுகிறார்கள்.

இத்தகைய கொடூரங்களை அரங்கேற்றும் அவர்களின் மனநிலை எப்படியானதொன்றாக இருக்கும் என்பது விளங்காத புதிர். இது ஆரம்பத்தின் சிறு அறிமுகம்தான்.

இன்னும் இருக்கிறது சொல்ல.

ஈராக்கின் வரலாறு கொஞ்சம் சுவாரஷ்யம் அதிகம். அதனால் அதை அடுத்த வாரங்களில் விரிவாகத் தரக் காத்திருக்கிறோம்.

எது எப்படியோ ஐ.எஸ். அமைப்பை ஆதரிப்பவர்களும் இருக்கிறார்கள். கடுமையாக எதிர்ப்பவர்களும் இருக்கிறார்கள்.

நாம் ஆதரிக்கவும் இல்லை. எதிர்க்கவும் இல்லை. உள்ளதை உள்ளபடி சொல்ல முனைகிறோம் அவ்வளவே.

(தொடரும்)

ஐ.எஸ். இதுவரை ஈட்டியுள்ள வெற்றிக்கு முதன்மையான காரணம் செயலிழந்தும் அதைவிட அச்சமூட்டும் வகையில் நம்பிக்கையிழந்தும் காணப்படும் ஈராக் இராணுவம்தான்.
உள்ளூர் மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்தது இந்த இயக்கத்தின் இன்னொரு முக்கிய பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் துடைப்பாகிப் போன விசாரணைகள்

- அக்கினிக்குமரன்

போர் இடம்பெற்ற காலத்திலும், போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போதும் ஏராளமான தமிழ் மக்கள் படையினரால் கைது செய்யப்பட்டும், இராணுவத்திடம் சரணடைந்தும் இனம்தெரியாதவர் களால் கடத்தப்பட்டும் காணாமற் போயிருந்தனர். ஒரு காலத்தில் வெள்ளை வானில் கடத்தப்படுவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட கலாசாரமாகவே கொடி கட்டிப் பறந்தது.

இதன் பலனாக செம்மணி, மிருசுவில், மன்னார் எனப் பல மனிதப் புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்ட போதும் அவற்றின் மூலங்களோ அவர்களை உருவாக்கியவர்கள் யார் என்பதோ இது வரை உறுதிப்படுத்தப் படவில்லை. இவற்றின் பிதாமகர்கள் யார் என்பது எல்லோருக்கும் தெரிந்த, ஆனால் ஏற்றுக் கொள்ளப்படாத இரகசியமாக விளங்கி வருகிறது.

ஆனால் எவ்வளவு தான் அதிகார கரங்களின் இரும்பு வலைகளின் பின்னால் உண்மைகள் மறைக்கப்பட்ட போதிலும் மக்கள் பின்வாங்கி விடவில்லை. காணாமற் போனோரைக் கண்டு பிடித்துத் தரும்படியான போராட்டங்கள் பரந்த அளவில் தொடர்ந்தன. எத்தனை தடைகள் விதிக்கப்பட்ட போதும் போராட்டங்கள் மேலும் உக்கிரமடைந்தன.

எனினும் காணாமற் போனோர் தொடர்பாக கடந்த அரசாங்கம் பொறுப்புக் கூறப் பிடிவாதமாக மறுத்து வந்தமையையும், இலங்கையில் எவருமே காணாமற் போகவில்லை எனத் திமிர்த்தனமாக மறுத்து வந்தமையும் காணாமற் போனோர் தொடர்பான விவகாரங்களை சர்வதேச மட்டத்துக்கு விரிவுபடுத்தின. ஒரு சந்தர்ப்பத்தில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக் ஷ இலங்கையில் எவரும் காணாமல் போகவில்லை எனவும், அப்படி எவராவது காணாமல் போயிருந்தால் அதைச் செஞ்சிலுவைச் சங்கத்திடமும், இந்திய மருத்துவர் குழுவிடமும் தான் கேட்க வேண்டும் எனத் தெரிவித்ததை மறந்து விட முடியாது. அதேவேளை போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரிக்க அரசால் நியமிக்கப்பட்ட இராணுவ நீதி மன்றமும் எங்கும் காணாமல் போகவில்லை எனவும் அப்படி யாராவது காணாமல் போயிருந்தால் அவர்கள் போரில் கொல்லப்பட்டிருக் கலாம் எனவும் தெரிவித்திருந்தது.

எனவே காணாமல் போனோர் விவகாரத்தில் காணாமல் போனோரின் உறவுகள் மட்டுமன்றி, சர்வதேச மனித உரிமை அமைப்புகள், புலம் பெயர் தமிழ் மக்களின் அமைப்புகள் என்பனவும் தீவிரமான முறையில் களமிறங்கின. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர்களில் இந்த விவகாரம் இலங்கை அரசுக்குப் பெரும் நெருக்கடிகளைக் கொடுத்துத் திக்கு முக்காட வைத்தது.

இலங்கையில் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித குல விரோத நடவடிக்கைகள் தொடர்பான சர்வதேச விசாரணையை ஏற்க மறுத்து வந்த இலங்கை, காணாமற் போனோர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள மக்ஸ்வெல்பரணகம தலைமையில் ஒரு ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்தித்தது.

இந்த ஆணைக்குழு நியமனமும், அதன் விசாரணைகளும் சர்வதே சத்தை ஏமாற்றும் ஒரு அப்பட்டமான கண் துடைப்பு என தமிழ் மக்கள் ஆரம் பம் முதலே தெரிவித்தனர். எனினும் தமிழ் மக்கள் அங்கு துணிச்சலுடன் சாட்சியமளித்ததன் மூலம் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆள் கடத்தல்கள், காணாமல் போதல்கள் பற்றிய பல உண்மைகளை உலக அரங்கில் வெளிக் கொண்டு வந்தனர்.

எனினும் இலங்கை அரச தரப்பு இந்த விசாரணைகளை நீர்த்துப் போக வைக்கும் முயற்சியில் பல வழிகளில் ஈடுபட்டது. காணமற்போன படையினர் பற்றி விசாரணை, பொலிஸ் பற்றிய விசாரணை, முஸ்லிம்கள் பற்றிய விசாரணை என தமிழ் மக்களின் கோரிக்கைகள் நீர்த்துப் போகவைக்கவும், குறைக்கவும் திசை திருப்பவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தக் குழுவில் சர்வதேச நிபுணர்களை இணைப்பது, போர்க்குற்றங்கள் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரத்தை வழங்குவது போன்ற பல கவர்ச்சி நாடகங்களும் அரங்கேற்றப்பட்டன.

இப்படியாக இந்த ஆணைக்குழு விசாரணை என்ற பேரில், வருடங்களால் காலத்தை விழுங்கி விட்டு இப்போது ஒரு இடைக்கால அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கை தமிழ் மக்கள் எதிர்பார்த்தது போலவே முத்து எடுக்க கடலில் மூழ்கி கிழிஞ்சல் பொறுக்கி வந்த கதையாகவே முடிந்துள்ளது.

இந்த அறிக்கையில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்ட விடயம் காணாமற் போனோரின் 60 வீதம் பேர் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டனர் எனவும் 30 வீதம் பேர் இராணுவத்தால் கடத்தப்பட்டனர் எனவும் மிகுதிப் பத்து வீதமானோரே துணை இராணுவக் குழுக்களாலும் ஏனைய தரப்பினராலும் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்பார்த்த மாதிரியே எந்த எந்த நோக்கத்துக்காக இந்த ஆணைக்குழுவை இராணுவ நியமித்ததோ அந்த நோக்கம் கனகச்சிதமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கட்டாய ஆட்சேர்ப்பின் அடிப்படையில், போரின் இறுதி நாள்களில் விடுதலைப்புலிகள் படைக்கு ஆட்சேர்த்தது உண்மை. சாட்சியமளித்தவர்கள் விசாரணையின் போது தெரிவித்திருந்தனர். ஆனால் அப்படிப் படையில் இணைக்கப்பட்டவர்கள் போர் முடிந்த பின்பு படையினரிடம் சரணடைந்தார்கள். இன்னும் இவர்கள் முகாம்களில் வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்டனர். விசாரணைக் குழுவினர் சரணடைந்ததையோ, கைது செய்யப்பட்டமையையோ பதிவு செய்ய மறுத்து ஒட்டுமொத்தமாகவும் புலிகளின் தலையில் பழியைப் போட்டுள்ளனர். கட்டாயமாக இணைக்கப்பட்டவர்கள் கூட 60 வீதமாக இருக்க முடியாது. ஏனெனில் வழங்கப்பட்ட சாட்சியங்கள் யாவும் பத்திரிகையிலும் வெளிவந்தன. அவற்றின் படி அது 10 வீதத்துக்கும் குறைவாக இருக்க முடியும்.

தமிழ் மக்கள் நடத்திய போராட்டங்கள் அனைத்தும் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற்போனோர், படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பாகவே அமைந்திருந்தன. எனினும் இந்த விசாரணைக்குழு படையினரைக் காப்பாற்றும் பணியை நன்றாகவே மேற்கொண்டுள்ளது.

மேலும் இந்த அறிக்கைகளில் இந்த விசாரணைகளுக்கு பாதுகாப்பு அமைச்சும் சிறைச்சாலைத் திணைக்களமும் ஒத்துழைப்பு வழங்க மறுத்துவிட்டன எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணைக்கு குழுவுக்கு பாதுகாப்பு அமைச்சு ஒத்துழைப்பு வழங்கவில்லையெனில் இந்த விசாரணை என்பது ஒரு ஏமாற்று என்பதைச் சொல்லித்தான்தெரிய வேண்டியதில்லை.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல் தொடர்பான எந்த ஒரு உள்ளக விசாணையினதும் உண்மை முகம் இது தான். அதிகார பீடத்தினதும், அரச படையினதும் குற்றங்களை மறைக்கும் வகையிலேயே உள்ளக விசாரணைகளும் முன்னேடுக்கப்படும் என்பதில் எந்த வித மாற்றமுமில்லை.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஒரு உள்ளக விசாரணையை நடத்தப் போவதாக இலங்கையின் தற்போதை அரசு ஐ.நா. சபையிடம் தெரிவித்துள்ளது.

அந்த உள்ளக விசாரணை எப்படி அமையவுள்ளது என்பதற்கு காணாமற்போனோர் தொடர்பான விசாரணைக்குழுவின் விசாரணை அறிக்கை நல்ல ஒரு முன்னுதாரணமாகும்.

தமிழ் மக்கள் நடத்திய போராட்டங்கள் அனைத்தும் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற் போனோர், படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பாகவே அமைந்திருந்தன. எனினும் இந்த விசாரணைக்குழு படையினரைக் காப்பாற்றும் பணியை நன்றாகவே மேற்கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிம்ம சொப்பனம்

20

அவ்வாறு போராடுவதற்குத் தேவையானது மெய் யான புரட்சிகர விழிப்புணர்வு. அதை எப்படியாவது அடைய வேண்டும் என்று காஸ்ட்ரோ விரும்பினார்.

காஸ்ட்ரோ கியூபா நாட்டு வரலாறு, உலக அரசியல் இரண்டையும் தீவிரமாக வாசிக்கத் தொடங்கினார். மெய்யான புரட்சிய வாதியான மார்த்தியின் கருத்துக்களை தேடித்தேடி படித்தார். பொருளாதாரக் கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டார். ஒரு புறம் சாப்பாட்டுக்குக் கூட வழியில்லாத ஏழைத் தொழிலாளர் வர்க்கம். காலில் செருப்புக் கூட அணியாமல் நடத்திச் செல்லும் தொழிலாளர் வர்க்கக் குழந்தைகள். மற்றொரு புறம் பணத்தைக் கொட்டி செலவு செய்யும் செல்வந்தர்கள். இந்த இரண்டு பிரிவுகளும் தோன்றுவதற்கான அடிப்படைக் காரணங்களை கண்டு கொண்டார். முதலாளித்துவத்தின் கோர முகத்தை அருகில் சென்று பார்த்தார். ஒரு சிறந்த அரசாங்கம் எப்படி இருக்க வேண்டும். என்னென்ன செய்ய வேண்டும். என்னென்ன செய்யக்கூடாது என்று தெரிந்து கொண்டார். அவரது வாசிப்பு அவரை சோஷலிசத்துக்கு இட்டுச் சென்றது.

காஸ்ட்ரோவின் வாசிப்பு மேலும் தீவரமடைந்தது. கார்ல்மார்க்ஸின் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையைப் படிக்க நேர்ந்த போது அதிர்ந்தே போனார். மார்க்சின் எழுத்துக்கள் அவரைக் கடுமையாகப் பாதித்தன. அடுத்தது ஏங்கெல்ஸ். அடுத்தது லெனின். இப்படியாக புத்தகங்களை தேடித் தேடி வாங்கிக் குவித்தார். கையில் எப்பொழுதும் பணமிருக்காது என்பதால் நிறையக் கடன் வாங்கிய பணம் அனைத்தும் புத்தகங்களுக்காக செலவிடப்பட்டன.

க்யூபாவில் ஆர்தோடக்ஸ் (பழமைவாத) கட்சி தொடங்கப்பட்ட போது உறுப்பினராகச் சேர்ந்து கொண்டார் காஸ்ட்ரோ. க்யூபாவில் தான் விரும்பிய புரட்சிகர மாற்றத்தை ஆர்தோடாக்ஸ் கடசி கொண்டு வரும் என்று நம்பினார். ஆர்தோடக்ஸ் கட்சியின் தலைவர் எட்வர்டோ சியாஸ் பெரும்பாலான மக்களின் ஆதரவைப் பெற்றிருந்தார். ஆனால் பெருகி வரும் ஆதரவே கட்சியை வேறு திசைகளில் திருப்பி விட்டது. ஹாவானவைத் தவிர பிற இடங்களில் பெரும் நிலப்பிரபுக்களே கட்சியை நடத்திவந்தனர். காஸ்ட்ரோவுக்குப் புரியவில்லை. பொதுவுடமையைக் கருத்துக்களை முன்மொழியப் போகும் ஒரு புரட்சிகர கம்யூனிசக் கட்சியை நிலப்பிரபுக்கள் எப்படி வழிநடத்துவார்கள்? அடிப்படையே தவறாக இருக்கிறதே!

கம்யூனிஸம் என்று சொன்னாலே மாணவர்கள் பயப்படுவது வழக்கம். மாணவர்கள் மட்டுமல்ல ஆசிரியர்கள் கூட கம்யூனிஸம் என்றாலே பயந்து நடுங்கினர். அதை மட்டும் சொல்லாதீர்கள்! என்று அலறினர்.

காஸ்ட்ரோவோடு இணைந்து பணியாற்றவும், அவருக்கு ஆதரவாகச் செயல்படவும் மக்கள் தயாராக இருந்தனர். ஆனால் கம்யூனிஸம் என்றால் விலகி ஓடினர். காஸ்ட்ரோ அவர்களோடு பேசிப்பார்த்தார்.

அரசு நம்மையெல்லாம் சுரண்டுகிறது என்பதை ஒப்புக் கொள்வீர்களா?"

"ஆம் .. ஒப்புக் கொள்கிறேன்" என்றார் அந்த விவசாயி.

'இவர்கள் ஆட்சியில் நீடித்தால் நம் அனைவருக்கும் பிரச்சினை சரிதானே!"

"சரி தான்" .



(தொடரும்)

மேலிருந்து கீழ்

1 - நடத்தையின் பொதுவான இயல்பு.
2 - உறுதி அளிக்கும் பேச்சு.
3 - ஏற்றுக் கொள்ளும் தன்மை.
4 - துண்டாக்குதல்.
5 - தட்டையான நீண்ட பக்கவாட்டுப்பகுதி (புத்தகத்தில் உள்ளது)
9 - புத்த மதத்துக்கு போதனைகளை போதித்தவர்.
11 - இந்தியாவில் தமிழ் மொழி பேசும் மக்கள் வாழும் பகுதி.
13- பால் திரிதல்.
14- கிருஷ்ணன்.
16- மூடப்பட்ட குறியீடு.
17- யாகத்தில் (தீயில்) இடப்படும் பொருள்.
18-வீட்டுக்கு இது தேவை.
19 - துப்பாக்கி ரவையை இப்படியும் அழைப்பர்.
21-ராகம்.

இடமிருந்து வலம்

1 - சுவாசித்தல்.
4 - ஒரு மரம்.
6- செலுத்தப்பட வேண்டியிருப்பது.
7 - முதலாவது ஈர் இலக்க எண்.
8 - பாடசாலையின் உள் அலகு.
10- தேவையான பாண்டித்தியம்.
12- மகள்.
15 - நீரின் அடியில் இருக்கும் நிலப்பகுதி.
16 - குரங்கு.
17 - சூரியன்.
19 - இதைச் செய்யச் செய்ய செய்ய குனிபவன் மடையன்.
20- சிறிய பாத்திரம்.
21- பொருள்.
22- சாப்பிடு.
23-தேவை.

சொற்சிலம்பம் போட்டி இல. 671



அனுப்புபவர் பெயர்:----------

விலாசம்:----------

அனுப்ப வேண்டிய முகவரி:

சுடர் ஒளி யாழ். அலுவலகம்,

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00மணி வரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பாராட்டுப் பெறுவோர்

த. தனுசன்,
தரம்12, ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி,
புத்தூர்.

தம்பையா யோகராசா,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

செல்வி ஸ்ரீதுஷாரா,
ஆண்டு 10,வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை,
யாழ்ப்பாணம்.

ஐ. விஜயபாலன்,
இல 10, மருதடி லேன்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்

இ.சண்முகதாஸ்,
கொத்தியால் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

போட்டி இல. 671

■ சொற்சிலம்பம் போட்டி 671ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2015, மே 27 மற்றும் ஜீன் 03ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப் பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

போட்டி இல 668இல் பரிசு பெற்றோர்

1 செ.குகராஜ், பாலி நகர், வவுனிக்குளம், மல்லாவி.

2 தட்சிகா தருமராஜா, இல 43, கலைவாணி வீதி அரியாலை, யாழ்ப்பாணம்.

3 பொ.அகிலேஸ்வரன், புலோப்பளை கிழக்கு, பளை.

சொற்சிலம்பம் போட்டி 669இன் விடைகள்

மேலிருந்து கீழ்

1.ஊக்குவி.
2.வசித்தல்.
3.சித்தம்.
4.கரை.
5.வினாவிடை.
7.தில்.
9.விவாகம்.
10.பாகம்.
12.சணல்.
14.பிரம்பு.
15.நான்கு.
16.விலா.
17.குருவி.
18.முளை.
19.மேல்.

இடமிருந்து வலம்

1.ஊர்வசி.
4.கருவி.
6.சித்திரை.
8.குவித்தல்.
10.பாவி.
11.விவாதம்.
12.சகடை.
13.கல்.
14.பிணம்.
15.நாம்.
16.விரல்.
18.முலாம்.
19.மேரு.
20.குவளை.
21.புதல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெள்ளரிக்காய்

வெள்ளரிக்காயின் தோலில் ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் மற்றும் ஊட்டச்சத்துக்கள் வளமாக நிறைந்துள்ளது. இதில் நார்ச்சத்துக்கள் அதிகமாகவும், கலோரிகள் குறைவாகவும் உள்ளதால், உடல் எடையைக் குறைக்கவும், மலச்சிக்கலைத் தடுக்கவும் உதவும். மேலும் வெள்ளரிக்காயின் தோலில் உள்ள பீட்டா கரோட்டீன், வைட்டமின் ஏ மற்றும் வைட்டமின் கே ஆகியவை எலும்புகளின் ஆரோக்கியம், இரத்தம் உறைதல் மற்றும் பார்வையை மேம்படுத்தும்.

பழங்களின் தோல்களின் மருத்துவ பயன்கள்?

நாங்கள் பொதுவாகப் பழங்களின் உட்பகுதியைச் சாப்பிட்டு, அதன் தோலை தூக்கி எறிந்துவிடுவோம். ஆனால் பழங்களின் தோல்களில், அதன் உட்பகுதிக்கு இணையான சத்துக்கள் அடங்கியுள்ளன.

தோடம்பழத் தோல்

தோடம் பழத்தின் தோல் உடல் எடையைக் குறைக்க பெரிதும் உதவியாக இருக்கும். மேலும் இது சருமத்தில் உள்ள அழுக்குகளை வெளியேற்றி, முகத்தைப் பிரகாசமாக வெளிக்காட்டும். முக்கியமாக புற்றுநோய் மற்றும் இதய நோயில் இருந்து நல்ல பாதுகாப்பு தரும்.



வாழைப்பழத் தோல்

வாழைப்பழத்தின் தோல் பற்களை வெள்ளையாக்க உதவும். மேலும் சூரியக்கதிர்களால் பாதிக்கப்பட்ட சருமத்தில் ஏற்படும் எரிச்சல்களை சரிசெய்யவும் வாழைப்பழத்தின் தோல் உதவும். குதிக்கால் வெடிப்பு உள்ளவர்கள் வாழைப்பழத்தின் தோலைக் கொண்டு குதிகாலை மசாஜ் செய்து வந்தால், ஒரே வாரத்தில் குதிகால் வெடிப்பு மறைந்துவிடும்.



மாதுளைத் தோல்

மாதுளையின் தோலில் எண்ணற்ற நன்மைகள் உள்ளன. அதில் பருக்கள், சரும அரிப்புகள், முடி உதிர்தல், பொடுகுத் தொல்லை போன்ற பிரச்சனைகள் நீங்கி அழகு பாதுகாக்கப்படும். மேலும் இதய நோய், தொண்டைப் புண் போன்றவை தடுக்கப்பட்டு, எலும்புகளின் ஆரோக்கியம் மேம்படும்.

தர்பூசணி

தர்பூசணியில் இருக்கும் வெள்ளைப் பகுதியில் எண்ணற்ற ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன. குறிப்பாக இந்த

வெள்ளைப் பகுதியானது உடல் எடையைக் குறைக்க உதவி புரியும்.

மேலும் இந்த வெள்ளைப்பகுதியை சருமத்தில் தேய்த்தால், சருமத்தில் உள்ள அழுக்குகள் அனைத்தும் வெளியேறிவிடும்.

அண்டார்டிகாவில் ஓடும் இரத்த அருவி..

தற்போது Taylor பனிப்பாறை என்றழைக்கப்படும் அந்த மிக உயர்ந்த பனிபாறையில் இருந்து இரத்தம் போன்ற நீர் பல ஆண்டுகளாக, அருவியாக ஓடியதால் பலரும் அதன் மர்மத்தை அறிய முயன்றனர்.

பனிபாறைகளால் முழுதும் நிரம்பிய அண்டார்ட்டிகா கண்டத்தில், குறிப்பிட்ட ஒரு பனிப்பாறையில் இருந்து மட்டும் இவ்வாறு இரத்த நிறத்தில் நீர் அருவியாக பாய்வதை அறிந்த மக்கள் அச்சமும் ஆச்சரியமும் அடைந்துள்ளனர்.

இதையடுத்து புவியியலாளர்கள் பலரும் இந்த இரத்த நிறம் பற்றிய மர்மத்தினை அறிந்து கொள்ள அங்கு படையெடுக்கத் தொடங்கியுள்ளனர்.

பனிப்பாறைகளால் முற்றிலும் சூழப்பட்ட பூமியின் தென் துருவத்தில் அமைந்துள்ள அண்டார்ட்டிகாவில் இரத்த அருவி ஒன்று பல்லாண்டுகளாக ஓடிக் கொண்டிருக்கிறது.

1911ஆம் ஆண்டு அவுஸ்திரேலி B V ç Griffith Taylor என்ற புவியியலாளர் பூமியின் தென் பகுதியில் அமைந்துள்ள அண்டார்ட்டிகாவில் ஒரு வினோத நிகழ்வினைக் கண்டு ஆச்சரியமடைந்துள்ளார்.

அங்கு ஒரு குறிப்பிட்ட பனிப்பாறையில் இருந்து இரத்தச் சிவப்பு நிறத்தில் நீர் அருவியாக வெளியேறிக் கொண்டிருந்தது.

அங்கு ஆராய்ச்சியைத் தொடங்கிய அவர்கள், முதலில் பாசிகள் தான் இந்த நிறமாற்றத்திற்கு காரணம் என்று கருதியுள்ளனர்.

ஆனால் பல்லாண்டுகளாக நடந்த ஆராய்ச்சிகளின் முடிவாகவே அதன் உண்மையான காரணம் தெரியவந்துள்ளது.

அதாவது அந்த பனிப்பாறையின் அடியில் சுமார் 2 மில்லியன் ஆண்டுகளாக ஒரு ஓடை ஓடிகொண்டிருப்பதாகவும் அங்கு வாழ்ந்து வந்த நுண்ணுயிரிகளில் இருந்து வெளிவந்த சல்ஃபர் மற்றும் இரும்பு ஆகியவற்றால் அந்த சிவப்பு நிறம் தோன்றியது அம்பலமாகியுள்ளது.

மேலும், அந்த ஓடையின் நீரில் ஒட்சிசனின் அளவு வெகுவாக இல்லை என்றும், நுண்ணுயிரிகள் சல்ஃபேட்டை உணவாக கொண்டே சுவாசித்து வாழ்ந்ததும் தெரியவந்துள்ளது.



இதுமட்டுமல்லாமல் ஒட்சிசன் இல்லாத அந்த உலகில் வேறு எந்த மூலையிலும் இதுவரை கண்டுபிடிக்கப்படாத 17 வகையான நுண்ணுயிரிகள் இருந்ததும் ஆராய்ச்சியாளர்களை கடும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

உயிர் வாழ்வதற்கு ஆதாரமான ஒட்சிசன் அதிகளவில் இல்லாத அந்த ஓடையில் எவ்வாறு இத்தனை அரிய வகை நுண்ணுயிரிகள் இருக்கிறது என்பது பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், முற்றிலும் உறைந்த பனிப்பாறைக்கு அடியில் பல்லாண்டுகளாக ஓடிக்கொண்டிருக்கும் அந்த ஓடையில் வெளிச்சம் எதுவும் இன்றி அந்த வினோத நுண்ணுயிரிகள் வாழ்ந்து வந்ததும் ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது.

அண்டார்டிகாவில் உள்ள எண்ணற்ற பனிப்பாறைகளில் ஏற்படாத இந்த வினோத சம்பவம் குறிப்பிட்ட Taylor பனிப்பாறையில் மட்டுமே நடப்பது ஏன் என்பதற்கான கேள்விக்கு விடை கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடம் மாற்றல்

கிராமத்துப் பெண்ணாகவே இதுவரை வலம் வந்த லட்சுமி மேனன், அல்ட்ரா மாடேன் பெண்ணாக நடிக்கிறார். அதற்கு பிள்ளையார் சுழியாக அஜித் நடிக்கும் சிறுத்தை சிவா இயக்கும் படம் இருக்குமாம். அஜித்தின் தங்கையான லட்சுமி மேனன் நொம்ப மாடர்னாக வளர்வதால் சந்திக்கும் பிரச்சினையும், அதற்கு அஜித் எடுக்கும் விஸ்வரூபமும்தான் படத்தின் மையப்புள்ளியாம்.

பெண் இயக்குநர்களுக்கும் மதிப்பு

இந்தியில் பெண் இயக்குநர்களுக்குக் கொடுக்கப்படும் மரியாதை, தமிழ் சினிமாவில் பெண் இயக்குநர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை. ஷாருக்கான், அமீர் கான், ரித்திக் ரோஷன் போன்ற சூப்பர் நட்சத்திரங்கள் பெண் இயக்குநர்களின் கதைகளிலும் நடிக்கிறார்கள். ஆனால் இங்கே எங்களுக்கு புதுமுக நடிகர்கள் தான் கிடைக்கிறார்கள் எனக் கொதித்துள்ளார் இயக்குநர் ஜஸ்வர்யா தனுஷ்.

கிராமத்து மீசைப் படம்?

கொம்பன் வெற்றி தந்த உற்சாகத்தில் இருக்கும் இயக்குநர் முத்தையா, அடுத்து விஷாலை வைத்து இயக்கப்போகிறாராம். கொம்பன் பட வெற்றிக்கு வாழ்த்திய விஷாலிடம் ஒரு கதையைச் சொல்லி ஓகே பண்ணியிருக்கிறார். படத்தைத் தயாரிப்பது விஷாலின் கோபுரம் திரைக்கூடம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அஜித்தே செம வில்லன்தானே!

தனது படத்தில் வில்லன் தன் தகுதிக்கு இணையாக இருக்கும்படி பார்த்துக்கொள்வார் அஜித். அப்படித்தான் பில்லா. பில்லா 2, ஆரம்பம், என்னை அறிந்தால் படங்களில் வில்லன்கள் இருந்தார்கள். தற்போது அஜித் நடிக்கும் சிறுத்தை சிவா இயக்கும் படத்தில் வில்லனாக கபீர் சிங் என்பவர் நடிக்கிறார். இவர் ஜில் என்ற தெலுங்குப் படத்தில் நடித்தவர். அஜித் படத்திலும் மிகவும் நாகரீக வில்லனாக மிரட்ட இருக்கிறாராம்.

இப்போ ரஜினி தலைப்பு சீஸன் போல

இது என்ன மாயம், வாகா படங்களைத் தொடர்ந்து விக்ரம் பிரபு, மஞ்சப்பை இயக்குநர் ராகவன் இயக்கத்தில் நடிக்கிறார். ரஜினி படத் தலைப்பான தனிக்காட்டு ராஜாவை தலைப்பாக வைத்துள்ளனர். ரஜினியின் தனிக்காட்டு ராஜாவுக்கு இசையமைத்த இளையராஜாதான் இந்த தனிக்காட்டு ராஜாவுக்கும் இசை.

இரு நாட்டு காதல் கதை

உடனடியாக தனது அடுத்த படத்தை ஆரம்பிக்க இருக்கிறாராம் மணிரத்னம். ஏற்கனவே அமீர்கானை வைத்து இயக்க திட்டமிட்ட லஜ்ஜோ படத்தை, தனுஷை வைத்து இந்தி மற்றும் தமிழில், உருவாக்கப் போகிறாராம். இது இந்தியா, பாகிஸ்தான் பிரிவினை காலகட்டத்தில் நடக்கும் காதல் கதையாம்.

மீண்டும் உருவாகிறது வீர தீர சூரன்

விஷ்ணு நடிக்க கரிந்திரன் இயக்கத்தில் உருவாக இருந்த படம் வீர தீர சூரன். சில காரணங்களால் நிறுத்தி வைக்கப்பட்ட இந்தப் படம் தற்போது மீண்டும் உருவாக இருக்கிறதாம். ஆனால் இயக்குவது கரிந்திரன் அல்ல, சகுனி இயக்குநர் சங்கர் தயாள். மெட்ராஸ் நாயகி கேத்தரின் தெரசாவை நாயகியாக்கி இருக்கிறார்.

மறுபடியுமா..?

சூர்யா நடிக்கும் 24 பட நாயகி சமந்தா. முதல் கட்டப் படப்பிடிப்பு முடிந்திருக்கும் இந்தப் படம் வெவ்வேறு காலகட்டங்களில் நடக்கும் மறுபிறவி பற்றிய படமாம்.

இஞ்சி இடுப்பழகி

ஏற்கனவே சில படங்களில் குத்துப் பாடலுக்கு நடனமாடி இருக்கிறார் ஸ்ருதிஹாசன். தற்போது தெலுங்கு மற்றும் தமிழில் உருவாகும் இஞ்சி இடுப்பழகி படத்திலும் ஒரு குத்துப்பாட்டுக்கு நடனமா இருக்கிறார். குண்டாக இருந்து இஞ்சி இடுப்பழகியாக மாறும் நாயகி அனுஷ்கா பற்றிய கதைதான் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதம் காத்த புதையல்

பரமார்த்த குருவும் சீடர் களும் படுத்துத் தூங்கிக் கொண்டு இருந்தார்கள்.

தூக்கத்தில், ஆகா! தங்கம்! வெள்ளி! வைடூரியம்! என்று உளறிக் கொண்டு இருந் தார், பரமார்த்தர்.

திடுக்கிட்டு எழுந்த சீடர்கள், குரு உளறுவதைக் கண்டு அவரை தட்டி எழுப்பினார் கள்.

தூக்கத்திலிருந்து விழித் துக் கொண்ட பரமார்த்தர், புத்தி கெட்டவர்களே! ஏன் என்னை எழுப்பினீர்கள்? அற்புதமான கனவு ஒன்று கண்டு கொண்டு இருந் தேன். கெடுத்து விட்டீர்களே! என்று சீடர்களைத் திட்டி னார்.

உடனே எல்லோரும் அவ ரைச் சூழ்ந்து கொண்டு கனவா? என்ன கனவு கண்டீர்கள்? என்று கேட் டார் கள்.

பரமார்த்தர், சிறிது நினைவு படுத்தி, புதையல்! புதை யல்! என்று கத்தினார்.

புதையலா? எங்கே? எங்கே? என்று குதித்தார்கள், சீடர்கள்.

பிறகு, சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, சீடர்களே, இந்த அறையின் பின்னால் உள்ள தோட்டம் தான் என் கனவில் வந்தது. தோட்டத்தின் சனி மூலையில் ஒரு பானை நிறைய பொன்னும் வெள்ளி யுமாய்க் கிடக்கிறது! என்று மெல்லக் கூறினார்.

அடேயப்பா! பானை நிறைய தங்கமா? என்று மகிழ்ச்சியால் கீழே விழுந்து புரண்டான் மட்டி. குருவே! இந்தப் புதை யலை வைத்துக் கொண்டு நாம் என்ன செய்வது? என்று கேட்டான் மூடன்.

அதற்குள் முட்டாள், நம் குருவுக்குப் பெரிய குதிரை யாக, அழகான குதிரையாக வாங்கலாமே! என்று பதில் சொன்னான்.

நாம் கூட ஆளுக்கு ஒரு குதி ரை வாங்கிக் கொள்ளலாம்! என்று மகிழ்ந்தான் மட்டி.

குருவே! இந்த இடம் சரியி ல்லை. இதை இடித்து விட்டு ராஜாவுக்குப் போட்டியாக அரண்மனை கட்ட வேண்டும்! என்று யோசனை சொன் னான் மூடன்.

இனிமேல் நமக்குக் கவ லையே இருக்காது.

தினமும் வடையும் பாயாசமுமாகச் சாப்பிடலாம்! என்று குதித்தான், மடையன்.

குருவே! அப்படியானால் நாம் எல்லோரும் இப்போதே ஓடிப் போய் அந்த இடத்தைத் தோண் டிப்பார்ப்போம் என்றான் முட்டாள்.

ஆமாம்! அதுதான் நல்லது. பகலில் தோண்டினால் ஊர் முழுவதற்கும் தெரிந்து விடும். அப்புறம் எல்லோரும் பங்கு கேட்பார்களே! என்றான் மடையன்.

மடையன் சொல்வதும் சரிதான். வாருங்கள், எல்லோரும் போய் இப்போதே தோண்டுவோம்! என்று தோட்டத்துக்குப் போனார்கள்.

வெளிச்சம் தெரிவதற்காகக் கை யில் கொள்ளிக் கட்டையைப் பிடித் துக் கொண்டு நின்றான், முட்டாள்.

யாராவது பார்க்கிறார்களா? என்று பார்த்து விட்டு, தம்மு டைய கைத்தடியால் ஓர் இடத்தில் வட்டமாகக் கோடு போட்டார், பரமார்த்தர். உடனே மட்டியும் மடையனும் வேகம் வேகமாக அந்த இடத்தைக் கையால் பரக் பரக் என்று தோண்ட ஆரம்பித் தார்கள்.

சிறிது நேரம் ஆனதும், கை எல்லாம் வலிக்கிறதே! என்று மூச்சு வாங்க உட்கார்ந்து விட்டனர்.

குருவே! புதையலை விடக் கூடாது! என்றபடி மூடனும், மண்டுவும் தொடர்ந்து பள்ளம் பறித்தார்கள்.

நான்கு பேரும் மாறி மாறி தோண்டிக் கொண்டே இருந்த போது, திடீரென்று வெள்ளையாக ஏதோ ஒன்று தட்டுப்பட்டது.

ஆ! புதையல்! புதையல்! என்று குதித்தபடி இன்னும் வேகமாகத் தோண்டினான், மட்டி.

உடனே பரமார்த்தர் குழிக்குள் கையை விட்டுப்பார்த்தார். உருண்டையாக ஏதோ ஒன்று கிடைத்தது.

எல்லோரும் ஆசையோடு அதை வெளிச்சத்தில் காட்டிப் பார்த் தார்கள்.

பரமார்த்தரின் கையில் இருந்தது ஒரு மண்டை ஓடு!

அவ்வளவுதான்! ஐயோ! ஐயோ! என்று அலறியபடி ஆளுக்கொரு பக்கமாக விழுந்தடித்து ஓடினார் கள்!!

ஏளனம் செய்யாதே!

மனிதர் வெறுக்கும் சேற்றிலே
மலர்ந்து நிற்கும் தாமரை;
புனிதமான கடவுளை
பூசை செய்ய உதவுதே!

அழுக்கடைந்த சிப்பியில்
அழகு முத்தைக் காணலாம்
கழுத்தில் நல்ல மாலையாக
கட்டி மகிழ உதவுதே!

கன்னங்கரிய குயிலிடம்
காது குளிரும் கீதமோ
இன்பம் இன்பம் என்று தாம்
இன்னும் கேட்க செய்யுதே!

விஷம் கொண்ட பாம்பிடம்
விலையுயர்ந்த இரத்தினம்
அடடா அந்த இரத்தினம்
மனிதருக்கும் கிட்டுமோ?

ஊசி போன்ற முள்ளிலே
உயர்ந்த ரோசா மலருதே
வீசி நல்ல மணத்திலே
விரும்பி அணியச் செய்யுதே!

மோசமான இடத்திலும்
மிகுந்த நல்ல பொருளுண்டு
யோசிக்காமல் எவரையும்
ஏளனம் நீ செய்யாதே!

வாங்க சிரிக்கலாம்

கபில் :- புத்தகத்துக்கும் கடிதத்துக்கும் என்ன வித்தியாசம்?

குபில் :- தெரியலையே..

கபில் :- புத்தகத்தைப் படிச்சுக் கிழிக்கிறோம். கடிதத்தைக் கிழிச்சுப் படிக்கிறோம்

தெரிந்து கொள்வோம்

- பூச்சி இனங்களில் அறிவு மிக்கது எறும்பு.
- உலகில் அதிக அளவில் கப்பல் போர்க்குவரத்து நடைபெறும் இடம், பனாமா கால்வாய்.
- விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் பிறந்த நாடு, ஜெர்மனி.
- திரவத்தங்கம் என்றழைக்கப்படுவது 'பெட்ரோலியம்'.
- தபால்தலையை வட்ட வடிவமாக வெளியிட்ட நாடு மலேசியா.
- உடலில் இரத்தம் பாயாத பகுதி கருவிழி.
- உலகின் மிகப்பெரிய பூங்கா கனடாவில் உள்ள 'உட் பபெல்லோ நாஷனல் பார்க்'.
- உலகின் மிகப்பெரிய உயிரியல் பூங்கா அமெரிக்காவில் உள்ள 'டொராண்டோ உயிரியல் பூங்கா'.
- இந்தியாவின் முதல் அணுமின் நிலையம் தாராப்பூரில் அமைக்கப்பட்டது.
- ஆப்பிரிக்கா கண்டத்தில் மட்டுமே வரிக்குதிரை காணப்படுகிறது.
- மேகங்களின் வீடு என்று அழைக்கப்படுவது மேகாலயா.
- ஆண்டுக்கு 365 நாட்கள் என்ற காலண்டர் முறையை முதலில் பயன்படுத்தியவர்கள்? - எகிப்தியர்.
- பயங்கரவாத எதிர்ப்பு தினமாக அனுசரிக்கப்படும் நாள் - மே 21

வர்ணம் தீட்டுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள்

குடிகார கணவனின்
உளறலில்
வாழ்கையை
புரிந்து கொள்ள
முடியாமல்
தள்ளாடும்
பெண்கள் !!!!!1
சந்தேக
கணவனின்
கேள்விக்கு
பதில் தேடி
வாழ்கையை
தொலைக்கும்
பெண்கள்!!!!!
சில முடிச்சுக்களை
போட்டு
பல விபரீத
முடிவுகளை
தருவதுதான்
திருமணமோ???? -நிர்மலா

அருகாமை

எத்தனையோ நினைத்து
வருகிறேன்
உன்னிடம் பேசவென்று
விடை கொடுத்தபின்தான்
நினைவில் வருகிறது.
அத்தனையும்!

என்
வார்த்தைகளையும்
உணர்வுகளையும்
விழுங்கிய
உன் அருகாமையில்
அறுந்து விழுகிறது.
எஞ்சிக்கிடந்த என் உக்கிரங்கள்

என்னைச் சுற்றிலும்
உனது கதிர்களின் ஊசிமுனைகளில்
கசிகிறது எனது காதல்

காதல் வித்தெடுத்துத் தூவிய
என் உயிர்நிலத்தில்
பிடுங்க பிடுங்க
முளைப்பதெல்லாம்
நீ!

மனச்செடிகளிலும் உள்ளதோ
அட்சய பாத்திரம் -வேல்,

பிரம்மனின் கடமை

பிரம்மனின் கடமை
உன்னைத் தவிர
மற்றப் பெண்களைக்
காணும் பொழுதெல்லாம்
பிரம்மன் கடமைக்கு
செய்திருப்பதை உணர்கிறேன்.....
என் தேவதையே
உன்னைக் காணும்பொழுது மட்டும்தான்
பிரம்மன் செய்த
கடமையை எண்ணி
வியந்து நிற்கின்றேன்!!!!!

-ஜித்யா

புலமைப் பெற்றுவிட்டேன்

எந்தப் பள்ளியிலும் பயிலவில்லை
எந்தக் கல்லூரியிலும் கற்கவில்லை
எந்தப் புலவரிடமும்
கற்றுத் தர சொல்லி நிற்கவில்லை!
ஆனாலும் புலமைப் பெற்றுவிட்டேன்
உன்
விழியசைவு, வெட்கம்,
மழலைச்சினுங்கல்
இவைகளை ரசித்த பிறகு!!!

-சுரேஷ்

என் காதல் கவிதையும் நீயும்.....

அன்பே..
நானும் நீயும்
வாழ்க்கையெனும்
ஓடத்தில் ஏறினோம்
ஓடம் கரை
சேர்வதும்
சேராததும்

எம் கையிலே..
அதற்குள்ளே
காதல்
கவிதைகள்பாடி
உன்னை நான்
கொச்சைப்படுத்த
விரும்பவில்லை

ஏனெனில்
கவிதைகள்..
வெறும்
வார்த்தைகளே இ.இசாக்



copyright: Valentina Pallas

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களுக்கு எதிரானதா பெண்ணியம்?

பொது வெளிகளிலும் ஊடகங்களிலும் பெண்ணியம் பற்றிய விவாதம் நடக்கும்போது ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகிறது. பெண்ணியம் என்றாலே ஆணுக்கு எதிரானது, ஆண்களை அடக்கியாள நினைப்பது அல்லது ஆண்களை முழுவதுமாக வெறுத்து ஒதுக்குவது என்ற கருத்து பரவலாக உள்ளது. குறிப்பாக இது ஆண்களிடமும், அவர்களே பெண்களுக்கான கருத்தையும் உருவாக்கும் அதிகாரத்தில் உள்ளதால் பெண்கள் பலரிடமும் உள்ளது. ஆண்களை எதிரிகளாகக் கருதுபவர்களாகவே பெண்ணிய வாதிகளைப் பொதுச் சமூகம் அடையாளப் டுத்தி வைத்திருக்கிறது.

பெண்ணியம் என்பது என்ன? முதலில் நடைமுறை சார்ந்து அதை அணுகிப் பார்க்கலாம். இன்று ஒரு பெண் படித்து முடித்து விட்டு வேலைக்குச் செல்கிறாள் என்றால், அதில் கூடப் பெண்ணியம் இருக்கிறது. ஏனென்றால் அந்த உரிமை கூடத் தொடர்ச்சியான சமூக சீர்திருத்தச் செயல்பாடுகளின் விளைவே.

நடைமுறை வாழ்க்கையில் பேருந்தில் தன்னை உரசிக்கொண்டே வரும் வக்கிர புத்திக்காரனை எதிர்கொள்ளும் நிலையில் அவளுக்குப் பெண்ணியம் உதவிக்கு வருகிறது. இன்றளவும் அவள் நள்ளிரவில் தனியாகச் செல்ல முடியாத நிலை நீடிக்கிறதெனில், 'காந்தி தேசத்தில்' பெண்ணுக்குச் சுதந்திரம் கிடைக்கவில்லை என்றுதான் பொருள்.

அந்த நிலையில் பெண்ணைத் தாயாக, தெய்வமாகப் போற்றுவதான வெற்றுக் கூச்சல்களைப் புறந்தள்ளி நிஜத்தை உணரக் கோருகிறது பெண்ணியம். இப்படி அன்றாட யதார்த் தங்கள், புத்தகங்களில் இருக்கும் பெண்ணியத் துக்கான வரையறைகள், சட்டப் புத்தகங்கள் பேசும் சமநீதி ஆகியவற்றைப் புறக்கணிக்கும் அல்லது கேலி செய்யும் நிலை சமூகத்தில் பலரிடம் உள்ளது.

மறுபுறம் அப்பாவின் 'அரவணைப்பில்' வளர்ந்து, அண்ணணின் 'பாசத்தில்' நனைந்து, கணவனின் 'காதலில்' திளைத்து வாழும் பெண்கள் பெண்ணிய மே தேவையில்லை என்கின்றனர். இத்தகைய பெண்கள் பெரும் பாலும் நடுத்தர வர்க்கத்தினர். இவர்கள் அனை வரும் ஆண்கள் 'கொடுத்த' சுதந்திரத் தைக் கொண்டு நன்றியோடு வாழ்பவர் கள். இவர்கள் வாழ்க்கையைச் சிக்கலாக் கிக் கொள்ள விரும்பாதவர்கள். ஆனால் 'அரவணைக்கும்' அப்பாவும், 'பாசம்' பொழியும் சகோதரனும், 'காதல்' கணவனும் எடுத்துக் கொடுக்கப் பெண்ணுரிமை என்பதும் சுதந்திரம் என்பதும் சமத்துவம் என்பதும் சுக்கோ மிளகோ இல்லை என்கிற புரிதலில் முகிழ்ப்பதுதான் பெண்ணியம். ஓர் ஆண் சினிமா பார்க்க இரவு நேரக் காட்சிக்குத் தன் நண்பர்களுடன் செல்ல முடியும். ஆனால் இன்றைய சூழலில் ஒரு பெண்ணால் அது முடியாது. ஓர் இளைஞன் தன் நண்பர்களுடன் வெளியூர் சென்று எத்தனை நாள்கள் வேண்டுமானாலும் தங்கிவிட்டு வரலாம். ஆனால், ஓர் இளம் பெண் அவ்வாறு செய்ய முடியாது. வேலை நிமித்தமா கவோ கல்லூரிச் சுற்றுலாவுக்கோ சென்றாலும் கூட அதற்கான பயண அட்டவணை, அவள் உடன் செல்பவர்கள் குறித்த விவரங்கள் ஆகியவை அவளின் பெற்றோர் கையில் இருக்கும். இது என்ன சின்ன விஷயம்தானே என்று புறக்கணித்து விடலாம். ஆனால் இதில் நுட்பமான உடல் அரசியல் அடங்கியுள்ளது.

ஒரு பெண்ணின் உடலானது குடிப் பெருமை, குலப்பெருமை, சமயம், சமுதாயம் ஆகியவற்றின் பெருமை அனைத்தையும் சுமந்து திரியும் தெய்வீக வஸ்து. அப்படி எல்லாம் எந்தக் கடமையும் ஆணுக்கு விதிக்கப்படவில்லை, அல்லது அந்த விதிக்கு விசுவாசமாக ஒரு ஆண் இருக்கவும் தேவை இல்லை.

சொத்துடமைச் சமுதாயம் தோன்றிய காலத்தில் 'கற்பு எனும் திண்மை' முதன் முதலாக ஆண் வாரிசு முறையை உத்தரவாதப்படுத்த உருவாகி நிலை பெற்றதாகச் சமூக அறிவியல் தெரிவிக்கிறது. தனக்குப் பிறகு தன் சொத்துக்கள் யாருக்குப் போய்ச் சேருமோ அவர்கள் தன் குழந்தை களாக இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்துகொள்ளவே பெண் ணுக் குக் கற்பொழுக்கம் வலியுறுத் தப்பட்டது. அதோடு இன்னொரு விஷயமும் நடந்தது.

திருமணம் செய்துகொண்டு 'வேறு வீட்டுக்கு'ச் சென்றுவிடும் பெண்ணுக்குச் சொத்துரிமை கிடையாது என்ற விதியும் ஏற்படுத்தப்பட்டது. பெண்ணுக் குச் சொத் தில் பங்கு கிடையாது. அவள் ஆணின் சொத்து. அவளைப் பணம் கொடுத்து, வாங்கிக் கைமாற்றிக் கொள்ளலாம்.

பொருளாதார ரீதியில் குடும்பத்தைக் காக்க ஓர் ஆண் மகன் வேலைக்குச் சென்றால், அந்தக் குடும்பம் தலையெடுத்துவிட்டது என்கிறது சமுதாயம். அதே குடும்பப் பொருளா தார நிலையைச் சமாளிக்க ஒரு பெண் வேலைக்குச் சென்றால், அது சமுதாயத்தால் 'பரிதாபத் துக்குரிய' நிலையாகப் பார்க்கப்படுகிறது. சமயத் தலைவர்கள் சிலர் ஒரு படி மேலே போய் 'வேலைக்குப் போகும் பெண்கள் ஒழுக்கம் கெட்டவர்கள்' என விஷம் கக்குகின்றனர்.

19ஆம் நூற்றாண்டுவரை பெண்கள் கல்வி கற்பதே மிகப் பெரிய விஷயமாக இருந்தது. இன்று ஓரளவு கல்வியும் வேலைவாய்ப்பும் பெண்களுக்குக் கிடைத்துள்ளன. இந்த மாற்றங்களைப் பலர் எரிச்சலோடும், சிலர் நிறைவோடும் பார்க்கிறார்கள். ஆனால் பெண்கள் போக வேண்டிய தூரமோ ஒளி வேகப் பயணத்தைக் கோருகிறது.

பெண்ணுரிமை பேசும் சில பெண்கள், ஆண்களுக்கும் பொதுச் சமூகத்துக்கும் எதிராக முன்வைக் கும் விமர்சனங்களில் சமநிலை தவறியிருக்கலாம். அதை வைத்துக் கொண்டு ஒட்டுமொத்த பெண் ணுரிமைக் கோரிக்கை களையும் சிறுமைப்படுத்த முயல்வதும் பெண்ணை அடிமைப்படுத்தும் செயலாகவே அமையும்.

பெண்ணுரிமை, பெண்நிலைவாதம், பெண்ணியம் என்பவை அடிப்படையில் சம உரிமைக்கான குரல்கள்தான். இதைப் பெண்கள் மட்டும்தான் எழுப்ப வேண்டும் என்பதில்லை. கல்வி, வேலை, இலட்சியம், பொழுதுபோக்கு, திருமணம், பாதுகாப்பு, நடமாட்டம் என அனைத்திலும் ஆணுக்குக் கிடைக்கும் உரிமைகளும் சுதந்திர மும் பெண்ணுக்கும் கிடைக்க வேண்டும். இது ஆண்களின் உரிமை யைப் பறிக்கும் நோக்கம் கொண்டதல்ல. ஆணுக்கு எதிரானதுமல்ல.

பெண்கள் தங்கள் உரிமையை உணர்ந்து, சமுதாயத்தில் அதனைத் தக்க வைத்துக்கொள்ளவும், பால் சமத்துவத்துக்குப் போராடவும் உதவும் ஒரு வழிகாட்டியே பெண் ணியம். நியாய உணர்வும் சமத்துவத்தில் நம்பிக்கையும் கொண்ட ஆண்களும் இணைந்து பாடுபட வேண்டிய இலட்சியம் இது.

பெண்கள்

♦ 5 நிமிடத்தில் ஒரு பெண் சமாதானம் ஆகிறாள் எனில், அது தாய்.

♦ 15 நிமிடத்தில் ஒரு பெண் சமாதானம் ஆகிறாள் எனில், அது சகோதரி.

♦ 30 நிமிடத்தில் ஒரு பெண் சமாதானம் ஆகிறாள் எனில், அது தோழி.

♦ 3 மணி நேரத்துக்கு மேலாகியும் சமாதானபடுத்த முடிய வில்லை யெனில், அது காதலி

♦ உனக்கு சமாதானம் செய்யும் சந்தர்ப்பம் கூட கிடைக்க வில்லை யெனில் அது மனைவி.

அசோக வனங்களில்

இந்தச் சீதைகள்
கடத்தப்படுவதில்லை
தாமே கட்டிக்கொள்கிறார்கள்.
ராமன்களோ
விற்கப்படுகிறார்கள்

நாடுகளே காடுகளானபின்
ஆயுள் யாத்திரை
முன் வாசலுக்கும்
பின் வாசலுக்கும்

அசோகவனம்
இருக்கிறது
மறைவாய்
ஒவ்வொரு வீட்டின்
பின்புறத்தில்

முற்றத்து ராமன்கள்
கொல்லைப்புறத்தில்
இராவணன்கள்

மீட்புப் போராட்டம்
சீதைக்கும் இராமனுக்கும்

எதிர்காலத் தீபிளம்பில்
தள்ளிவிடப்படுறார்கள்
லவனும் குசனும்

இதில் மீண்டு வந்து
தன்னை
நிரூபித்துக்காட்டுகிறது
பண்பாடு,
கலாச்சாரம்
என்ற போர்வையில்
சுத்த ஆதிக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தம வில்லன் – ஓர் பார்வை

தன்னைத் தானே சுயபரிசோதனை செய்து கொள்ளும் பக்குவம் அல்லது தைரியம் எத்தனை கலைஞர்களுக்கு இருக்கிறது.. வெகு அரிதான சிலரால் மட்டும்தான் அதை நினைத்துப் பார்க்கக் கூட முடியும். கமல் அப்படி ஒரு அரிதான கலைஞன், படைப்பாளி. உத்தம வில்லன் கமலின் நடிப்பு வாழ்க்கையில் ஒரு சுயபரிசோதனை முயற்சி. இது என் சொந்த வாழ்க்கையின் சில பகுதிகள் தான் என சொல்லிவிட்டுப் படமாக்கும் துணிச்சல் எவருக்கு இருக்கும்! இந்தப் படத்தின் 'எடிட்' செய்யப்படாத முழுமையான வடிவத்தைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது.

இப்போது வெளியாகி இருக்கும் பிரதிகளில் சில பகுதிகள் நீக்கப்பட்டிருக் கலாம். ஆனால் அப்படி நீக்க வேண்டிய அவசியமே இல்லை. கமலை அவ்வளவு ரசிப்பார்கள், மூன்று மணிநேரத்தையும் தாண்டி ஓடும் அந்த முழுமையான பிரதியைப் பார்த்தாலும். தமிழ் சினிமா ரசிகன் மீது கமல் வைத்திருக்கும் அபார நம்பிக்கை ஆச்சர்யப்படுத்துகிறது. தன் ஒவ்வொரு படத்திலும் அவனை அடுத்த தளத்துக்கு தன்னோடு பயணப்பட வைக்கும் முயற்சி அவருடையது. உத்தம வில்லன் மிகச் சிறந்த படம் என்று சொல்ல வரவில்லை. ஆனால் மிக மிகச் சிறந்த முயற்சி. அதில் அவர் எந்த அளவு வெற்றி பெற்றிருக்கிறார்? பார்க்கலாம்..

மனோரஞ்சன் என்ற முதல்நிலை நடிகன், ஒரு கலைஞனுக்கே உரிய அத்தனை பலம், பல வீனங்கள் கொண்ட வன். காதலித்தது ஒருத்தியை, அவளைக் கைப்பிடிக்க இயலாத சூழலில், சுய லாபம் கருதி திருமணம் செய்து கொண்டது வரலட்சுமியை (ஊர்வசி). மாமனார் பெரும் சினிமா தயாரிப்பாளர் பூர்ணச்சந்திர ராவ் (கே விஸ்வநாத்). ஆரம்பத்திலிருந்தே தலைவலியால் அவதிப்படும் மனோரஞ்சனுக்கு, தன்னை கவனித்துக் கொள்ள வரும் டாக்டரான அர்ப்பனாவு டன் இரகசிய காதல் வேறு. ஒரு படத்தின் வெற்றி விருந்தில், மனோரஞ்சனைச் சந்திக்கிறார் ஜக்காரியா (ஜெயராம்). உங்களுக்கு ஒரு மகள் இருக்கிறாள்.. என ஒரு தகவலைச் சொல்லிவிட்டுப் போக, பரபரப்புடன் அடுத்த முறை ஜக்காரியாவைச் சந்தித்து விவரங்கள் கேட்கிறான். அப்போதுதான் தான் காதலித்து தன்னால் கர்ப்பமான யாமினி, மாமனார் பூர்ணச்சந்திரராவால் மிரட்டப்பட்டு துரத்தப்பட்டதும், அவளை ஜக்காரியா திருமணம் செய்து கொண்டு, மனோரஞ்சன் குழந்தையை தன் குழந்தையாக வளர்ப்பதையும் தெரிந்து கொள்கிறான். மனம் அனலில் விழுந்து துடிக்க, மகளைப் பார்க்க ஆர்வமா கிறான். மகள் மனோன்மணி வேண்டா வெறுப்பாக மனோரஞ்சனை வந்து பார்க்கிறாள். மிக உணர்ச்சிப்பூர்வமான அந்த சந்திப்பின் முடிவில் மயங்கிச் சரிகிறான் மனோரஞ்சன். அடுத்த சில தினங்களில் ஆதிசங்கரர் படத்துக்காக தான் வாங்கிய முற்பணத்தைத் திருப்பித் தரச் சொல்கிறான் மனோரஞ்சன். தன் மாமனாரின் பரம விரோதியாகக் கருதப்படும் இயக்குநர் - தன் குரு மார்க்கதரிசியைச் (கே பாலச்சந்தர்) சந்தித்து தனக்காக ஒரு படம் செய்யுமாறு கேட்கிறான். மறுக்கிறார் மார்க்கதரிசி. கெஞ்சுகிறான் மனோ.. சரி கதை இருந்தால் பண்ணலாம் என அவர் சொல்ல, ஒரு கதை சொல்கிறான் மனோ. கதைப்படி நாயகனுக்கு மூளையில் கட்டி என மனோ சொல்ல, 'நிறுத்துடா.. இது தமிழ் சினிமாவில் அடிச்சு துவைச்ச கதையாச்சே.. நீயே நாலு படம் நடிச்சிட்டியே! என்கிறார். அப்போதுதான் அது கதையல்ல, தன் நிஜம் என மனோ சொல்ல அதிர்ந்து, உடைந்து போகிறார் மார்க்கதரிசி. தன் சிஷ்யன் கேட்டுக் கொண்டபடி ஒரு படம் எடுக்கிறார். அதுதான் உத்தமவில்லன். 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சாகாவரம் பெற்ற தெய்யாட்டக் கலைஞன் உத்தமன் (கமல்) - பேராசை மன்னன் முத்தரசன் (நாசர்) - அடிமை இளவரசி கற்பகவள்ளி (பூஜா குமார்) இவர்களின் கதை படமாகிறது. அந்தப் படம் எடுத்து முடிக்கப்பட்டதா? மரணத்தின் விளிம்பிலிருந்து மனோரஞ்சன் மீண்டானா என்பது 'க்ளைமாக்ஸ்'. ஒவ்வொரு காட்சியிலும் அத்தனை நேர்த்தி. படத்தின் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க வரும்

மனோரஞ்சன், 'பாத்ரூமில்' குழித்துவிட்டு மயங்கி விழுந்து கிடக்கிறார். அதைப் பார்த்து அதிரும் காவலரும் முகாமையாளர் சொக்குவும், மனோவைத் தூக்கி கழிவறைத் தொட்டிமீது அமர்த்துகிறார்கள். அப்போது மனோவின் முதுகு 'ப்ளஷ் டாங்கில்' அழுந்த, நீர்ப் பீச்சயடிக்கும் சத்தம்... மகளை முதன் முதலில் சந்திக்கிறான் மனோ.. அந்த சந்திப்பின் முடிவில் எழுந்து நிற்க முயல, அப்படியே நிலைதடுமாறி மயங்கி தடாலென தரையில் விழுவதை அத்தனை தத்ரூபமாக படமாக்கியிருப்பார்கள். இப்படி ஒன்றல்ல, இரண்டல்ல.. ஏகப்பட்ட காட்சிகள். தனக்கு 'கான்சர்' என்பதை மகனிடம் நேரடியாகச் சொல்லாமல், பந்து விளையாடிக் கொண்டே சொல்லும் காட்சியில் கலங்கி கண்ணீர் சிந்தாதவை கண்களல்ல! 'கான்சர்' நோயை மையமாக வைத்து படமெடுக்கும் ஜடியா இரசிகர்களால் விமர்சிக்கப்படும் முன்பே, தன் குருநாதரை வைத்து கிண்டலடித்து, அதையும் ஏற்க வைத்திருப்பதுதான் கமல் 'ஸ்டைல்'.

படத்தில் கமல் வேறு, மனோரஞ்சன் வேறு என பிரித்துப் பார்க்க முடியாத மனநிலை இரசிகர்களுக்கு. ஒப்பனைகளற்ற நிஜ நடிகனாகவே அவர் வருவதால், அவர் வயது, ஒப்பனை பற்றியெல்லாம் எந்த உறுத்தலும் வரவில்லை. நடிப்பில் அவரது மிகச் சிறந்த பத்துப் படங்களில் ஒன்றாக உத்தம வில்லனைச் சேர்க்கலாம். கமலுக்கு வந்த நோய் பற்றித் தெரிந்ததும் மனைவி ஊர்வசி மயங்கி விழுந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பிறகு, அவர் மீதான காதலை கமல் சொல்ல, அருகிலேயே அவரது இரகசியக் காதலி நிற்க.. அந்த நெருக்கடியான நிமிடங்களை கமலை மாதிரி அநாயாசமாக யாராலும் கையாள முடியாது.

சிஷ்யனின் வாழ்நாள் எண்ணப்படும் உண்மையை ஜீரணிக்க முடியாமல், தானும் அவனும் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப் படங்களை தொட்டுத் தடவி அந்த தருணங்களை பாலச்சந்தர் நினைவு கூரும் அந்தக் காட்சி அத்தனை நெகிழ்ச்சி. ஒவ்வொரு பாத்திரமும் அத்தனை கச்சிதமாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. (அந்த டிவி தொகுப்பாளினிதான் 'ஓவராக்டிங்' பண்ணி சொதப்புகிறார்... ஒருவேளை ஏதாவது குறியீடோ!). நாயகிகளில் முதலிடம் சந்தேகமின்றி ஊர்வசிக்குத்தான். ஒரு உச்ச நடிகனின் நடுத்தர வயது மனைவியாக... நடிப்பு ராட்சஸிதான் இவர்! ஹீரோவின் இரகசிய காதலியாக வரும் ஆன்ட்ரியா. அந்தக் காதல் இரகசியம் யாருக்கும் தெரியக் கூடாது என சத்தியம் வாங்கும் இடத்தில் இரசிகர்கள் மனதில் நிற்கிறார். ஒரு நடிகையாகவே இதில் வரும் பூஜா குமாரின் நடன அசைவுகளும், அழகும் அந்தக் காட்சிகளை திருப்பிப் பார்க்க முடியுமா என கேட்க வைக்கின் றன. இயக்குநர் பாலச்சந்தர் 'அவராகவே' வந்து மனதை கனக்க வைக்கிறார். கே.விஸ்வநாத்தின் கம்பீரமும் திமிரும், உன்னைக் கொன்னுடுவேன் என மருமகனை மிரட்டும் தோரணையும்.. அபாரம். ஜெயராம் மீது மிகப் பெரிய மரியாதையை வரவைக்கும் பாத்திரம் ஜக்காரியா.

சொக்குவாக வரும் எம்எஸ் பாஸ்கரை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியிருக்கிறது இந்தப் படம். குரூர கோமாளி மன்னனாக வரும் நாசர், அவரது கைத்தடி அமைச்சர்களாக வரும் ஞானசம்பந்தன், சண்முகராஜன் என அனைவருமே கச்சிதமாக நடித்திருக்கிறார்கள். நகைச்சுவைப் படத்துக்காக எடுக்கப்படும் உத்தமன் கதை, காட்சிகளில் நகைச்சுவையே இல்லை என்பதைச் சொல்லாமல் விட முடியாது. அதுவும் உத்தமனாக வரும் கமலின் தோற்றம், முகம், அதில் பிதுங்கி நிற்கும் கண்கள்... பிடிக்கவில்லை. ஹிரண்யன் நாடகத்தை அப்படியே தலைகீழாக்கி, நரசிம்ம அவதாரத்தைக் கொன்றிருக்கிறார்கள். அதற்கு எத்தனைபேர் கிளம்பப் போகிறார்களோ... காட்சிகளில் அத்தனை நேர்த்தியாக எடுத்திருக்கும் கமலும் குழுவினரும், பாம்பும், புலியும், எலியும், புறாக்களும் 'க்ராபிக்ஸ்' என்பதை குழந்தை கூட கண்டுபிடித்துவிடும் அளவுக்கு மிகச் சாதாரணமாக விட்டுவிட்டது ஏனோ? ஷம்தத்தின் ஒளிப்பதிவு பிரமாதம். ஜிப்ரானின் இசையில் இரண்டு பாடல்கள்தான் கேட்கும்படி உள்ளன. பல காட்சிகளில் பின்னணி இசை இல்லை. ஒலிக்கும் சில காட்சிகளில் பரவாயில்லை எனும் அளவுக்குதான் உள்ளது. 8ஆம் நூற்றாண்டுக் காட்சிகளில் இசை அந்த காலகட்டத்துடன் ஒட்டவில்லை. வசனங்கள் யார் என குறிப்பிடவில்லை. கமல் என்றே வைத்துக் கொள்ளலாம். திரைக்கதையும் வசனமும் இந்தப் படத்தின் வெற்றியில் பிரதான பங்கு

வகிக்கின்றன. படம் பார்த்து முடித்தபோது, கமலுடன் ஒரு நீண்ட தூரப் பயணம் போய் வந்தது போன்ற உணர்வு, மறுமுறையும் பயணிக்கத் தூண்டும் உணர்வு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார ராசி பலன்

06.04.2015 ~12.05.2015

மேஷம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

அக்கம் பக்கத்தவருடன் கூடுதல் அன்பு வளரும். அனுபவ அறிவை பயன்படுத்தி சில நன்மை பெறுவீர்கள். உடன் பிறந்தவரின் செயலை குறை சொல்ல வேண்டாம். வாகனத்தில் பராமரிப்பு தேவைப்படும். புத்திரர் படிப்பு, வேலையில் கூடுதல் அக்கறை கொள்வர். எதிர்மறையானவற்றை சரி செய்வீர்கள். இல்லறத் துணை, உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவார். தொழிலில் வளர்ச்சி பெற, புதிய அணுகுமுறை உதவும். பணியாளர், தங்களின் கடமையை உணருவர். பெண்கள், சிக்கனம் பின்பற்றுவர்.

ரிஷபம்

கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

பொறாமை குணம் உள்ளவர்களிடம் விலகுவது நல்லது. குடும்பச் செலவுக்காக பணம் கடன் பெற வேண்டியதிருக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரரின் செயல் சிறப்பு பெற ஆலோசனை சொல்வீர்கள். உடல்நலம் ஆரோக்கியம் பெறும். இல்லறத் துணை, நீங்கள் விரும்பிய பொருள் வாங்கித் தருவார். தொழில், வியாபாரத்தில் லாப விகிதம் குறைப்பதால் சில நன்மை உண்டு. பணியாளர், குடும்ப நலன் கருதி செயல்படுவர். பெண்கள், கணவர் வழி உறவினர்களிடம் நற்பெயர் பெறுவர்.

மிதுனம்

மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

விவகாரங்களில் சுமுகத்தீர்வு கிடைக்கும். தாய்வழி சொந்தங்களின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தர வேண்டும். புத்திரர் நற்செயலால் பெருமை தேடித் தருவர். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். இல்லறத் துணை ஒற்றுமை கொள்வார். தொழில் வளர அன்பு நிறைந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். பணியாளர், பாராட்டு, வெகுமதி பெறுவர். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள், கருத்து பரிமாற்றத்தில் ஈடுபடுவர்.

கடகம்

புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

குடும்ப உறுப்பினர்கள் கூடுதல் அன்பு பாராட்டுவர். பொன், பொருள், புகழ் நல் உழைப்பால் வந்து சேரும். சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள். புத்திரரின் மனக் குறையை மாற்றுவீர்கள். இல்லறத் துணையுடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில் சிறக்க அரசு உதவி பெறலாம். பணியாளர், கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்றுக் கொள்வர்.

சிம்மம்

மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்

புத்திரர் நண்பருக்கு இணையாக கருத்து சொல்வர். எதிரி சொந்த சிரமங்களால் விலகுவார். இல்லறத் துணையின் மனதில் நம்பிக்கையை வளருங்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். பணியாளர், நிர்வாகத்தின் வழிகாட்டுதலை ஏற்பதால் நன்மை வளரும். பெண்கள், பணப் பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள், ஒவ்வாத உணவு தவிர்க்கவும்

கன்னி

உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்

கால்நடை வளர்ப்பில் லாபம் கூடும். சிலர், புதிய வீடு வாங்குகிற முயற்சி நிறைவேறும். புத்திரருக்கு நல்ல நண்பர் உதவியாக வருவர். உடல் நலம் ஆரோக்கியம் பெறும். இல்லறத் துணை குடும்ப நலம் பேணுவார். தொழில், வியாபாரத்தில் குறுக்கீடு வந்து விலகும். பணியாளர், புதிய தொழில்நுட்பம் அறிந்து கொள்வர்.

துலாம்

சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும். புத்திரர் கடந்த கால தவறுகளை சரி செய்வர். உடல் ஆரோக்கியம் பெற சத்தான உணவு உண்பீர்கள். இல்லறத் துணை வழி சார்ந்த உறவினர் உதவுவர். தொழில், வியாபாரத்தில் உள்ள குறுக்கீடுகளை அகற்றுவீர்கள். பணியாளர், கூடுதல் பணி வாய்ப்பை ஏற்பர். பெண்கள், சேமிப்பு பணத்தில் பொருட்கள் வாங்குவர். மாணவர்கள் பாதுகாப்பு குறைந்த இடங்களில் செல்லக் கூடாது.

விருச்சிகம்

விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

இயன்ற அளவு தானம், தர்மம் செய்வீர்கள். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், பணவரவும் கூடும். புத்திரரின் எதிர்கால வாழ்வுக்கு உரிய பணிபுரிவீர்கள். எதிர்மறையானவை விலகும். இல்லறத் துணையின் செயல் குளறுபடியாகலாம். தொழில், வியாபாரத்தில் லாப விகிதம் கூடும். பணியாளர், நற்பெயர் பெறுவர். பெண்கள், புத்தாடை அணிகலன் வாங்க அனுகூலம் உண்டு. மாணவர்களுக்கு நண்பரின் உதவி கிடைக்கும்.

தனுசு

மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்

நம்பகத்தன்மை இல்லாதவருக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரருக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவு தருவதால், ஆரோக்கியம் மேம்படும். எதிர்ப்பாளரிடம் விலகுவது நல்லது. இல்லறத் துணையின் நற்செயலை பாராட்டுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர், பணியிடத்தில் அதிகம் பேச வேண்டாம். பெண்கள், பணச்செலவில் சிக்கனம் பின்பற்றவும். மாணவர்கள், சாகச விளையாட்டில் ஈடுபடக் கூடாது.

மகரம்

திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்

தன்னை சார்ந்தவர்களுக்கு உதவுவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். வாகன பயன்பாடு சுமாராக இருக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். உடல்நலம் பெற மருத்துவ சிகிச்சை உதவும். இல்லறத் துணை ஆலோசனை சொல்வார். தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். பணியாளர், குறித்த காலத்தில் பணி இலக்கு நிறைவேற்றுவர். பெண்கள், உறவினர் சுப நிகழ்ச்சிக்கு உதவுவர். மாணவர்கள், புதியவர்களிடம் சில நன்மை பெறுவர்.

கும்பம்

அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள்

நண்பரிடம் பெற்ற உதவிக்கு மறு உபகாரம் செய்வீர்கள். முருகப் பெருமானின் நல்லருள் துணை நிற்கும். வீடு, வாகனத்தில் அபிவிருத்தி உண்டு. புத்திரரின் திறமையை வியந்து வாழ்த்துவீர்கள். காலமுறை உணவுப் பழக்கம் உடல் நலம் பாதுகாக்கும். இல்லறத் துணை உங்களின் பணி சிறக்க உதவுவார். தொழிலில் லாப விகிதம் கூடும். பணியாளர், கூடுதல் வேலைவாய்ப்பு சன்மானம் பெறுவர். பெண்கள், பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள், இயற்கை அழகை நேசிப்பர்.

மீனம்

பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

சமூகத்தில் மதிப்பு, மரியாதை கூடும். வீடு, வாகன பாதுகாப்பில் உரிய கவனம் வேண்டும். புத்திரரின் சொல் வேதங்களின் கருத்துக்களை பிரதிபலிக்கும். கண்களுக்கு எளிய பயிற்சியும், தகுந்த ஓய்வும் தர வேண்டும். இல்லறத் துணை நல்லன்பு கொள்வார். தொழில் சிறக்க, இஷ்ட தெய்வ அருள் துணை நிற்கும். பணியாளர், பணித்திறன் வளர்த்துக் கொள்வார். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் அவமதித்து பேசுபவரிடம் விலகவும்

சுதந்திர வேட்கை

விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு புதிவு 84

● அடேல் பாலசிங்கம்



அவற்றை அவர் எடுத்துச் சென்று, துவைத்துக் கொண்டு வருவார். அழுக்கு நீர் உள்ள சிறிய குளங்களில் தோய்க்கிறாரோ, நோய் ஏதும் தொற்றிக் கொள்ளுமா, என்று கவலை இருக்கும். ஆனால் ஆடைகளைக் கழுவி , மடித்து, பெட்டிபோட்டு அவர் எடுத்து வரும்போது எனது கவலை பறந்து விடும்.

இவற்றையெல்லாம் விட, புதிய காய்கறி, உடன் மீன், இறைச்சி ஆகியவற்றுக்காக அன்றாடம் கடைத் தெருவுக்குப் போக வேண்டும். இத்தகைய அன்றாடச் சிறிய சிறிய பணிகள் பெண் மீதான சுமையாகி, அவள் பலம் உறிஞ்சப்பட்டு , அவள் சிந்தனை வளர்ச்சியும், மந்தமாகி, அன்றாட வாழ்க்கையே அவளுக்கு சிரமம் ஆக்கி விடும். சமூகச் சூழலே சிந்தனையைத் தீர்மானிக்கிறது என்று கூறும் மார்க்சிய சிந்தாந்தத்தை நான் அடிக்கடி நினைவு கூருவேன். இங்கு, மார்க்ஸ் கூறுவது முற்றிலும் உண்மையே என்றும் முடிவு செய்தேன். இடையறா வீட்டு வேலைச் சுமை காரணமாக, உயர் சிந்தனைக்கு இடம் இருப்பதில்லை. இந்தியாவிலே வசதியான பெண்கள் வீட்டு வேலைக்காரரரை வைத்திருக்க விரும்புவதன் நோக்கமும் தெளிவாகியது. வீட்டுப் பொறுப்பு அனைத்தையும் பொறுப்பான ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று மனக் கோட்டை கட்டுவேன். ஆனால் எனக்கு அந்த வாய்ப்பு என்றுமே கிடைத்ததில்லை.

இன்னொரு பெண் எனக்காகச் சமைத்து , வீட்டைச் சுத்தப் படுத்துவது எனக்குச் சிறிதும் பிடிக்காத ஒன்று. வீட்டில் உள்ள எல்லோருமே அந்த வீட்டுக்கான பணிகளைப் பங்கிட்டுச் செய்ய வேண்டும் என்பது தான் என்றுமே எனது நிலைப்பாடு. இரண்டாவதாக , வீட்டு வேலைக்காக அமர்த்தப்படும் இந்தப் பெண்களுக்குக் குறைந்த சம்பளம் வழங்கி, அவர்களைச் சுரண்டுவதிலும் , எனக்கு விருப்பம் இல்லை. இனி பலர் செய்வது போல, மிகக் குறைவான சம்பளத்தில் சிறுமி ஒருத்தியை பணிக்கு அமர்த்துவதையும் என்னால் சிறிது கூட ஏற்க முடியவில்லை. ஒவ்வொரு நாளும், அதிகாலையில் வீட்டு விறாந்தையில் அமர்ந்து தேனீர் பருகும் போது , என் கண் முன்னே இரண்டு காட்சிகள் விரியும். ஆறில் இருந்து பத்து வயது வரையான சிறுமிகள் வீட்டு வேலைக்காரி களாக , தங்கள் குடிசைகளிலிருந்து போவது ஒரு காட்சி. வசதியான குடும்பத்துச் சிறுமிகள் கச்சிதமாகச் சீருடைய அணிந்து தங்கள் வீடுகளில் இருந்து பள்ளி செல்வது இன்னொரு காட்சி. அதிலும் வறிய சிறுமி ஒருத்தி, வசதியான வீட்டில் இருந்து பள்ளி செல்லப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் தனது சம வயதுச் சிறுமிக்காக உணவு தயாரிக்க ,வீட்டு வேலைக்காரியாக அங்கே செல்லும் காட்சி, அந்தச் சமுதாய முரண்பாட்டைத் தோலுரித்துக் காட்டும். பள்ளி செல்லும் தனது சம வயது முதலாளிக்காக வீட்டு வேலைக்காரியான அந்தச் சிறுவயதுத் தொழிலாளி, அவருடைய சீருடையைத் தோய்க்கும் சடங்கும் அங்கு நடைபெறும்.

(பதிவு தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புருஜோத்தமன் தங்கமயில்

19 வெற்றி தோல்வி

நீண்ட இழுபறிகளுக்குப் பின், 174 திருத்தங்களுடன் 19ஆவது திருத்தச் சட்டம் கடந்த வாரம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் அரசியலமைப்புத் திருத்தமொன்று 211 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்ட முதலாவது சந்தர்ப்பமாக இதனைக் கொள்ள முடியும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகார எல்லைகளை மட்டுப்படுத்தி நாடாளுமன்றத்துக்கும் அமைச்சரவைக்கும் அதிகாரங்களைப் பகிரும் முகமாகவே, 19ஆவது திருத்தச் சட்டம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தேசிய அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டது. ஆனால், குறித்த அரசமைப்புத் திருத்தத்தை, எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்ட பெருமளவான (111) மாற்றங்களைச் செய்த பின்னரே நிறைவேற்ற முடிந்திருக்கின்றது.

இதனை, தேசிய அரசாங்கத்தின் தோல்வியாகவே கருதப்படுகின்றது. ஆனால், அந்தத் தோல்வியைத் தாண்டிய வெற்றியொன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பெற்றிருக்கின்றார்கள் என்றும் கொள்ள முடியும்.

மைத்திரிபால சிறிசேனவின் அரசியல் வாழ்வில் கடந்த ஜனவரி மாதம் 08ஆம் திகதி பெற்றுக் கொள்ளப்பட்ட ஜனாதிபதி தேர்தல் வெற்றி, அவர் என்றைக்குமே எதிர்பார்க்காத ஒன்று. ஆனால், அந்த வெற்றியைத் தாண்டி தன்னுடைய பெயரை வரலாற்றில் பதிவு செய்வதற்கான சந்தர்ப்பத்தை 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிய தனூடு அவர் செய்திருக்கின்றார்.

ஜனாதிபதி பதவியை அடைவதற்கு ரணசிங்க பிரேமதாஸ, சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் மேற்கொண்ட பிரயத்தனங்களில் ஒப்பீட்டு அளவில் குறைந்தளவைக் கூட மைத்திரிபால சிறிசேன செய்திருக்கவில்லை. ஜனாதிபதி வேட்பாளராக தன்னை முன்னிறுத்த ஒப்புக்கொண்டது மட்டுமே அவர் மேற்கொண்ட கத்தி முனைத் தீர்மானம். மற்றப்படி, அவருக்கான வெற்றியை பொது எதிரணியும் இளைஞர்களும் வெளிநாடுகளும் ஊடகங்களும் இணைந்து பெற்றுக் கொடுத்தன.

எனினும், தனக்குக் கிடைத்த வெற்றியை வைத்துக் கொண்டு அதிகாரங்களைப் பெருக்கிக் கொள்ளும் சந்தர்ப்பம் மைத்திரிபால சிறிசேனவுக்கும் வாய்த்தது. அவர் அதனைச் செய்யாமல், ஜனநாயக விழுமியங்கள் மீது தான் கொண்ட நம்பிக்கையை வெளிப்படுத்தியிருக்கின்றார். இதனை மக்கள் ஜனநாயகத்தின் குறிப்பிடத்தக்க வெற்றியாகக் கொள்ள முடியும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கம், 1978ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய அரசியலமைப்புத் திருத்தங்களுக்கு அமைய, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. சுமார் 37 வருடங்களாக அந்த முறையின் கீழே இலங்கை ஆளப்பட்டிருக்கின்றது.

நாடாளுமன்றம் மற்றும் நீதிமன்றங்களின் சுயாதீனங்களில் தலையீடு செய்யுமளவுக்கான தனிநபர் ஆளுகையை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை வழங்கியிருந்தது.

அதனை, மாற்றுவதன் மூலம், நாட்டு ஜனநாயகத்தை பாதுகாப்பதாகக் கொள்ள முடியும். கடந்த காலங்களில் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், எமக்கான (மக்களின்) ஜனநாயக உரிமையைக் கொண்டு சர்வாதிகாரத்தை தேர்வு செய்கின்றோம் என்கிற எண்ணப்பாடு எழுந்திருக்கின்றது.

நிறைவேற்று அதிகாரத்தை அறிமுகப்படுத்திய ஜக்கிய தேசியக் கட்சியே, அந்த அதிகாரத்தினால் அதிகம் பழிவாங்கப்பட்ட கட்சியாகும். என்றைக்குமே இலங்கை அரசியலில் தன்னை (ஐ.தே.கவை) தோற்கடிக்க முடியாத சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டுவந்த அரசியலமைப்புத் திருத்தம், அவரது மருமகனான ரணில் விக்கிரமசிங்கவை இரண்டு தசாப்தங்களாக அலைக்கழித்திருக்கின்றது. அதுவே, ஜக்கிய தேசியக் கட்சி, 19ஆவது திருத்தச் சட்டத்தினை உறுதியாக முன்மொழிய வைத்தமைக்கான காரணம். மாறாக, ஜனநாயகத்தின் மீது ஜக்கிய தேசியக் கட்சி பாரிய அக்கறை கொண்டிருக்கின்றது என்று நம்புவதற்கான சூழல் இன்னமும் அமையவில்லை.

நாடாளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மையுள்ள ஜக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தை தவிர்க்க முடியாமல் ஏற்றாலும், மஹிந்த அபிமானிகளினாலும் ரணில் வெறுப்பாளர்களினாலும் நிறைந்திருக்கின்றது.

இந்த விடயங்களை சரியாகக் கையாண்டாலேயன்றி, தன்னால் ஜனாதிபதி பதவியை அடைவதற்கு ரணசிங்க பிரேமதாஸ, சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் மேற்கொண்ட பிரயத்தனங்களில் குறைந்தளவைக் கூட மைத்திரிபால சிறிசேன செய்திருக்கவில்லை. ஜனாதிபதி வேட்பாளராக தன்னை முன்னிறுத்த ஒப்புக்கொண்டது மட்டுமே அவர் மேற்கொண்ட கத்தி முனைத் தீர்மானம். மற்றப்படி, அவருக்கான வெற்றியை பொது எதிரணியும் இளைஞர்களும் வெளிநாடுகளும் ஊடகங்களும் இணைந்து பெற்றுக் கொடுத்தன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பொது எதிரணி (மைத்திரி- ரணில்- எதிர்க்கட்சிகள் கூட்டு), நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் மிக முக்கியமானது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிப்பு (அல்லது அதிகாரங்களை மட்டுப்படுத்தல்). ஆக, அதனைச் செய்யாது பொதுத் தேர்தலை எதிர்கொள்வது என்பது முன்னாள் ஜனாதிபதிகள் செய்த அதே தவறினைச் செய்வதற்கு ஒப்பானது.

அதாவது, முன்னாள் ஜனாதிபதிகளும் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதாக ஒவ்வொரு தேர்தலிலும் வாக்குறுதியளித்து அதனைக் காற்றில் பறக்க விட்டிருக்கின்றார்கள். அந்த வகையில், மைத்திரிபால சிறிசேன- ரணில் விக்கிரமசிங்க கூட்டினால் வாக்குறுதியை பகுதியளவேனும் நிறைவேற்ற முடிந்திருக்கின்றது என்பது வெற்றி. அதனை மக்களிடம் வெற்றிக்கான காரணமாகவும் முன்வைக்க முடியும். அதுபோக, வாக்குறுதியை முழுமையாக

(22ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி பதவியை அடைவதற்கு ரணசிங்க பிரேமதாஸ, சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் மேற்கொண்ட பிரயத்தனங்களில் குறைந்தளவைக் கூட மைத்திரிபால சிறிசேன செய்திருக்கவில்லை. ஜனாதிபதி வேட்பாளராக தன்னை முன்னிறுத்த ஒப்புக்கொண்டது மட்டுமே அவர் மேற்கொண்ட கத்தி முனைத் தீர்மானம். மற்றப்படி, அவருக்கான வெற்றியை பொது எதிரணியும் இளைஞர்களும் வெளிநாடுகளும் ஊடகங்களும் இணைந்து பெற்றுக் கொடுத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூதாட்டம் தொன்று தொட்டு பல்வேறு பெயர்களால் அழைக் கப்படுகின்றது. இந்த சூதாட்டத் தால் தங்கள் வாழ்வை ஏன் இராச் சியங்களைக் கூட இழந்தவர்கள் பற்றி கேள்விப்பட்டுள்ளோம்.

அந்தவகையில் இன்றைய கால கட்டத்தை பொறுத்தவரை சூதாட் டத்தின் நவீன வடிவம் தான் கசினோ. சூதாட்ட விளையாட்டுகள்.

அதுவும் இலங்கையில் அண் மைக்காலமாக மிக பிரபல்யமான ஒரு பொழுதுபோக்கு அம்சமாக வும், விநோத விளையாட்டாகவும் கசினோ சூதாட்ட நிலையங்கள் மாறிவருகின்றன.

அதுவும் கசினோ சூதாட்ட விளையாட்டுக்களுக்காக பாரியள வில் பணத்தை வாரி இறைக்கும் வெளிநாட்டவர்களின் எண் ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித் துக்கொண்டே செல்கின்றது.

அந்தவகையில் கசினோ விளையாட்டில் காணப்பட்ட சூதாட்டத்தில் காணப்பட்ட ஈடுபாடு காரணமாக மார்ச் மாதம் 27ஆம் திகதி சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்திருந்தார்கள்.

அதுமட்டுமின்றி, இலங்கையில் காணப்பட்ட பிரபல கசினோ சூதாட்ட நிலையத்தின் உரிமையாளர்களுடன் மிக நெருங்கிய தொடர்பினையும் பேணியும் வந்துள்ளார்கள்.

இதனால் இலங்கைக்கு வந்த இருவருக்கும் சிறந்த ஹோட்ட லொன்றினைத் தெரிவு செய்து மார்ச் 27ஆம் திகதியிலிருந்து 31ஆம் திகதி வரை ஹோட்டலுக் குரிய கட்டணத்தையும் செலுத்தி அங்கிருந்து கசினோ விளையாட்டு களுக்குச் செல்வதற்கான சகல போக்குவரத்து வசதிகளையும் கசினோ நிலையமே செய்துகொடுத்துள்ளது..

அதன்பின் இருவருமே பெரும்பாலான நேரத்தை கசினோ நிலையத்திலேயே செலவழித்தனர்.

இதனைத் தொடர்ந்து அவர்களும் வந்து அறைக் கதவை திறக்க முற்பட்ட போதும் அறையின் கதவு உள்ளே தாழ்ப்பாளிட்டிருந்தது.

எனவே இனியும் பொறுக்க முடியாது அறையின் உள்ளே ஏதோ அசம்பாவிதம் நடந்திருக்க வேண்டும் என்ற சந்தேகத்துடன் ஹோட்டல் நிர்வாகத்தினர் மேற்படி சம்பவம் தொடர்பாக தொலைபேசி அழைப்பொன்றின் மூலம் வெள்ளவத்தை பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து ஹோட் டல் நிர்வாகத்தினரிடமிருந்து கிடைத்த தொலைபேசி அழைப்பை யடுத்து இரவு 7 மணியளவில் சம்பவ இடத்துக்கு விரைந்த வெள்ளவத்தை பொலிஸார் தனது ஆரம்ப கட்ட விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன் போது ஹோட்டல் நிர்வாகத்தினரின் உதவியுடன் இருவரும் தங்கியிருந்த அறையை திறந்த போதே இருவரும் உயிரற்ற நிலையில் கிடந்துள்ளனர்.

இருவரும் இறுதியாக முதலாம் திகதி வெளியில் செல்லும் போது அணிந்திருந்த ஆடையுடன், மனைவி கழுத்து வரை போர்வை யினால் மூடி, சாதாரணமாக படுத்திருப்பது போல் உயிரற்ற நிலையில் கிடக்க, அவளது அருகில் அதே கட்டிலில் கணவன் உயிரற்று கிடந்துள்ளார்.

அதுமட்டுமின்றி, மனைவி எட்டு மாத கர்ப்பிணியாகவிருந் ததுடன், அறையில் சாதாரண ஆடைப்பையொன்றும், இரண்டு கையடக்கத்தொலை பேசிகளும், இருவரினதும் கடவுச்சீட்டுக்களும் காணப்பட்டுள்ளன.

மேலும் பணம் என்று சொல் வதற்கு மலேஷியா பணம் 10 ரிங்கிட் நாணயமொன்று மாத்திரமே காணப்பட்டுள்ளது.

அத்தோடு பாதி குடித்து வைத்த கொக்கோகோலா போத்தலொன் றும், இரண்டு கண்ணாடி குவளையும் அதன் அருகே காணப் பட்டதுடன், அதிக விஷத் தன்மை வாய்ந்த நஞ்சுப் போத்தலொன்றும் காணப்பட்டது.

எனவே குளிர்பானத்தில் விஷம் கலந்து தற்கொலை செய்து கொள்ள முயற்சித்திருக்க வேண் டும் என்று பொலிஸார் சந்தேகித்தனர்.

இதனையடுத்து, காலை நீதிவான் சம்பவ இடத்துக்கு வந்து பார்வையிட்டதைத் தொடர்ந்து சடலங்கள் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனை களுக்குட்படுத்தப்பட்டன.

இதனைத் தொடர்ந்து இந்திய தூதரகத்தின் ஊடாக இந்தியாவில் வசிக்கும் இவர்களின் உறவினர் களுக்கு இவர்களின் மரணம் தொடர்பாக அறிவிக்கப்பட்டது டன், இவர்களின் மரணத்துக்கான காரணத்தை பல்வேறு கோணங் களில் தேட முயற்சித்தனர்.

அதன்படி இருவரும் கசினோ விளையாடச் சென்ற நிலையத்தில் மேற்கொண்ட விசாரணையின் மூலம் கசினோ விளையாட்டில் மிகுந்த அனுபவமும், திறமையும் கொண்டிருந்த தாகவும், இவர்கள் இருவரும் இறுதியாக 29,30,31ஆம் திகதிகளில் மட்டும் சுமார் பல இலட்சம் ரூபாக்களை கசினோ சூதாட்ட விளையாட்டில் தோற்றுள்ளதாகவும், கடைசியாக முதலாம் திகதி இரவு தாம் தங்கியிருக்கும் ஹோட்டலுக்கு வழமையாகச் செல்லும் கசினோ நிர்வாகத்தினரின் வாகனத்தில் தான் சென்று ஹோட்டல் வாசலில் இறங்கியதாகவும் அதற்கு பின்னர் அவர்களுக்கு என்ன நடந்ததென்று தெரியாது என்றும் கசினோ நிலையத்தினர் தெரிவித்தனர்.

அதுமட்டுமின்றி, கசினோ நிர்வாகத்தினர் தமது சொந்தப் பணத்தில் முன்கூட்டியே இருவரும் தங்கியிருந்த ஹோட்டலுக்கு பணம் செலுத்தியிருப்பது இவர்கள் இருவர் மூலம் கசினோ நிர்வாகத்தினருக்கு பாரிய இலாபம் கிடைக்கும் என்ற நோக்குடன் இருக்கலாம் என்ற சந்தேகமும் பொலிஸாருக்கு ஏற்பட்டுள்ளது.

கசினோ விளையாட்டில் ஏற்பட்ட பாரிய நிதியிழப்பு காரணமாகவே தற்கொலை செய்திருக்க வேண்டும் என்று பல்வேறு சந்தேகங்கள் பொலிஸ் தரப்பிலிருந்து எழுந்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

எது எவ்வாறாயினும், நன்கு படித்து பொறுப்புமிக்க உயர் பதவிகளை வகித்த அழகிய இளம் தம்பதி தங்களது திறமையின் மீதும், உழைப்பின் மீதும் நம்பிக்கை வைத்து வாழ்க்கையில் முன்னேறாமல் வெறும் பொழுது போக்கு அம்சங்களுக்கும், களியாட்டங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து இறுதியில் தம் உயிரை இழக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டு விட்டார்கள்.

இரு உயிர்களுக்கு உலை வைத்த சூதாட்டம்!!

- வசந்தா அருள்ரட்ணம்

அதீத ஈடுபாடு காரணமாக இலங்கைக்கு வந்த இந்திய தம்பதிகள் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் வெள்ளவத்தைப் பகுதியில் கடந்த மாதம் 3ஆம் திகதி பதிவானது.

எனவே, இச்சம்பவம் தொடர் பாக பல்வேறு சந்தேகங்களின் அடிப்படையில் வெள்ளவத்தை பொலிஸார் இதுவரை நடத்திய விசாரணைகளின் அடிப்படையில் பல விடயங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

அந்தவகையில் பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களின் அடிப் படையில் உயிரிழந்த மும்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட துட்விராம் பொட்தா என்ற 31வயதுடைய ஆணும், தமிழ்நாடு சென்னையைப் பிறப்பிடமாக கொண்ட மகாலக் ஷ்மி என்ற 27வயதுடைய பெண்ணும் சிறந்த கல்வி பின்னணியைக் கொண்டவர்கள்.

இருவரும் திருமணமாகி தொழில் நிமித்தம் மலேஷியாவில் குடியேறியதுடன், அங்கு பொறுப்பு மிக்க உயர் பதவியொன்றில் பணிபுரிபவர்களாகவும் இருந்து வந்த நிலையில் தான் கசினோ

இறுதியாக ஏப்ரல் முதலாம் ஆம் திகதி காலையில் வெளியில் சென்றவர்கள் மீண்டும் இரவு 8 மணியளவிலேயே ஹோட்டல் அறைக்கு வந்திருக்கின்றார்கள்.

எனினும், அதற்கு பின்னர் எக்காரணத்தை கொண்டும் அறையிலிருந்து அவர்கள் இருவரும் வெளியில் வரவில்லை.

குறைந்தது அன்றைய தினத்துக்கான உணவினைப் பெற்றுக்கொள்வதற்காகக் கூட ஹோட்டல் அறையிலிருந்து வெளியில் வரவில்லை.

மொத்தத்தில் அந்த அறையில் இருவர் இருக்கின்றார்கள் என்பதற்கான எந்தவொரு அறிகுறியும் தென்படவில்லை.

இந்த நிலையில் தான் ஏப்ரல் இரண்டாம் திகதி மாலை 6 மணியளவில் அறையை சுத்தம் செய்வதற்காக ஹோட்டலில் பணிபுரியும் இளைஞன் கதவைத் தட்டியிருக்கின்றான்.

எனினும், வெகு நேரமாகியும் எந்தவிதமான பதிலும் கிடைக்காமை காரணமாக குறித்த இளைஞன் இது தொடர்பாக தனது மேலதிகாரிகளிடம் முறையிட்டுள்ளான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்

நகத்தடி இரத்தக் கண்டலுக்கு தீர்வு என்ன?

'ஐயோ' வலியால் துடித்துக் கத்தியவர் கீழே விழவில்லை.

விழ முடியாது. கைவிரல் கார்க் கதவினுள் அகப்பட்டுவிட்டதே!!

காரிலிருந்து இறங்கியதும் தானே கதவை மூடினார். இவர் எதிர் பார்த்ததை விட வேகமாகக் கதவு மூடிக் கொண்டது. கார் சற்று சரிவான இடத்தில் நின்றதால் அவ்வாறு ஆயிற்று.

வெளிக்காயம் எதுவும் இல்லை. ஓரளவு வலிதான். பொறுத்துக் கொண்டார். ஆயினும் இரவு பொறுக்க முடியாத வலி. தூங்கவே முடியவில்லை

நகத்தடி இரத்தக் கண்டல்

கை அல்லது கால் விரல்களின் நகத்தின் உட்புறத்தே குருதி பரவி உறைந்து கட்டிபடுவதையே நகத்தடி இரத்தக் கண்டல் என்று சொல்ல முடியும். இது பொதுவாக தற்செயலாக நடக்கும் சிறு விபத்து மூலமே ஏற்படுகிறது. இதன் போது நகமானது கடும் ஊதா அல்லது கறுப்பு நிறமாக மாறும். உண்மையில் நகத்தின் நிறம் மாறுவதில்லை. நகத்தின் அடியிலுள்ள உறைந்த குருதி கருமையாகத் தோன்றும்.

மேற் கூறியவருக்கு கார்க் கதவினுள் விரல் நசுங்குண்டது. நகத்தின் அடிப்புறம் முழுவதும் கருமை ஆகிவிட்டது. ஆனால் தாக்கம் குறைவாக இருந்தால், நகத்தின் அடியில் ஒரு சிறு பகுதியில் மட்டுமே இரத்தம் உறையவும் கூடும். கார்க் கதவில் அடிபட்டது போலவே வீட்டுக் கதவு, அலுமாரிக் கதவு போன்றவற்றினுள்ளும் அவ்வாறு அகப்படக் கூடும். சுவரில் ஆணி அடிக்கும்போது தவறுதலாக விரலின் மேல் அடிப்படுவதும் உண்டு.

மாறாக பாரமான பொருள் கீழே விழும்போது அதற்குக் கீழ் நகம் அகப்பட்டு நசுங்குப்படுவதும் உண்டு.

ஆனால் மிக அரிதாக ஒருவரது நகத்தின் அடிப்புறத்தில் கட்டி வளர்வதாலும் நகத்தில் கருமை நிறமாகத் தோன்றலாம்.

கட்டியா இரத்தம் கண்டியதா?

கட்டி வளர்வதால் ஏற்பட்டதா அல்லது இரத்தம் உறைந்ததா என்பதை பிரித்து அறிவது எப்படி?

இரத்தம் கண்டுவதால் ஏற்பட்டதாயின் அதற்கு முன்னர் அடிபட்டிருக்கும் என்பது நிச்சயம். இரத்தம் உறைந்ததால் ஏற்பட்டதாயின் நகம் வளரும்போது இதுவும் முன் நகர்ந்து மறைந்து விடும்.

ஆனால், அது ஒரே இடத்தில் தொடர்ந்து இருக்குமாயின் அது இரத்தம் கண்டியதால் அல்ல என்பதை நிச்சயம் கூறலாம். அவ்வாறு எனில் மருத்துவரிடம் அதைக் காட்டி ஆலோசனை பெற வேண்டியது அவசியமாகும்.

அறிகுறிகள் என்ன

கண்ணால் பார்த்தாலே தெரிவதைத் தவிர வேறு என்ன அறிகுறி இருக்கக் கூடும் என்கிறீர்களா?

உண்மைதான். நகத்தின் அடியில் கறுப்பாக, கருநீலமாக அல்லது சிகப்பாக நிறம் மாறியிருக்கும். நகத்தின் அடியில் முழுமையாகப் இது பரவி இருக்கலாம். அல்லது ஒரு பகுதியில் மட்டுமே தோன்றவும் கூடும்.

கடுமையான வலி இருக்கும். மிக இறுக்கமாக நகத்தின் அடியில் இரத்தம் உறையும்போது அதனால் ஏற்படும் அழுத்தமே கடுமையான வலியை ஏற்படுத்துகிறது.

கண்டல் நகத்தின் மீது தட்டுப்பட்டாலே அடிபட்டாலோ வலி பொறுக்க முடியாதளவு மோசமாக இருக்கும்.

ஆனால் அடி கடுமையாகப் பட்டிருந்தால், இரத்தம் உறைவது மட்டுமல்லாது அடியில் விரல் எலும்பு உடைந்திருக்கவும் கூடும். அருகில் உள்ள தசைகளில் சேதம் ஏற்பட்டிருக்கவும் கூடும்.

கை அல்லது கால் விரல்களின் நகத்தின் உட் புறத்தே குருதி பரவி உறைந்து கட்டிபடுவதையே நகத்தடி இரத்தக் கண்டல் என்று சொல்ல முடியும். இது பொதுவாக தற்செயலாக நடக்கும் சிறு விபத்து மூலமே ஏற்படுகிறது. இதன் போது நகம் கடும் ஊதா அல்லது கறுப்பு நிறமாக மாறும். உண்மையில் நகத்தின் நிறம் மாறு வதில்லை. நகத்தின் அடியிலுள்ள உறைந்த குருதி கருமையாகத் தோன்றும்.

விரல் எலும்பு உடைந்திருக்கக் கூடும் என்ற சந்தேகம் இருந்தால் மருத்துவர் 'எக்ஸ்ரே' படம் எடுத்துப் பார்ப்பார்.

சிகிச்சை

நகக் கீழ் இரத்தக் கண்டலால் கடுமையாக வலி இல்லாவிடின் எந்தவித சிகிச்சையும் தேவைப்படாது. ஐஸ் வைத்து மேலும் இரத்தம் உறைவதைத் தடுக்கலாம் இதனால் வலி குறையவும் கூடும். வலியைத் தணிக்க பரசிட்டமோல் மாத்திரை எடுத்தால் போதுமாக இருக்கும்.

வலி கடுமையாக இருந்தால் நகத்தின் அடியில் உள்ள இரத்தத்தை வெளியேற்றுவது அவசியமாகலாம்.

விரலை மட்டும் மரக்கச் செய்த பின் மின்னால் இயங்கும் ஊசி போன்ற கருவி மூலம் இரத்தம் உறைந்துள்ள நகத்தின் பகுதியில் சிறுதுளை இடுவதன் மூலம் இரத்தத்தை வெளியேற்றுவார் கள். இதனால் வலி குணமாகும்.

மாறாக கூரான ஊசி மூலம் துழையிடுவதும் உண்டு. கிருமித் தொற்று ஏற்படாது இருப்பதை உறுதி செய்வதற்கு துளையிட்ட நகத்தை 'பண்டேஜ்' பண்ணுவார்கள். சில தருணங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட துளைகள் தேவைப்படலாம். துளையிட்ட பின்னர் ஒரு சில மணி நேரத்திற்கு கையை கீழே தொங்கவிடாது உயர்த்தி வைத்திருப்பதன் மூலம் மேலும் இரத்தம் வெளியேறுவதை தடுக்க முடியும்.

நகத்தின் பெரும் பகுதியை (more than 50%) உள்ளடக்கும் வண்ணம் இரத்தம் உறைந்திருந்தால், அல்லது நகத்தின் ஓரங்கள் அருகில் உள்ள தசைப் பகுதியில் இருந்து பிரிந்திருப்தாகத் தோன்றினால், நகத்தை முழுமையாக அகற்ற நேரும். இதுவும் முன்பு கூறியது போல விரலை மரக்கச் வைத்தே அகற்றப்படும்.

நகத்தை மருத்துவர் அகற்றாவிட்டால் கூட நகக் கீழ் கண்டலானது நகத்தின் பெரும் பகுதியை உள்ளடக்குவதாக இருந்தால் நகம் சில காலத்தில் தானாகவே கழன்றுவிடவே செய்யும். விழுந்த பின்னர் சுமார் இரு மாதங்களுக் குள் புதிய நகம் அரும்புவதைக் காணக் கூடியதாக இருந்தாலும் முழுமையாக வளர்வதற்குக் 6 மாதங்கள் வரை செல்லக் கூடும்.

மேலே குறிப்பிட்டவரின் நகம் அகற்றபடவில்லை. பரசிற்றமோல் மற்றும் ஐஸ் வைப்பதன் மூலம் வலி தணிக்கப்பட்டது. சில வாரங்களில் நகம் தானாகவே விழுந்து விட்டது.

புது நகம் வளர்வதை அக்கறையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். ***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரில் பயணித்த பசு

போலந்தில் ஸிபிக்னிவ் கிர போவ்ஸ்கி (53) எனும் விவசாயி, மிருக வைத்தியர் ஒருவரிடம் தனது பசுவை காண்பித்து விட்டு, அதை மீண்டும் தனது பண்ணைக்கு காரில் ஏற்றிச் சென்றுகொண் டிருந்தார்.

அந்த வழியால் சென்றுகொண் டிருந்த ஏனைய சாரதிகள், பயணி களும் அந்த காரை வியப்புடன் பார்த்த வாறு சென்றனர். பின்னர் போக்கு வரத்து பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர், இக்காரை வழிமறித்தபோது, அதற்குள் பசு வொன்று இருப்பதைக் கண்டு அதை வெளியே எடுக்குமாறு உத்தரவிட்டார்.

பசுவை ஏற்றிச்செல்வதற்கு வசதி யாக இக்காரில் மாற்றங்கள் செய்திருப் பதாக பிரபோவ்ஸ்கி கூறினார். எனி னும், அவ்வாறு பசுவை காரில் ஏற்றிச் செல்வது ஆபத்தானது என பொலிஸார் விளக்கியதுடன் கிரபோவ்ஸ்கிக்கு அபராதம் விதித்துள்ளனர்.

முடிசூடாமன்னன்....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தயாரிப்பாளர்கள் ஓடோடி வந்து தங்களுக்காக படம் எடுக்க வேண்டுமாறு புரூஸ் லீயைக் கேட்டுக்கொண்டனர். ஹொலிவுட்டில் நடிக்க வேண்டுமென்பதை தனது வாழ்நாள் லட்சியமாக கொண்டவராயிற்றே அவர். உடனே தனது சொந்தப் படத்தை தள்ளிப்போட்டுவிட்டு ஹாலிவுட்டுக்காக 'என்டர் தி டிராகன்' என்ற படத்தை எடுக்கத் தொடங்கினார். அசுர வேகத்தில் நடைபெற்றது படப்பிடிப்பு. 'ரீ ரெக்கார்டிங்', 'எடிட்டிங்' வேலைகள் அனைத்தும் இரண்டே மாதங்களில் முடிவடைந்தன.

'என்டர் தி டிராகன்' என்ற படம் திரைக்கு வர மூன்றே வாரங்கள் இருந்தபோது எதிர்பாரத ஒரு அசம்பாவிதம் நிகழ்ந்தது. 1973 ஆம் ஆண்டு ஜீலை 20 ந்தேதி தன் மனைவி லிண்டாவிடம் விடைபெற்றுக்கொண்டு, முடிக்கப்படாமல் இருந்த தனது சொந்தப்படமான 'கேம் ஆப் டெத்' என்ற திரைப்படத்தைப்பற்றி விவாதிக்க வெளியில் சென்றார் புரூஸ் லீ. அன்று இரவே மர்மமான முறையில் இறந்துபோனார் புரூஸ் லீ. அப்போது அவருக்கு வயது 33 தான். அவர் இறந்தது 'பெடிட் டிங்'பே' என்ற ஒரு நடிகையின் வீட்டில். அதனால் புரூஸ் லீயின் மரணம் குறித்து பல வதந்திகள் எழுந்தன. படப்பிடிப்பில் ஏற்பட்ட சண்டைக்காட்சியின் போது தலையில் விழுந்த அடியால் மூளை வீங்கி இறந்துபோனார் என்று மருத்துவர்கள் கூறினர். உண்மையைக் கண்டுபிடிக்க ஹாங்காங் அரசாங்கம் ஒரு விசாரணைக் குழுவை நியமித்தது. ஆனால் இன்றுவரை புரூஸ் லீ இறந்ததற்கான உண்மையான காரணம் தெரியவிலை.

புரூஸ் லீயின் மரணத்திற்கு பிறகு வெளிவந்த 'என்டர் தி டிராகன்' படம் சக்கைப்போடு போட்டு 200 மில்லியன் டாலர் வசூலை அள்ளிக் குவித்தது. உலகெங்கும் பல இளைஞர்கள் கராத்தே பைத்தியமானார்கள். மூளை முடுக்குகளிலெல்லாம் கராத்தே பள்ளிகள் தொடங்கப்பட்டன. இவ்வாறு உலக இளையர்களின் கவனத்தை தனி ஒரு மனிதனாக தற்காப்புக்கலைப்பக்கம் திருப்பிய பெருமை புரூஸ் லீயையே சேரும். வரலாற்றின் எந்தக் கால கட்டத்தையும்விட எழுபதுகளில்தான் மிக அதிகமான இளைஞர்கள் தற்காப்புக்கலை பள்ளிகளில் சேர்ந்து பயின்றனர் என்ற உண்மையே அதற்கு சான்று. தன் கனவை நனவாக்க அயராது பாடுபட்டவர் புரூஸ் லீ. உடல்தான் தனது மூலதனம் என்று நம்பிய அவர் அதை ஒரு கோவிலாகவே வழிபட்டார். தினசரி ஓடுவது, எடை தூக்குவது என்று தனது உடலை வலுப்படுத்திக்கொண்டதோடு வைட்டமின்கள், ஜின்செங், ராயல் ஜெல்லி போன்றவற்றையும் உட்கொண்டு உடலை திடமாக வைத்துக்கொண்டார்.

அகால மரணம் அவரது ஆயுளை குறைக்காமல் இருந்திருந்தால் சினிமாவிலும், தற்காப்புக்கலையிலும் இன்னும் மிகப்பெரிய வெற்றிகளை குவித்திருப்பார் புரூஸ் லீ. 33 ஆண்டுகளே வாழ்ந்தாலும் ஓர் அர்த்தமுள்ள வாழ்கையை வாழ்ந்திருக்கிறார். குண்டர் கும்பலில் இருந்தாலும், ஒழுங்காக படிக்காவிட்டாலும் தான் தேர்ந்தெடுத்த துறையில் அவர் செலுத்திய முழுக் கவனமும் காட்டிய ஆர்வமும் கொட்டிய உழைப்பும் சிந்திய வியர்வையும்தான் புரூஸ் லீக்கு அந்த இளம் வயதிலேயே வானத்தை வசப்படுத்தின. நாம் எந்தத் துறையை தேர்ந்தெடுக்கிறோம் என்பது முக்கியமல்ல, தேர்ந்தெடுத்த பிறகு அந்த துறையில் முழுக் கவனம், ஆர்வம், உழைப்பு, வியர்வை, விடா முயற்சி ஆகியவற்றை செலுத்துகிறோமா என்பதே முக்கியம். இவ்வாறு ஈடுபடுத்திக் கொண்டால் நமக்கும் எந்த வானம் வசப்படாமல் போகும்??!!

19 வெற்றி....

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்ற முடியாமைக்கான காரணமாக, மஹிந்த பூச்சாண்டியையும் கடந்த அரசாங்கத்தின் ஊழல்வாதிகள் மீதும் இலகுவாக கைநீட்டவும் முடியும்.

இன்னொரு பக்கம், நாம் எதிர்பார்த்த திருத்தங்களுடன் 19ஆவது திருத்தச் சட்டம் அமையவில்லை என்பதில் ஐக்கிய தேசியக் கட்சி ஆழ்ந்த அதிருப்தியுடன் இருக்கின்றது. பொதுத் தேர்தலின் பின்னர் புதிய திருத்தங்களைச் செய்வதற்கான உத்தேசங்களுடன் இருப்பதாக அந்தக் கட்சியின் முக்கியஸ்தரான அமைச்சர் மங்கள சமரவீர ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜனாதிபதியிடம் இருந்து அதிகாரங்களை பெற்றுக் கொள்வதில் எந்த விட்டுக் கொடுப்பையும் செய்வதற்கு தயாராகவில்லை. மாறாக, பிரதமரிடம் (ரணிலிடம்) அதிகாரங்களைக் குவிப்பதற்கான வாய்ப்புக்களை உருவாக்குவதிலேயே குறியாக இருக்கின்றது.

19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு தவிர்க்க முடியாமல் தலையாட்டியிருக்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பெரும்பான்மையான உறுப்பினர்கள், தேர்தல் முறை மாற்றங்களை உள்ளடக்கிய 20ஆவது திருத்தச் சட்டத்தை தமது வெற்றிக்கருவியாக முன்வைப்பதற்குத் தயாராகின்றன.

தேர்தல் முறை மாற்றாது பொதுத் தேர்தலொன்றுக்கு ஜனாதிபதியோ, பிரதமரோ சென்றால், அதனை வைத்துக் கொண்டு பொதுத் தேர்தலில் களமாடுவார்கள். இதுதான், ரணில் விக்கிரமசிங்கவுக்கான இப்போதைய பெரும் சிக்கல். இந்தச் சிக்கலை அவர் எப்படித் தாண்டப்போகின்றார் என்பதே பொதுத் தேர்தலில் அவரின் வெற்றி வீதத்தின் அளவை தீர்மானிக்கும் ஒன்றாகவும் மாறும்.

ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவ்வ முன்னிறுத்தி ஆட்சி மாற்றமொன்றை உருவாக்குவதே ஐக்கிய தேசியக் கட்சியின் அடிப்படை நோக்கமாக இருந்தது. அதனூடு, தோல்வியின் போக்கிலிருந்த கட்சியை மீளவும் வெற்றிப்படிகளில் ஏற்றுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவதும், ஆட்சியைக் கைப்பற்றுவதும் ஆகும்.

அந்த முயற்சி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றாலும், மிகவும் சிக்கல் நிறைந்தது என்று தெரிந்ததுதான். ஆனால், அவற்றை கையாள்வது தொடர்பில் மறைமுகமான வெற்றியை ரணில் விக்கிரமசிங்க ஒவ்வொரு தருணத்திலும் பெற்று வந்திருக்கின்றார். அதனை, அவர் நாடாளுமன் றத்துக்குள்ளும் நிரூபித்து வந்திருக்கின்றார்.

கடந்த கால ஆட்சியில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பில் விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கான காலத்தைக் கணித்து ரணில் விக்கிரமசிங்க களமாடுகின்றார். 19ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றத்துக்குப் பின்னரான காலத்தை அவர் அதற்காக தெரிவு செய்து வைத்திருக்கின்றார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் பாரிய குழப்பங்களை ஏற்படுத்தி நாடாளுமன்றத்தை ஸ்தம்பிக்க வைப்பதே அதுவாகும். அதனூடு மக்களிடம் நேரடியாக தேர்தலுக்குச் செல்ல முடியும். அப்படியான சூழ்நிலைகளை உருவாக்குவதே, ஐக்கிய தேசியக் கட்சிக்கு தற்போதைக்கு பாதிப்பை வழங்கும் 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதிலிருந்து தப்புவதற்கான ஒரே வழி. அந்த வழியினை நடைமுறைப்படுத்துவதில் ரணில் விக்கிரமசிங்க எந்த விட்டுக் கொடுப்பையும் செய்யவில்லை என்று கொள்ள முடியும்.

இன்னொரு பக்கத்தில், மஹிந்த பூச்சாண்டியைக் காட்டி, மைத்திரிபால சிறிசேனவை ஓரளவுக்கு தமது கட்டுக்குள் வைத்துக் கொள்ளலாம் என்று நினைத்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் ஊழல் குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டிருக்கின்றவர்கள், அடுத்த திட்டம் தொடர்பில் சிந்திக்க வேண்டியேற்பட்டிருக்கின்றது.

ஏனெனில், மஹிந்த ராஜபக்ஷவினை மீண்டும் அரசியல் தளத்துக்கு கொண்டு வருவது என்பது அவ்வளவு இலகுவானது அல்ல. மாறாக, கொண்டுவந்தாலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினூடு அதனை சாத்தியமாக்குவது என்பது முடியாதது. ஆக, மஹிந்த பூச்சாண்டி என்பது மறைமுகமாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெற்றியைத் தேடிக் கொடுக்கும் சூத்திராமாகவே இருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்கள், மஹிந்த ராஜபக்ஷவின் மீள்வருகை தொடர்பில் அவ்வளவு ஆர்வம் கொள்ளவில்லை.

மாறாக, தமது ஆளுகையுள்ள அரசாங்கம் அமைய வேண்டும் என்பதே அவர்களின் தற்போதைய நோக்கம். ஏனெனில், பொதுத்தேர்தலின் பின்னர் தேசிய அரசாங்கம் அமைந்தாலும் அது, ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங்களின் கீழான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமாகவே செயற்படும் என்பது வெளிப்படையானது. அதனை, எப்படித் தகர்ப்பது என்றே சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் இப்போது யோசிக்கின்றார்கள். ஆனால், அதற்கான வழிகள் அவ்வளவு இலகுவாக திறந்துவிட மாட்டா.

ஏனெனில், ரணில் விக்கிரமசிங்க அனைத்துப் பக்கத்திலும் பொறிகளை வைத்திருக்கின்றார்.

19ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதினூடு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் முழுமையாக ஒழிக்கப்பட்டிருக்கின்றது என்று யாரும் நம்ப வேண்டியதில்லை. அது உண்மையும் இல்லை.

ஆனால், நிறைவேற்று அதிகாரத்தின் காரங்கள் ஜனநாயகத்தின் வேரை அசைக்குமளவுக்கு இனி நீள்வதற்கான வாய்ப்புக்கள் குறைவு. ஆனால், இவற்றையெல்லாம் தாண்டி, 19ஆவது திருத்தச் சட்டத்தின் நிறைவேற்றம் ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்கால அரசியல் இருப்பைத் தீர்மானிப்பதற்கான கருவியாகவே கொள்ள முடியும். அதனை, அவர் மைத்திரிபால சிறிசேனவின் ஒத்தாசையோடு வெற்றி கொண்டிருக்கின்றார். வரும் நாட்கள் அதற்கான செய்தியை இன்னும் அழுத்தமாகப் பதிவு செய்யும் என நம்பலாம்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் விரும்பும் இலக்கை அடைவதற்கு உடல் வலிமையை விட மனவலிமைதான் முக்கியம் என்று வாழ்ந்துகாட்டிய வரலாற்று மாந்தர்கள் பலர். உலகத்தின் உதாசீன பேச்சுக்களையும் ஏளன சிரிப்புகளையும், கேலி கிண்டல்களையும் தாண்டி ஒருவன் சாதனை படைக்க வேண்டுமென்றால் அதற்கு உடல் வலிமை மட்டும் போதாது. இரும்பு போன்ற மன வலிமையும் வேண்டும். நாம் தெரிந்துகொள்ளவிருக்கும் வரலாற்று நாயகருக்கு அத்தகைய மன வலிமை இல்லையென்றால் பிறந்தபோதே ஆரோக்கியமின்றி ஒழுங்காக பள்ளிக்குக்கூட செல்லாமல் குண்டர் கும்பல்களில் சேர்ந்து. எங்கெல்லாம் சண்டை நடக்குமோ அங்கெல்லாம் சண்டையில் ஈடுபட்ட ஓர் இளைஞனுக்கு தற்காப்பு கலையில் சாதனை செய்ய வேண்டும் என்ற கனவும், ஒரு சிறந்த நடிகனாக வரவேண்டும் என்ற ஆசையும் உதித்திருக்காது. பல இன்னல்களை கடந்து தனது கனவுகளை நனவாக்கவும் முடிந்திருக்காது.

முடிசூடா மன்னன் புரூஸ் லீ

1959 ஆம் ஆண்டு சராசரிக்கும் குறைவான உயரத்தோடும், ஒல்லியான தேகத்தோடும் அமெரிக்க மண்ணில் வந்திறங்கினான் அந்த 18 வயது இளைஞன். அப்போது ஜான் வேய்ங், ஜேம்ஸ் டீன், சார்ல்ஸ் அட்லஸ் போன்ற நடிகர்கள் புகழின் உச்சியில் இருந்தனர். ஆனால் சாப்பதற்கு சாதாரணமாக இருந்த அந்த இளைஞன் என்ன சொன்னான் தெரியுமா? அந்த ஆக்ஷன் கதாநாயகர்களுக்கெல்லாம் இனி நானதான் மாற்று என துணிந்து சொன்னான். அப்போது அமெரிக்கர்கள் மட்டுமல்ல அந்த இளைஞனின் சமூகம்கூட அவனை ஏளனமாக பார்த்தது. ஆனால் ஏளனங்களை ஏணிப்படிகளாக்கி அடுத்த 14 ஆண்டுகளில் வெற்றிக்கொடி நாட்டி சினிமா என்ற வாகனத்தின்மூலம் தற்காப்புக்கலைக்கு உலகலாவிய அங்கீகாரம் பெற்றுத்தந்தார் அந்த தற்காப்புக்கலை வல்லுநர் திரைப்பட நடிகர். அவரது பெயர் புரூஸ் லீ.

1940 ஆம் ஆண்டு நவம்பர் 27 இல் அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ மாநிலத்தில் பிறந்தார் புரூஸ் லீ. பிறந்தபோது அவருக்கு இடப்பட்ட பெயர் லீ ஜுன்பேன்' அவரது தந்தை லீ கோய்ன் ஒரு சீனர், தாயார் கிரேஸ் ஐரோப்பியர். சிறுவயதில் ஹாங்காங்கில் வாழ்ந்தது புரூஸ் லீயின் குடும்பம். அங்கே பெரும்பாலான சிறுவர்கள் தெருக்களில்தான் பொழுதைக் கழிப்பார்கள். அப்படி நிறைய நேரத்தைக் கழித்த புரூஸ் லீக்கு சண்டை போடுவதில் இருந்த ஆர்வம் படிப்பில் இல்லை. மேலும் சுமார் 20 சீனப்படங்களில் குழந்தை நட்சத்திரமாக தோன்றும் வாய்ப்பு புரூஸ் லீக்கு கிடைத்தது. சண்டையையும் சினிமாவையும் எடுத்துக்கொண்டு பள்ளியையும் பாடங்களையும் ஒதுக்கினார் புரூஸ் லீ.

இயற்கையாகவே நன்றாக சண்டைபோடும் திறமை அவருக்கு இருந்ததால் ஒரு கும்பலுக்கு தலைவனாகவும் இருந்தார். புரூஸ் லீயின் தந்தையோ, தமது மகன் நன்கு படித்து தொழில்துறையில் ஈடுபட வேண்டும் என விரும்பினார். ஆனால் சண்டைபோட்டு எல்லோரையும் வெற்றிக்கொள்ள வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தார் புரூஸ் லீ. சிலமுறை பெரிய குண்டர்களிடம் மோதி தோல்வியும் கண்டிருக்கிறார். அப்போதுதான் ஒரு நல்ல தற்காப்புக்கலையை கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு எழுந்தது. தன் தந்தையிடமே குங்பூ என்ற பாரம்பரிய சீன தற்காப்புக்கலையைக் கற்றுக்கொண்டார். அடிக்கடி அடிதடிகளில் ஈடுபட்டதால் புரூஸ் லீயின் கொட்டத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாத பெற்றோர் அவரிடம் 100 டாலரைக் கொடுத்து அமெரிக்காவில் போய் எப்படியாவது பிழைத்துக்கொள் என்று கப்பலேற்றிவிட்டனர்.

அப்போது 18 வயது இளைஞனாக அமெரிக்கா வந்து சேர்ந்தார் புரூஸ் லீ. சியாட்டலில் இருந்த ஒரு நண்பரின் சீன உணவக விடுதியில் தங்கிக்கொண்டு தற்காப்புக் கலையை கற்றுக்கொடுக்க தொடங்கினார். அந்த விடுதியில் வேலையும் பார்த்தார். அவரது எண்ணம், செயல் எல்லாம் குங்பூ என்ற தற்காப்புக்கலையைப் பற்றியே இருந்தது. மேற்கத்திய மல்யுத்தம், ஜீடோ, கராத்தே, குத்துச்சண்டை ஆகியவற்றையும் கற்றுக்கொண்டு சில புதியபாணி அசைவுகளையும் சேர்த்து அவர் சொந்தமாக ஒரு தற்காப்புக்கலையை உருவாக்கினார். அதற்கு ஜீட்குன்டோ என்று பெயரிட்டார். அவரிடம் தற்காப்புக்கலையை கற்றுக்கொள்ள வந்த லிண்டா என்ற பெண்ணை மணந்து கொண்டார் புரூஸ் லீ. 20 படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்திருந்த அவருக்கு ஹாலிவுட்டில் கதாநாயகனாக நடிக்க வேண்டும் என்ற ஆசையும் இருந்தது. ஆனால் ஹாலிவுட் அவரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. சோர்ந்துபோன புரூஸ் லீ ஹொங்கொங் திரும்பினார்.

தி பிக் பாஸ், ஸ்பிட் ஆஃப் பியூரி என்ற இரண்டு படங்களில் புரூஸ் லீ நடித்தார். அதில் அவர் பம்பரம்போல் சுழன்று சுழன்று காட்டிய வித்தைகளும், சாகசங்களும் ஆசிய சினிமா பிரியர்களைக் கவர்ந்தது. ஆனால் ஆசியாவை அசத்திய அந்தப்படங்கள் ஹாலிவுட்டின் கடைக்கண் பார்வையைக்கூட பெறத்தவறின. அது குறித்து கவலைப்படாத புரூஸ் லீ 1972 ஆம் ஆண்டில், 'த ரிட்டன் ஆப் த டிராகன்' என்ற படத்தைச் சொந்தமாக தயாரித்தார். சினிமாவின் மந்திரங்களை ஓரளவுக்கு புரிந்துகொண்டிருந்த புரூஸ் லீ திரைக்கதையைத் தானே எழுதி திரைப்படத்தை இயக்கவும் செய்தார். பொதுவாக சண்டைக்காட்சிகளில் ஸ்டண்ட் நடிகர்களை வைத்துதான் படம் எடுப்பது வழக்கம். ஆனால் புரூஸ் லீயோ கேமரா வித்தைகள் இல்லாமல் அதிவேகமாக அதேநேரத்தில் தத்ரூபமாக சண்டைப் போடக்கூடிய திறமைசாலி என்பதை அந்தப்படம் அமெரிக்கர்களுக்கு உணர்த்தியது.

அதுவரை ஆசிய இளையர்கள் மட்டும் புரூஸ் லீயின் விசிறிகளாக இருந்தனர். 'தி ரிட்டன் ஆஃப் த டிராகன்' படத்திற்கு பிறகு அமெரிக்க இளையர்களும் புரூஸ் லீயின் வெறித்தனமான விசிறிகளாயினர். அந்தப்படம் தந்த வெற்றிக்களிப்பில் 'கேம் ஆப் டெத்' என்ற தனது அடுத்தப்படத்துக்கான வேலையை ஆரம்பித்தார் புரூஸ் லீ. அவரது பிரபலத்தையும் வசீகரத்தையும் உணர்ந்துகொண்ட ஹொலிவுட்

(22ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் (NCRCS)

2015 சிறுபோக பயிர்ச்செய்கை கடன்களை
பெறுவதற்கு இன்றே விண்ணப்பியுங்கள்

கடன் பெறுவதற்கு தகுதியான பயிர்கள்

- நெல்
- மிளகாய்
- வெங்காயம்
- தானிய வகைகள்
- நிலக்கடலை, எள்ளு, சூரியகாந்தி
- கிழங்கு வகைகள்
- மரக்கறிகள்
- இஞ்சி
- மேற்குறிப்பிட்ட பயிர்களின் நாற்றுமேடைகள்

வட்டி வீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது

தற்பொழுது வருடத்திற்கு 7% மட்டுமே

கடன் வழங்கும் வங்கிகள்

- இலங்கை வங்கி
- மக்கள் வங்கி
- பிரதேச அபிவிருத்தி வங்கி
- ஹற்றன் நஷனல் வங்கி
- கொமர்ஷல் வங்கி
- யூனியன் வங்கி
- செலான் வங்கி
- சம்பத் வங்கி
- லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி
- சனச அபிவிருத்தி வங்கி
- தேசிய அபிவிருத்தி வங்கி
- டீ.எப்.சீ.சீ வங்கி

மேலதிக விபரங்களுக்கு

மேற்கூறப்பட்ட வங்கிகளின் கிளைகளை அல்லது இலங்கை மத்திய வங்கியின் மாகாண அலுவலகங்களை அல்லது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களினூடாக இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினை தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி இலக்கம் : 011 2477447, 011 2477452, 011 2398748

பிரதேச அபிவிருத்தி திணைக்களம் - இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 175 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2015 மே 06ஆம் திகதி வெளியிடப்பட்டது.